Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் - 32 | விலை 30 செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :244 ஆடி 14ஆம் நாள் வியாழக்கிழமை 30 ஜூலை 2020 வள்ளுவர் ஆண்டு 2051

# உதயன் மீது வெறியாட்டம்; நடத்தியது ஈ.பி.டி.பியினரே!

## தானே சாட்சி என்று உண்மையை போட்டுடைத்த முன்னாள் உறுப்பினர்





யாழ்ப்பாணம், ஜூலை 30

உதயன் பத்திரிகை மீதான படுகொலைத் தாக்குலை ஈ.பி.டி.பியினரே மேற்கொண்டனர். கொலைகள், கடத்தல்கள் அனைத்தையும் செய்தவர்கள் ஈ.பி.டி.பியினர்தான். அவர்கள் எல்லாவற்றையும் செய்துவிட்டு பழியை விடுதலைப் புலிகள் மீதும், இராணுவத்தினர் மீதும் போட்டனர். தினமுரசு பத்திரிகையின் ஆசிரியராக இருந்த அற்புதனை (ரமேஸ்) விடுதலைப் புலிகள் கொலை செய்யவில்லை. ஈ.பி.டி.பியினரே கொலை செய்தனர் இவ்வாறு ஈ.பி.டி.பி. அமைப்பின் நீண்டகால உறுப்பினர் என்று அறிமுகப்படுத்திக் கொண்ட சுப்பையா பொன்னையா என்பவர் தெரிவித்தார். இவர் தனது இயக்கப் பெயர் சதா என்றும் குறிப்பிட்டார்.

31 ➤

# ஹெரோய்ன்: மூவர் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 30

ஹெரோய்னை உடமையில் வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் மூவர் நேற்றுக் கைது செய்யப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்ட மூவரும் 25 வயதுக்கு உட்பட்டவர்கள். காங்கேசன்துறைப் பொலிஸார் தெல்லிப்பழைப் பகுதியில் சுற்றுக்காவலில் ஈடுபட்டு இருந்த போதே மேற்படி மூவரும் கைது செய்யப்பட்டனர். அவர்கள் மேலதிக நடவடிக்கைக்காக தெல்லிப்பழை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். (ம-25)

# 33 கிலோ கஞ்சா: ஒருவர் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 30

யாழ்ப்பாணம் ஐந்து சந்திப் பகுதியில் 33 கிலோ கஞ்சாவுடன் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

பாவனையில் இல்லாத கட்டடத்தில் விற்பனைக்காக மறைத்து வைக்கப்பட்ட நிலையிலேயே மேற்படி கஞ்சாப் பொதிகள் மீட்கப்பட்டன. கைது செய்யப்பட்டவர் இன்று நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளார். (ம-20-26)

# கந்தகாட்டில் கொரோனா கட்டுப்பாட்டில்!

கொழும்பு, ஜூலை 30

கந்தகாடு மறுவாழ்வு மத்திய நிலையத்தில் கொரோனா பெருந்தொற்று முழுமையாக கட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது என்று இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் சந்தன விக்கிரமசிங்க தெரிவித்தார்.

வெலிக்கடை சிறைச்சாலையில் இனங்காணப்பட்ட கொரோனாத் தொற்றாளரைத் தொடர்ந்து கந்தகாடு மறுவாழ்வு நிலையத்தில், அதிகமானவர்கள் கொரோனாத் தொற்றுக்குள்ளான நிலையில் இனங்காணப்பட்டனர். இதனையடுத்து அவர்களுடன் தொடர்பினை பேணியவர்கள் உள்ளடங்கலாக இதுவரை 532 பேருக்கு

30 ➤

# பிரதேச செயலாளர் ஒருவருக்கு எதிராக கூட்டமைப்பு நடவடிக்கை

## தேசியக் கட்சி வேட்பாளருக்கு வாக்களிக்கும்படி கோரினாரா?

கொழும்பு, ஜூலை 30

நடந்து முடிந்த தபால் வாக்களிப்பில் தேசியக் கட்சி ஒன்றின் வேட்பாளருக்கு வாக்களிக்கும்படி உத்தியோகத்தர்களை வற்புறுத்திய பிரதேச செயலர் குறித்து முறையிடதமிழ்த்

31 ➤

# இராணுவ மயமாக்கலை நோக்கி இலங்கை அரசு

## *நிலைமை படுமோசமாகச் செல்கிறது என மனித உரிமை அமைப்புகள் எச்சரிக்கை*

கொழும்பு, ஜூலை 30

இலங்கை அரசு இராணுவ மயமாக்கலை நோக்கிப் பயணித்துக்கொண்டிருப்பதற்கான சமிக்ஞைகள் வெளிப்படையாகத் தென்படுகின்றன என்று 10 சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளன. சட்டத்தரணிகள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், மனித உரிமை ஆர்வலர்கள் மற்றும் ஊடக

30 ➤

# நல்லாட்சி வந்தால் நாசமடையும் நாடு

## அடித்துக் கூறுகின்றார் மஹிந்த

கொழும்பு, ஜூலை 30

'நல்லாட்சி அரசு மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றினால் தேசிய சொத்துக்கள் எவையும் மிஞ்சாது. நாடு நாசமடைந்தே போகும்' இவ்வாறு பொதுமக்கள் முன்னணியின் தலைவரான பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று தொழிற்சங்கங்களுடன் நடைபெற்ற சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'தற்போது நாட்டில் கொரோனா வைரஸ் பரவ

31 ➤

# வாக்காளர்களுக்கு வழங்க 'மா' பொதி

## *முல்லைத்தீவில் மடக்கப்பட்டது*

முல்லைத்தீவு, ஜூலை 30

சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் சார்பில் வன்னித் தேர்தல் தொகுதியில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவரின் ஆதரவாளரின் வீட்டில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த கோதுமை மாப் பொதிகளுக்கு மாவட்ட தேர்தல்கள் திணைக்கள அதிகாரிகள் சீல் வைத்துள்ளனர்.

30 ➤

# சுழற்சிமுறை அடிப்படையில் மாணவர்களுக்கு கற்பித்தல்!

கொழும்பு, ஜூலை 30

ஓகஸ்ட் 10ஆம் திகதி முதல் சுழற்சிமுறை அடிப்படையில் மாணவர்களைப் பாடசாலைக்கு அழைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

200 மாணவர்களுக்கும் அதிகமான மாணவர்கள் கற்கும் ஆரம்பப் பிரிவு பாடசாலைகளில், திங்கட்கிழமை தரம் 1 மற்றும் 5, செவ்வாய்க்கிழமை தரம் 2

30 ➤




# சர்வதேசத்துடன் சவால் விட்டால் அழிவுதான் பரிசாகக் கிடைக்கும்

## ராஜபக்ஷக்களுக்கு ரணில் கடும் எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 30

'சர்வதேசத்தைப் பகைத்துக்கொண்டு நாம் எதனையும் செய்ய முடியாது. உள்நாட்டுப் பிரச்சினைகளைத் தீர்க்காவிட்டால்இறுதியில் சர்வதேசம்தான் தலையிடும். அது உலக நியதி. எனவே,

30 ➤




மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# நிபந்தனைகளைக் கண்டுகொள்ளாமல் கடன் பெறுகின்றது தற்போதைய அரசு!

*அகிலவிராஜ் குற்றச்சாட்டு*



**கொழும்பு, ஜூலை 30**

**இந்தியா, சீனா உள்ளடங்கலாக எந்த நாடுகளிடம் கடன்களைப் பெற்றாலும் அவற்றுக்காக விதிக்கப்படுகின்ற நிபந்தனைகள் தொடர்பில் சிறப்புக் கவனம் செலுத்தப்பட வேண்டும். அத்தகைய நிபந்தனைகளையும் வட்டி வீதங்களையும் கருத்திற் கொண்டே நாம் ஆட்சியிலிருந்தபோது கடன்களைப் பெற்றோம். அந்த வகையில் வெளிநாடுகளிடமிருந்து பெறப்படும் கடன்களைப் பொறுத்தவரையில் தற்போதைய அரசின் செயற்பாடுகள் சரியானவை என்று நாம் கருதவில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.**

இலங்கையின் வெளிநாட்டு நாணய ஒதுக்கைப் பாதுகாப்பதற்காக இந்திய ரிசேர்வ் வங்கியினால் வழங்கப்பட்டுள்ள 400 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு மேலதிகமாக இருதரப்பு பரஸ்பர பரிமாற்றல் உடன்படிக்கையின் கீழ் மேலும் ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்களைப் பெற்றுக்கொள்வதற்கான பேச்சில் ஈடுபட்டுவருவதாக மத்திய வங்கி தெரிவித்திருக்கிறது.

கொரோனா வைரஸ் பரவல் காரணமாகப் பாதிப்படைந்திருக்கும் இலங்கையின் வெளிநாட்டு நாணய ஒதுக்கைச் சீர்செய்வதற்காக இந்தியாவிடமிருந்து 1.1 பில்லியன் அமெரிக்க டொலர்களை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியிடம் கோரியிருந்தார். அதேபோன்று மறுபுறம் சீனாவிடமும் இலங்கை பல்வேறு கடனுதவிகளைப் பெற்றிருப்பதுடன், அண்மைக்காலத்தில் கொரோனா வைரஸ் பரவலுக்கு எதிரான தடுப்பு நடவடிக்கைகளில் இலங்கைக்கு உதவும் வகையில் சீனா பல்வேறு மருத்துவப் பாதுகாப்பு உபகரணங்களை நன்கொடையாக வழங்கிவந்தது.

இத்தகையதொரு பின்னணியில் இலங்கை அரசு இந்தியா மற்றும் சீனாவிடமிருந்து கடனுதவிகளைப் பெறுவதனால் நாடு பெரும் கடன்பொறிக்குள் சிக்கும் நிலையேற்படும் என்றும், அவற்றை மீளச்செலுத்துகையில் பொருளாதார ரீதியில் நெருக்கடி நிலையை எதிர்கொள்ள வேண்டியேற்படும் என்றும் எதிர்த்தரப்புக்கள் எச்சரித்து வருகின்றன. இதுகுறித்து ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாடு என்னவென்று வினவிய போதே அகிலவிராஜ் காரியவசம் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

எந்த நாடுகளிடமிருந்து கடன்களைப் பெற்றாலும், அவற்றைப் பெறுவதற்கான நிபந்தனைகள் மிகவும் முக்கியமானவையாகும். அந்த நிபந்தனைகள் நாட்டிற்கு நன்மையானவையா அல்லது பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியவையா என்பது குறித்து விசேட அவதானம் செலுத்தப்பட வேண்டும். அந்தவகையில் எமது அரசால் பெரும்பாலும் நாட்டிற்குப் பாதிப்பை ஏற்படுத்தாத கடன்களையே பெற்றிருக்கின்றோம். அதேபோன்று அந்தக் கடன்களைப் பெறுவதற்கான நிபந்தனைகள் மற்றும் செலுத்த வேண்டிய வட்டிவீதம் தொடர்பிலும் அவதானம் செலுத்துவோம்.

இந்நிலையில் கடன் பெறுவனவுகளைப் பொறுத்தமட்டில் தற்போதைய அரசாங்கத்தின் செயற்பாடுகள் சரியானவையாக எமக்குத் தோன்றவில்லை. சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி போன்றவற்றிடம் கடனுதவிகள் அல்லது நிவாரண உதவிகளைப் பெறமுடியும். எனினும் தற்போதைய அரசாங்கத்திற்கு அத்தகைய கடன்களைப் பெறக்கூடிய வாய்ப்பு இல்லையென்றே தோன்றுகிறது என்றார். (ம)

# வாக்களிப்பு நிலையத்தில் ஆளடையாளம் கட்டாயம்!

கொழும்பு, ஜூலை 30

எதிர்வரும் பொதுத் தேர்தலுக்காக வாக்களிக்கச் செல்லும் அனைத்து வாக்காளர்களும் வாக்களிப்பு நிலையத்தில் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துதல் கட்டாயமாக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

இதேவேளை வெளிநாடுகளில் இருந்து வருகை தந்தவர்கள் வாக்களிக்கச்செல்லும் போது கடவுச்சீட்டை எடுத்துவரும் தேவைப்பாடு உள்ளதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# இலஞ்சம் அதிகரிப்பு

கொழும்பு, ஜூலை 30

அரச அதிகாரிகள் இலஞ்சம் பெறும் வீதம், கடந்த ஆண்டை விட இந்த ஆண்டில் அதிகரித்துள்ளதாக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் முன்னெடுக்கப்பட்ட 17 சுற்றிவளைப்புகளில் 21 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பத்மினி வீரசூரிய தெரிவித்துள்ளார். (அ)

# கொரோனா பேரலை விரைவில் தாக்கும்!

*உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை*

World Health Organization

ஜெனீவா, ஜூலை 30

உலக நாடுகள் தற்போது எதிர்கொண்டிருப்பது கொரோனாவின் முதல் அலைதான். ஆனால் மிகப் பெரிய கொரோனா அலை இனிமேல்தான் உலகைத்தாக்கும் என்று உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

உலக சுகாதார அமைப்பின் அதிகாரியான மார்க்ரெட் ஹாரிஸ் ஜெனிவாவில் நேற்றுமுன்தினம் நடத்திய ஊடக சந்திப்பில் மேலும் தெரிவித்ததாவது:

'உலக நாடுகள் அனைத்தும் முதற்கட்ட கொரோனா அலையில்தான் உள்ளன. இன்னொரு மிகப் பெரிய அலையாக கொரோனா விரைவில் மாற்றம் அடையும். கொரோனா பாதிப்பு என்பது மேலும் அதிகரிக்கும். இது ஒன்றும் பருவகாலத் தொற்றுநோய் அல்ல. அமெரிக்காவின் கோடை காலத்தில் கொரோனா பாதிப்பு எண்ணிக்கை பலமடங்கு அதிகரிக்கும்.

கொரோனா வைரஸ் என்பதை அனைத்து காலநிலைகளையும் எதிர்கொள்ளக் கூடியதாக இருத்தல் வேண்டும். கொரோனாவை கட்டுப்படுத்த சகலவிதமான பாதுகாப்பு நடவடிக்கைகளையும் பின்பற்ற வேண்டியது அவசியம்' என்றுள்ளார். (ம-அ)

# தூக்கில் தொங்கி ஒருவர் உயிரிழப்பு

சாவகச்சேரி, ஜூலை 30

நுணாவில் பகுதியில் வசிக்கும் 35 வயதுடைய ஒருவர் தவறான முடிவெடுத்து தூக்கில்தொங்கி உயிரிழந்தார்.

இவரின் இறப்புத் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட சாவகச்சேரிப் பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்துள்ளனர். அறிக்கையினைப் பார்வையிட்ட நீதிவான் பிரதேச திடீர் இறப்பு விசாரணை அதிகாரி திருமதி சி.தவமலர் மூலம் விசாரணைகளை மேற்கொண்டு நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்யுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (அ-9)

# சங்கிலி அபகரிப்பு



சாவகச்சேரி, ஜூலை 30

வீதியில் சென்ற இளைஞரை வழிமறித்துத் தாக்கிய சிலர், அவர் அணிந்திருந்த தங்கிச் சங்கிலியையும் அபகரித்துக் கொண்டு தப்பியோடியுள்ளனர். இந்தச் சம்பவம் நேற்றுப் புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் சாவகச்சேரி பெருங்குளம் சந்தியில் இடம்பெற்றுள்ளது. தாக்குதலுக்கு இலக்கான இளைஞன் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். தாக்குதலுக்கு உள்ளான இளைஞரிடம் மருத்துவமனையில் வைத்து சாவகச்சேரிப் பொலிஸார் வாக்குமூலத்தையும், முறைப்பாட்டையும் பெற்றுள்ளனர். (அ-9)

# 165 பேர் பேருக்கு நேற்று தனிமைப்படுத்தல் நீக்கம்!


வவுனியா, ஜூலை 30

வெளிநாடுகளில் இருந்து இலங்கை திரும்பிய நிலையில் வவுனியா வேலங்குளம் தனிமைப்படுத்தல் முகாமில் தங்க வைக்கப்பட்டிருந்த 165 பேர் நேற்று விடுவிக்கப்பட்டனர்.

அவர்கள் அனைவரும் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்படவில்லை என்று உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே தமது சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். (அ-110)

# நாடாளுமன்றத் தேர்தல் - 2020


## யாழ்ப்பாணம் - கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்



## சர்வதேச அரசியல் சதுரங்கமும் தமிழர்களின் தலைவிதியும்!

➤ சர்வதேச ஆதிக்க சக்திகளின் இலங்கை மீதான ஆதிக்கப் போட்டியின் சதுரங்க விளையாட்டின் காய் நகர்த்தலுக்கு பலியாகியது இலங்கை வாழ் மக்கள் என்பது தெளிவு. ஏற்கனவே இலங்கையில் தீர்க்கப்படாதுள்ள சிறுபான்மை தமிழர்களின் அரசியல் உரிமை பிரச்சினையை கையிலெடுத்து தமது நலன்களுக்காக பயன்படுத்தினர் மேலும் பயன்படுத்துவார்கள் என்பதனை எமது தமிழ் அரசியல்வாதிகள் புரிந்துகொள்ளவில்லையா?

➤ 74% சிங்களப் பெரும்பான்மையினம் இருக்கும் எம் நாட்டில் தமிழர்கள் விரும்பினாலும் சரி விரும்பாவிட்டாலும் சரி சிங்கள ஜனாதிபதியின் ஆட்சியில்தான் எந்தக் காலத்திலும் இலங்கை அரசாங்கம் இயங்கும் என்ற உண்மை யதார்த்தத்தை மக்களாகிய நாங்கள் ஒவ்வொருவரும் புரிந்துகொள்ள வேண்டும்.



- காணாமற்போனவர்களை 60 நாள்களில் கண்டுபிடிப்பதற்குரிய வழிமுறைகளை ஆராய்ந்து. அதற்கொரு முடிவை ஏற்படுத்தி. அந்தக் குடும்பத்தின் பிரச்சினைகளைக் கண்டறிந்து. அவர்களுக் கேற்ற தேவைகளைப் பூர்த்தி செய்தல்.
- பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு வாழ்வாதாரத்துக்கும் கல்விச் செலவுக்கும் மாதாந்தம் 40 ஆயிரம் ரூபா பணத்தை வட்டியில்லாமல் வழங்கி. 10 – 20 வருட அடிப்படையில் அவர்க ளுடைய பிள்ளைகள் வளர்ந்த பின்னர் மீளச் செலுத்துவதற்குரிய திட்டங்களை பரிந்துரைத்தல்.
- சப்த தீவக பூமிகளை அபிவிருத்தி செய்வதன்மூலம் மக்களின் காணிகளின் பெறுமதி பல லட்சம் ரூபா தீவகத்தில் உள்ள காணிகளின் மிகப் பெரிய அளவிலான விலை அதிகரிக்கும் என்பதை உறுதியாகக் கூறுகின்றேன்.
- தமிழீழ வைப்பகத்தில் அடகு வைத்த தங்க நகைகளை மீட்பதற்கு அல்லது நட்ட ஈடு வழங்கு வதற்கு உரிய நடவடிக்கை எடுத்தல்.
- 5 இலட்சத்துக்கு உட்பட்ட நுண்கடன்களை இல்லாது ஒழித்தல்.

மேலே கூறப்பட்ட சகல திட்டங்களையும் நடைமுறைப்படுத்துவதற்கு எங்கள் கை சின்னத்துக்கு வாக்களிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**கை சின்னத்துக்கும் அங்கஜன் இராமநாதன் அவர்களின் இலக்கம் 1 இற்கும் எனது வெற்றி இலக்கமாகிய இலக்கம் 5 இற்கும் வாக்களித்து உங்கள் வெற்றியை நிலைநாட்டுங்கள்!**

**ஆளும் கட்சியும் அடுத்த ஐந்தாண்டுக்கு ஆட்சியில் இருக்கப்போகும் கட்சியான எங்களுக்கு வாக்களிப்பதன் மூலம் எமது மாவட்டத்தின் பாரிய அபிவிருத்திக்கும் உரிமைகளுக்கும் வித்திடுங்கள்.**

**தமிழ்த் தேசியமும் தமிழ்த் தாயும் வாழ்க.**

**“ உங்கள் வாக்கு உங்கள் உரிமை சரியான முறையில் வாக்களியுங்கள்! ”**

# பரநிருபசிங்கம் வரதராஜசிங்கம் (விண்ணன்)

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி

facebook.com/vinnan05

# வன்னித் தேர்தல் மாவட்டத்தில் வாக்குகள் எண்ண 61 நிலையங்கள்

## பாதுகாப்புக் கடமையில் 4,200 பொலிஸார்

**வவுனியா, ஜூலை 30**

**நாடாளுமன்றத் தேர்தலின்போது வன்னித் தேர்தல் மாவட்டத்தில் வாக்குகள் எண்ணுவதற்கென 61 நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன. 4 ஆயிரத்து 200 பொலிஸார் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப்படவுள்ளனர் என்று வவுனியா மாவட்டச் செயலரும் தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலருமான சமன் பந்துலசேன தெரிவித்தார்.**

வவுனியா மாவட்டச் செயலகத்தில் நேற்று மதியம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

வன்னியில் 95 வீதமான தபால்மூல வாக்குகள் அளிக்கப்பட்டுள்ளன. இதுவரை 12ஆயிரத்து 480 பேர் தமது வாக்குகளைச் செலுத்தியுள்ளனர்.

வன்னியில் இடம்பெயர்ந்த வாக்காளர்களாக 6ஆயிரத்து 278 பேர் பதிவு செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் 5ஆயிரத்து 707 பேர் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கின்றனர். அவர்களுக்காக 25 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இந்த இடங்களில் வாக்களிப்பின் பின்னர் அனைத்து வாக்குப் பெட்டிகளையும் பாதுகாப்பான முறையில் வவுனியா மாவட்டச் செயலகத்துக்கு எடுத்துவருவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதுவரையில் 78 சிறிய் தேர்தல் முறைப்பாடுகளே பதிவாகியுள்ளன.

பெரிய வன்முறைச் சம்பவங்கள் பதிவாகவில்லை.

வவுனியாவில் மாத்திரம் ஆயிரத்து 500க்கும் மேற்பட்ட அரச அலுவலர்கள் தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

கடந்த தேர்தல்களில் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலருக்குக் கிடைக்கப்பெற்ற பெறுபேறுகளின் அடிப்படையில், முடிவுகளை அறிவித்தோம். இந்த முறை வாக்கெண்ணல் செயற்பாடுகளில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. மோசடிகள் இடம்பெறாதவகையிலே இந்தச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அந்தவகையில் வவுனியா மாவட்டத்தில் 18 வாக்கெண்ணும் நிலையங்களும் மன்னாரில் 15 வாக்கெண்ணும் நிலையங்களும் முல்லைத்தீவில் 14 வாக்கெண்ணும் நிலையங்களும், 13 தபால் வாக்கெண்ணும் நிலையங்களும் இடம்பெயர்ந்தவர்களின் வாக்குகள் எண்ணுவதற்கு ஒரு நிலையமுமாக மொத்தம் 61 வாக்கெண்ணும் நிலையங்கள் வன்னியில் அமைக்கப்படும்.

அத்துடன் ஒரு வாக்காளர் எந்தப் பிரதேசத்தில் இருந்தாலும் அங்கிருந்தே வாக்களிப்பதற்கு உரிய முறையில் விண்ணப்பங்களை மேற்கொண்டால் தேர்தல்ஆணைக்குழு அவரது பாதுகாப்பு விடயத்தைக் கருத்திற்கொண்டு வாக்களிப்பதற்கான உரிமையை ஏற்றுக் கொள்ளும்.

அதற்கமையவே வன்னியிலிருந்து புத்தளம் பகுதிக்கு இடம்பெயர்ந்தவர்கள் வாக்களிப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. தேர்தல் ஆணைக்குழுவின் பரிந்துரையின் பிரகாரம் அந்தக் கட்டளை எமக்குப் பிறப்பிக்கப்பட்டுள்ளது. என்றார். (கு-110)

# பொலிஸைக் கண்டு வேகமெடுத்த 'பைக்' டிப்பருடன் மோதுண்டு விபத்து

## இருவர் மருத்துவமனையில்:

சாவகச்சேரி, ஜூலை 30

பொலிஸ் வாகனத்தைக் கண்டதும் மோட்டார் சைக்கிளில் வேகமாகச் சென்றவர்கள் எதிரே வந்துகொண்டிருந்த டிப்பருடன் மோதுண்டு காயமடைந்தனர்.

வரணி மருத்துவமனை முன்பாக நேற்றுப் புதன்கிழமை பிற்பகல் 3 மணியளவில் இடம்பெற்ற இந்த விபத்தில், காயப்பட்டவர்கள் தலைக் கவசம் அணிந்திருக்கவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அவர்கள் வரணி பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக மந்திகை ஆதார மருத்துவமனைக்கு மாற்றப்பட்டு பின்னர் யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

தலைக்கவசம் அணியாமல் கொடிகாமம் பருத்தித்துறை வீதியில் அவர்கள் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்தனர் என்றும் வரணி பாடசாலைக்கு அருகிலுள்ள வீதியால் பொலிஸ் வாகனத்தைக் கண்டதும் மோட்டார்சைக்கிளை வேகமாகச் செலுத்தியபோது டிப்பருடன் மோதி விபத்து இடம்பெற்றது என்றும் தெரிவிக்கப்பட்டது.

இடைக்குறிச்சி வரணியைச் சேர்ந்த பிரான்சிஸ் சைனிஸ் (வயது 26), யோகேந்திரன் கோகுலன் (வயது - 26) ஆகியோரே காயமடைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (கு-9,159)



4

X

சபையில்
சரவணபவன்

நாட்டில் தேர்தல் காய்ச்சல் உச்சக்கட்டத்தை அடைந்துள்ளது. காலி முதல் காங்கேசன்துறை வரை இந்தக் காய்ச்சல் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கின்றது. இன்னும் எட்டு நாட்களில் இந்த காய்ச்சல் யார் யாரைத் தாக்கி உள்ளது. யார் யார் விடுதலைபெற்று ஆரோக்கியமாக வீடு திரும்பவிட்டது என்பது தெரிந்துவிடும்.

நாடாளுமன்ற தேர்தல் அகில இலங்கை ரீதியாக எல்லா இடங்களிலும் தான் நடைபெறப் போகின்றது. ஆனால் தென்பகுதி சிங்களவர்கள் மட்டுமல்ல சர்வதேசமே உற்று நோக்கிக் கொண்டிருப்பது வடக்கு கிழக்கு மாகாணங்களில் விசேடமாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களைத்தான். ஜனாதிபதி கோத்தபாய முதல் அவரது அண்ணன் மகிந்த ராஜபக்ஷ குடும்பம், இனவாதத்தின் முழு உருவமான விமல் வீரவன்ச மற்றும் பேரினவாத தேரர்களும் தமிழ் தேசிய கூட்டமைப்பை எப்படியாவது அழித்து விட வேண்டும் என கங்கணம் கட்டிக்கொண்டு செயல்படுகின்றனர். புலிகளின் மறு அவதாரம்தான் தமிழ் தேசியக் கூட்டமைப்பு. இவர்கள் புலிகளை விட ஆபத்தானவர்கள். இவர்களைத் தலை எடுக்க விடக்கூடாது. வெளிநாடுகளில் இருக்கும் டயஸ் பேறாக்கள் அங்கிருந்து இங்கே புலிகளை வளர்க்கின்றனர். அவர்களின் தூண்டுதலின் பேரிலேயே சமஷ்டியைக் கேட்கின்றனர். ஒரு போதும் தலை தூக்க விடக் கூடாது என்று தீவிர பிரசாரம் செய்கின்றனர்.

நாட்டில் அவர்கள் செய்யும் இனவாதப் பிரசாரங்களை முன்னெடுக்க வடக்கில் சில முகவர்களையும் கைக்கூலிகளையும் களம் இறக்கி உள்ளனர். இவர்கள் வெற்றி பெறுகின்றார்களோ இல்லையோ தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தோற்கடிக்க வேண்டும்என்பது தான் இவர்களுக்கு கோத்தபாய விதித்துள்ள நிபந்தனை.

தேசிய உணர்வும் தாய் மண்ணின் மேல் பாசமும் கொண்ட தன்மானத் தமிழர்கள் ஒன்றை நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும். அதாவது இந்த எட்டப்பர்களில் யாராவது ஒருவர் தெரிவுசெய்யப்பட்டு விட்டாலும் நாம் காலம் காலமாகப் போராடி வந்த தமிழ் தேசியம் பாரம்பரியம், சமஷ்டி முறைமை எல்லாம் குழி தோண்டிப் புதைக்கப்படும். தமிழ்த் தேசியம் கூட்டமைப்பு ஒன்று தான் தமிழ் தேசியம் சமஷ்டி என்று கூச்சல் போடுகின்றனர்.

ஆனால் வடபகுதி மக்கள் எங்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்து அனுப்பி இருக்கின்றார்கள் என தென்னிலங்கைக்கு மட்டுமல்ல சர்வதேசத்திற்கும் கொச்சைப்படுத்திக் காட்டி விடுவார்கள். இவர்களுக்கு அந்த வாய்ப்பை நாம் பெற்றுக் கொடுத்து விடக்கூடாது. இந்தக் கோடாரிக்காம்புகளை முளையிலேயே வெட்டி வீழ்த்தி விட வேண்டும். அதற்கான பலமும் தைரியமும் உங்கள் கைகளில் வாக்குச்சீட்டுகளாக ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்த ஆயுதத்தை நீங்கள் சரியாகப் பயன்படுத்தி நல்ல தீர்ப்பை வழங்க வேண்டும்.

1 2 3 4 5 6 7 8 9 10

இது ஒரு கட்டணம் செலுத்தப்பட்ட விளம்பரம்

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# கண்ணீர் விடும் கொலைகாரர்கள்

அண்மையில் குருநாகல் மாவட்டத்திலுள்ள தம்பதெனியாவில் இடம்பெற்ற பொதுசன முன்னணியின் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றிய பிரதமர் மகிந்த ராஜபக்ச 1980 ஆம் ஆண்டுப் காலப்பகுதியில் 60,000 க்கும் மேற்பட்ட சிங்கள இளைஞர், யுவதிகள் கொல்லப்பட்டனர் எனவும் அவர்களில் 4,210 பேர் குருநாகல் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் இனி அவ்வாறான நிலை ஏற்பட இடமளிக்கப் போவதில்லை எனவும் தெரிவித்துள்ளார். மேலும் அவர், முன்னர் விடுதலைப் புலிகள் யுத்தத்தினால் சாதிக்க முயன்றவற்றை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தேர்தல் மூலம் நிறைவேற்ற முயல்கின்றனர் எனவும் அவ்வகையில் நாட்டைப் பிளவுபடுத்துவதை தமது அரசாங்கம் அனுமதிக்கப் போவதில்லையெனவும் தெரிவித்துள்ளார்.

ஒரு அரசியல் தலைவர் தனது இனத்தைச் சேர்ந்த 60,000 இளைஞர், யுவதிகள் கொல்லப்பட்டமைக்காகக் கண்ணீர் விடுவதோ கதறி அழுவதோ இயல்பான விடயங்கள் தான், ஆனால் எப்படிக் கொல்லப்பட்டனர் என்பதை நினைவு படுத்திப் பார்க்கும்போது பிரதமரின் கண்ணீர் உண்மையானதா, அவருக்கு அப்படிக் கண்ணீர் விட உரிமையுண்டா என்ற கேள்விகள் எழுகின்றன. இந்த 60,000 இளைஞர் யுவதிகளையோ, குருநாகலைச் சேர்ந்த கொல்லப்பட்ட 4,210 பேரையோ விடுதலைப் புலிகள் தென்னிலங்கைக்கோ, குருநாகலுக்கோ தேடிச்சென்று கொலை செய்யவில்லை. அந்த இளைஞர்கள் ஆட்சியாளர்களால் பெருந்தொகையான ஊதியம் வழங்கப்பட்டும், பேரினவாத வெறியூட்டப்பட்டும் இராணுவத்தில் இணைக்கப்பட்டு தமிழ் மக்கள் மீது ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளையும் அடக்குமுறைகளையும் மேற்கொள்ள அனுப்பப்பட்ட போதே கொல்லப்பட்டவர்கள். அதே வேளையில் விடுதலைப் புலிகள் தமது தாயக மண்ணையும் தமிழ் மக்களையும் பாதுகாக்க ஆயுதப்படையினரின் அரச பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு எதிராக ஆயுதப் போராட்டத்தை நடத்தினர். ஆக்கிரமிப்பு இராணுவத்துக்கும், அவர்களின் ஆக்கிரமிப்புக்கும் எதிராகப் போராடிய புலிகளுக்குமிடையே இடம்பெற்ற போரில் இருதரப்பிலும் ஏராளமான படையினரும் போராளிகளும் கொல்லப்பட்டனர். அதே வேளையில் போரில் நேரடியாக ஈடுபடாத தமிழ்ப் பொதுமக்களும் பல்லாயிரக்கணக்கில் படையினரால் கொல்லப்பட்டனர்.

விடுதலைப் புலிகள் தமது மண்ணையும், தமது மக்களையும் பாதுகாக்க போராடி உயிர்த்தியாகம் செய்தனர். ஆனால் சிங்கள இளைஞர், யுவதியினர் அடக்குமுறை இராணுவமாக மாற்றப்பட்டு அநீதியான நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டு வடக்கு கிழக்கு மண்ணில் உயிரிழந்தனர்.

விடுதலைப் புலிகளுடனான போரில் அவர்கள் கொல்லப்பட்டாலும், அவர்கள் ஆக்கிரமிப்பு நடவடிக்கைக்காகவும் தமிழ் மக்கள் மீது இன ஒடுக்குமுறை நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் ஆட்சியாளர்களால் அனுப்பப்பட்டு அப்படியான அநீதியான நடவடிக்கைகளின் போதே உயிரிழந்தவர்கள். எனவே அவர்களைக் கொன்ற கொலையாளிகள் யாரெனில், அவர்களை இரத்தம் சிந்தும் கொலைக்களத்துக்கு தங்கள் அரச பயங்கரவாத நடவடிக்கைகளை நிறைவேற்ற அனுப்பிய மகிந்த, கோத்தபாய தரப்பினரே. அவர்களின் உயிரிழப்புக்கு காரணமானவர்களில் முக்கியமானவரான அன்றைய ஜனாதிபதியாக விளங்கிய மகிந்த ராஜபக்ச, அவர்களுக்காக இப்போது முதலைக் கண்ணீர் வடிக்கின்றார்.

ஆனால் அவர்களின் அமைச்சரவை உறுப்பினராக இருந்த டக்ளஸ் தேவானந்தாவின் அடியாட்களாலும் இராணுவப் புலனாய்வுப் பிரிவினராலும் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்ட காணாமலாக்கப்பட்ட அப்பாவித் தமிழ் இளைஞர், யுவதிகளுக்காகஎந்தவொரு ஆட்சியாளரும்கண்ணீர்விடவில்லை.

இன்னொரு புறம் விடுதலைப் புலிகள் ஆயுதம் மூலம் சாதிக்க முயன்றதை தேர்தல் மூலம் சாதிக்க முயல்கின்றனர் என்ற கருத்துரை சமஷ்டிக் கோரிக்கை ஆயுத வன்முறை மூலமும் இரத்தம் சிந்தும் நடவடிக்கை மூலமும் முறியடிக்கப்படும் என விடுக்கப்படும் எச்சரிக்கையாகும்.

கடந்த 30 வருட காலப்பகுதியில் தமிழர்கள் நாட்டைப் பிளவுபடுத்தப் போகின்றனர் எனக் குற்றஞ்சாட்டியே தமிழ் மக்களுக்கு எதிரான இனவழிப்புப் போரைக் கட்டவிழ்த்துவிட்டுப் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களையும், சிங்கள இளைஞர் யுவதிகளையும் மாறி மாறி ஆட்சிக்கு வந்த சிங்கள ஆட்சியாளர்கள் உயிர்ப்பலி எடுத்தனர் என்ற உண்மை புரிந்து கொள்ளப்பட வேண்டும்.

நாடுபிளவுபடுவதிலிருந்து காப்பாற்றப் போவதாக சொல்லிச் சொல்லியே தமிழ் மக்களையும் சிங்கள மக்களையும் பலியாடுகளாக்கும் மகிந்த, கோத்தபாய தரப்பினரை சிங்கள மக்கள் நம்பும் வரை இலங்கையில் இடம்பெற்றுவரும் பேரழிவை எவராலும் தடுக்கமுடியாது என்பதே உண்மையாகும். அவர்களின் பிரதிநிதிகளாகப் போட்டியிடும் வேட்பாளர்கள்நிராகரிக்கப்பட வேண்டுமென்பதற்கு வேறு காரணங்களும் தேவையா?

# மடுத்திருவிழா தொடர்பில் தேர்தலின் பின் தீர்மானம்

மன்னார்,ஜுலை 30

**மடுத்திருப்பதி ஆவணி மாத பெருவிழா தொடர்பான தீர்க்கமான முடிவு தேர்தலுக்குப் பின்னர் எடுக்கப்படும்.வழமையாக நடைபெறும் விழா காலத்துக்கேற்றவாறு இடம்பெறும் என்று கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.**



மன்னார் மறைமாவட்டத்திலுள்ள ஸ்தலமான மடுத்திருப்பதி ஆவணி மாதப் பெருவிழா தொடர்பாக, மன்னார் மாவட்டச் செயலகத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற கலந்துரையாடலில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகை, மன்னார் குரு முதல்வர் அருட்பணி அன்ரனி விக்ரர் சோசை அடிகளார், மடு பரிபாலகர் அருட்பணி பெப்பி சோசை அடிகளார், கிறிஸ்தவ மத அலுவலகத் திணைக்களத்தின் பதில் பணிப்பாளர் திருமதி சந்துரி பின்றோ, மன்னார் மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் த.வினோதன் மற்றும் மடு பாதுகாப்பு அதிகாரிகள், பொது சுகாதார அதிகாரிகள் உட்பட அத்தியாவசிய சேவைகள் தொடர்பான அதிகாரிகள் கலந்துரையாடலில் பங்கேற்றனர்.

கலந்துரையாடலில் மன்னார் ஆயர் தெரிவித்ததாவது:

சுகாதாரப் பணிப்புரைக்கு அமைவாக கடந்த ஆடி மாதப் பெருவிழாவை கொண்டாடினோம். மன்னாரில் சுகாதாரம் நல்ல நிலையில் தொடர்ந்தும் உள்ளது.

இதனால் கடந்த ஆடி மாத பெருவிழாவைப் போன்று ஆவணி மாதப் பெருவிழாவையும் கொண்டாடுவதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கின்றன.

இருந்தும் சுகாதார நலன்கருதி பெருவிழாவுக்கு இலட்சக்கணக்கில் வருவோரைக் குறைத்துள்ளோம். கடந்த ஆடிமாதப்பெருவிழாவில் மிகச் சொற்பப் பேரே கலந்து கொண்டனர்.

பெருவிழாத் திருப்பலியை வெளியில் வைக்கும் போது மடு ஆலய வளாகம் பரந்து இருப்பதால், பக்தர்கள் சுகாதார இடைவெளியைக் கவனத்தில் கொண்டு இருக்கக்கூடிய நிலை இருப்பதனால், கடந்த முறையைவிட இம்முறை சற்று அதிகம் பேர் கலந்து கொள்ள அனுமதி கிடைத்தால் நலமாக இருக்கும்.

கடந்தமுறை மடுத் திருப்பதியில் வரும் தங்குவதற்கு இட வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை. இருந்த போதும் வழமைபோன்று இங்கு கூடாரம் அமைத்து இருப்பதற்கான வசதிகளுடன் பலர் வந்திருந்தனர். இவர்கள் பலர் மரங்களுக்கு கீழேயும், தெருக்களிலும் தங்கியிருந்து சென்றதைக் காணக்கூடியதாக இருந்தது.

மடுத் திருப்பதியில் 350 வீடுகள் இருக்கின்றன. அதனால் மரங்களின்கீழ் இருப்பதை விட வீடுகளில் இவர்களைத் தங்கவைப்பது நலம் - என்றார்.

அதேவேளை விழா சம்பந்தமாக உடன் தீர்மானிக்க முடியாதநிலை இருப்பதால்,தேர்தல் முடிந்தபின் நிலைமையைக் கவனத்தில் கொண்டு அதற்குப் பின் கூட்டப்படும் கூட்டத்தில் இறுதி முடிவு எடுப்பது எனத் தீர்மானிக்கப்பட்டது.

கொடியேற்றம் எதிர்வரும் 6 ஆம் திகதி இடம்பெற்று வழமைபோன்று 15 ஆம் திகதி விழா கொண்டாடப்படும். நாட்டின் சுகாதாரம் மற்றும் நிலைமை சுமுகமாக இருக்கும் வேளையில் பக்தர்கள் இங்கு வந்து செல்லும் பட்சத்தில் கட்டாயம் ஒவ்வொருவரும் தங்களை அத்தாட்சிப்படுத்தக்கூடிய விதத்தில் வர வேண்டும்.

ஒவ்வொரு குடும்பத்தினரதும், ஒவ்வொருவரினதும் அடையாள அட்டைகள், தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கங்கள் பதிவுக்கு உட்படுத்தப்படும் என்றும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (சு-60)

# 5 இலட்சம் பேருக்கு வேலையில்லை

*புள்ளிவிவரத் திணைக்களம் தகவல்*

கொழும்பு,ஜுலை 30

இலங்கையில் 4 லட்சத்து 80 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் வேலையில்லாமல் உள்ளனர் என்று தொகை மதிப்பு மற்றும் புள்ளி விவரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதேவேளை கொவிட்19 தொற்றுநோயால் வேலையை இழந்த நபர்களின் எண்ணிக்கையை அறிய கணக்கெடுப்பும் நடத்தப்படவுள்ளது.

உற்பத்தி, வருமானம் மற்றும் கிருமிநாசினிகளுக்கான செலவுகள் மற்றும் பிற தொடர்புடைய செலவுகள், முச்சக்கர வண்டிகள் மற்றும் பிற வாகனங்கள் குறித்தும் தொகை மதிப்பு மற்றும் புள்ளி விவரத் திணைக்களம் கவனம் செலுத்தவுள்ளது.

அதற்கான கணக்கெடுப்பை எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 15 ஆம் திகதிக்குள் நடத்தி முடிக்க திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

செப்ரெம்பர் மாதத்துக்குள் அது பகிரங்கப்படுத்தப்படவும் உள்ளது.

2020 ஆம் ஆண்டுக்கான வேலையின்மை தொடர்பில் திணைக்களம் வெளியிட்டுள்ள ஆண்டறிக்கையில் இலங்கையில் தற்போது சுமார் 4 லட்சத்து 80 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் வேலையில்லாமல் உள்ளனர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (க)



# யாழ்.மருத்துவ நிபுணர் தம்புள்ளைக்கு மாற்றம்

யாழ்ப்பாணம்,ஜுலை 30

சுவாசநோய் தொடர்பான சிறப்பு மருத்துவ நிபுணர் ஜி.புண்ணியஜீவா தம்புள்ளை ஆதார மருத்துவமனைக்கு இடமாற்றப்பட்டுள்ளார்.

இவர் 2018 ஆம் தொடக்கம் யாழ். போதனா மருத்துவமனையில், தனது பதவிக் காலத்தில் குறிப்பாக கொவிட் 19 காலத்திலும் மிகச்சிறப்பாக பணியாற்றியுள்ளார்.

அவரது இடமாற்றம் தொடர்பில் முகநூலில் பதிவிட்டுள்ள யாழ்.போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி, மருத்துவமனை சமூகம்சார்பில் பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளார். (க)



# சைக்கிளை மோதிவிட்டு மதிலை இடித்த கார்

யாழ்ப்பாணம், ஜூலை 30
வேகமாகப் பயணித்த கார் எதிரே பயணித்த சைக்கிளை மோதியதோடு, சுமர் 25 அடி தூரத்துக்கு வீதியோர மதிலை இடித்துத் தரைமட்டமாக்கியுள்ளது என்று தெரிவிக்க ப்பட்டது.
இந்தச் சம்பவம் அராலி மேற்கில் நேற்று இடம்பெற்றது.
இதே இடத்தைச் சேர்ந்த வரதராசா நிதுசன் (வயது 19) என்பவரே விபத்தில் படுகாயமடைந்தார். அவர் அம்புலன்ஸ் மூலமாக யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.
காரின் சாரதியை வட்டுக்கோட்டைப் பொலிஸார் கைதுசெய்தனர். (கு-27)

# இலங்கைக் கிரிக்கெட் சபைக்கு புதிய உப தலைவர் நியமனம்

கொழும்பு, ஜூலை 30
இலங்கை கிரிக்கெட் சபையின் உப தலைவர் பதவிக்கு ஜயந்த தர்மதாச நியமிக்கப்பட்டுள்ளார்.
இதுவரை பதவியில் இருந்த கே.மதிவாணன் பதவி விலகியதைத் தொடர்ந்து ஜயந்த தர்மதாச இந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.
தற்போதைய நிர்வாகம் வெளிப்படைத்தன்மையுடன் செயற்படாததன் காரணமாக பதவியிலிருந்து விலகுகின்றேன் என்று கே.மதிவாணன் நேற்றைய ஊடக அறிக்கையில் தெரிவித்திருந்தார்.
இலங்கைக் கிரிக்கெட்டின் அரசமைப்புக்கு இணங்க, உப தலைவர்கள் இருவருக்கும் சம்பிரதாய பூர்வமாக சர்வதேச மற்றும் தேசிய கிரிக்கெட்டில் பொறுப்புகள் வழங்கப்பட்டிருந்தாலும் நிகழ்காலத்தில் தமக்கு எவ்வித பொறுப்புகளும் வழங்கப்படவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (தொடர்புடைய செய்தி 08ஆம் பக்கம்)
(கு)

# காலம்வரும்போது கூட்டமைப்பை போராளிகள் பொறுப்பேற்போம்

## தொடர்ந்தும் கூட்டமைப்பைப் பலப்படுத்துமாறு கோருகின்றது ஜனநாயகப் போராளிகள் கட்சி

**யாழ்ப்பாணம், ஜூலை 30**
**உரிய காலம் வரும்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை முன்னாள் போராளிகள் பொறுப்பேற்பார்கள். அதுவரைக்கும் அதற்குப் பின்னரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பலமடையவேண்டும். எனவே தமிழ் மக்கள் பொதுத் தேர்தலில் சிந்தித்து வாக்களிக்கவேண்டும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கே வாக்களிக்கவேண்டும்.**

இவ்வாறு தெரிவித்தார், ஜனநாயகப் போராளிகள் கட்சியின் ஊடகப் பேச்சாளர் க.துளசி.
யாழ்ப்பாணம் கல்வியங்காட்டில் நேற்றுமுன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
சி.வி.விக்னேஸ்வரனும் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் வேறு நிகழ்ச்சி நிரலில்தான் இயங்கிக்கொண்டிருக்கின்றார்கள். யார் தலைவராவது என்று அவர்களுக்குள்ளேயே போட்டி காணப்படுகின்றது. ஆனால், தலைவர் ஆகுவதற்கு சில தகுதிகள் உள்ளன.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உடைக்கவேண்டும் என்றும் மாற்றுத் தலைமை ஒன்றை உருவாக்க வேண்டும் என்று அரசு செயற்படுகின்றது. அதற்காகத்தான் சி.வி.விக்னேஸ்வரன் வெளியே வந்து செயற்பட்டுக்கொண்டிருக்கின்றார்.
உரிய காலம் வரும்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை முன்னாள் போராளிகள் பொறுப்பேற்பார்கள். அதில் எவ்வித சந்தேகமும் வேண்டாம். ஆனால், தமிழர்கள் தொடர்ந்து தோல்வியடைய முடியாது. இந்த விடயத்தில் தமிழ் மக்கள் கவனமாக முடிவெடுக்க வேண்டும். நாங்கள் இந்த மண்ணுக்காகப் போராடியவர்கள். நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் தமிழ் மக்களாகிய நீங்கள் ஒற்றுமையாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கே வாக்களியுங்கள். என்றார்.
(கு)

# வன்புணர்ந்தவருக்கு 18 வருடங்கள் கடூழியம்

## வவுனியா மேல்நீதிமன்று விதித்தது

வவுனியா, ஜூலை 30
பதின்ம வயதுச் சிறுமியான மகளை வன்புணர்வுக்குட்படுத்திய அவருடைய தந்தைக்கு வவுனியா மேல்நீதிமன்று நேற்று 18 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை வழங்கித் தீர்ப்பளித்தது.
2016ஆம் ஆண்டு பெப்ரவரி 28ஆம் திகதி அல்லது அதற்கு அண்மித்த நாளில் அவர் வன்புணர்வுக்குட்படுத்தியிருந்தார் என்று கண்ட நீதிமன்று, எதிரியான டீமன் சில்வாகே அன்ரன் சில்வா என்பவருக்கு மேற்குறித்த தண்டனையை வழங்கியது.
எதிரி வவுனியா அலகல்ல என்ற இடத்தைச் சேர்ந்தவர். வழக்கில் முதலாவது சாட்சியான பாதிக்கப்பட்ட சிறுமி தனது சாட்சியத்தில் தனக்கு தந்தையால் நடந்தவற்றை விவரித்தார். சிறுமியின் சாட்சியத்தை நிரூபிக்கும் வகையில் அவரது தாயாரின் சாட்சியமும் அமைந்தது.
அதன்படி மேற்படி தண்டனை விதிக்கப்பட்டது. தவிர, எதிரி 10 ஆயிரம் ரூபா தண்டப்பணம் செலுத்தவேண்டும் என்றும், அதைச் செலுத்தத் தவறின் 6 மாதங்கள் சாதாரண சிறைத் தண்டனையை அனுபவிக்க நேரிடும் என்றும் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு 2 லட்சம் ரூபா இழப்பீடு வழங்க வேண்டும் என்றும் தவறின் 2 வருடங்கள் சிறைத் தண்டனையை அனுபவிக்க நேரிடும் என்றும் தீர்ப்பில் நீதிமன்று குறிப்பிட்டது.
பிறிதொரு வழக்கில் சிறுமியை வன்புணர்ந்தவருக்கு இதே நீதிமன்று நேற்றுமுன்தினம் 12 வருடங்கள் கடூழியச் சிறைத்தண்டனை விதித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (கு)




மன்னார் மாதர் அபிவிருத்தி ஒன்றியத்தால் யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்தில் 'அவளுக்கு ஒரு வாக்கு நாடாளுமன்றத்தில் பெண் பிரநிதித்துவத்தை அதிகரிப்போம்' என்ற தொனிப்பொருளில் மக்கள் விழிப்புணர்வு நிகழ்வொன்று வீதிநாடகம் இடம்பெற்றது. (ம)

# தொல்பொருள் இடங்களைக் காக்க மற்றொரு ஆலோசனைக்குழு

கொழும்பு ஜூலை 30
இலங்கையில் தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைப் பாதுகாக்க தொல்பொருள் ஆலோசனைக் குழுவை பிரதமர் மஹிந்த ராஜபக்ச நியமித்துள்ளார்.
புதிதாக நியமி க்கப்பட்ட குறித்த ஆலோ சனைக் குழுவில் 20 உறுப்பினர்கள் அடங்குகின்றனர் என்று பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.
இதற்கென பிரதமரால் நியமிக்கப்படும் இரண்டாவது குழு இது என்பது குறிப்பிடத்தக்கது.
(கு)



# பெருந்திருவிழா

யாழ்ப்பாணம், ஜூலை 30

யாழ்ப்பாணம் வட்டு.கிழக்கு துறட்டிப் பனை அருள்மிகு முத்துமாரி அம்பாள் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா ஆரம்பமாகி நடைபெற்றுவருகிறது.

தொடர்ந்து நாளைமறுதினம் முதலாம் திகதி சனிக்கிழமை சப்பறத்திருவிழாவும், ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும்,திங்கட்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

திருவிழா சுகாதார சமூக இடைவெளிகளுக்கு அமைவாக நடைபெற்றுவருவதாக ஆலய பரிபாலன சபை தெரிவித்துள்ளது. (ஐ-63)

# இணையவழி ஆய்வரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை 30

யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கமும், தமிழ்நாடு அரச நிறுவனமாகிய மதுரை உலகத் தமிழ்ச்சங்கமும் இணைந்து சூம் (Zoom) செயலி வாயிலாக 20 நாள் இணையவழி ஆய்வரங்கை முன்னெடுத்து வருகின்றன.

இவ் ஆய்வரங்கின் நான்காம் நாளாகிய இன்று வியாழக்கிழமை மாலை 4 மணி தொடக்கம் 5 மணி வரை யப்பான் கக்சுயின் பல்கலைக்கழக,முன்னாள் ஆய்வுப் பேராசிரியர் முனைவர் மனோன்மணி சண்முகதாஸ் "இலங்கைத் தமிழ் இலக்கிய மொழிபெயர்ப்பு" என்ற பொருளில் ஆய்வுரை ஆற்றவுள்ளார். இணையவழியில் பங்கேற்க விரும்பும் ஆர்வலர்கள் பின்வரும் கடவுச் சொல்லைப் பயன்படுத்திக் கலந்து பயன்பெற முடியும் எனத் தமிழ்ச்சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

Zoom meeting ID : 477 159 8996
pass word : wts

# கூ. பணியாளரின் கொடுப்பனவுகள் தாமதமின்றி வழங்கப்படவேண்டும்

## கூட்டுறவுத் திணைக்களம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 30

கூட்டுறவுப் பணியாளர்களுக்கான கொடுப்பனவுகள் யாவும் கால தாமதமின்றி அந்தந்தக் காலப்பகுதியில் வழங்கி வைப்பதற்கு கூட்டுறவுச் சங்கங்கள் முன்வர வேண்டும் என்று வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம் தெரிவித்தது.

அந்தத் திணைக்களம் மேலும் தெரிவித்ததாவது:

கூட்டுறவுப் பணியாளர்கள் பாதிக்கப்படாத வண்ணம் வாழ்க்கைச் செலவுப்படி உட்பட ஏனைய கொடுப்பனவுகள் யாவும் உரிய முறையில் அந்தந்த காலப்பகுதியில் வழங்கி வைக்க வேண்டும். பணியாளர்களுக்கான சகல கொடுப்பனவுகளும் வழங்குவதில் சங்கங்கள் தாமதப்படுத்துவதாலும், காலத்தை இழுத்தடிப்பதாலும் பணியாளர்களே பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

இக்கொடுப்பனவு விடயங்களில் சங்க நிர்வாகங்கள் அதிக கவனம் செலுத்தவேண்டும். பணியாளர்களுக்கான கொடுப்பனவு விடயங்களில் அனேகமான கூட்டுறவுச் சங்கங்களில் இருந்து அதிக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

குறிப்பாக மாதாந்தம் வழங்கப்படும் பணியாளர்களுக்கான வாழ்க்கைச் செலவுப் படி அந்தந்த மாதங்களில் கணக்கிட்டு வழங்கப்பட வேண்டும். படிகள் யாவும் பணியாளர்களுக்கு மாதாந்தச் சம்பந்துடன் இணைந்து வழங்கவும் கூட்டுறவுச் சங்கங்கள் உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.

கூட்டுறவுப் பணியாளர்களுக்கான கொடுப்பனவுகளை வழங்குவதில் காலத்தை இழுத்தடித்து அவற்றை உரிய நேரத்தில் வழங்காததனால் பணித்தொகுதி பெரிதும் பாதிக்கப்படும். இப்படிப்பட்ட கொடுப்பனவு விடயங்களில் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் வருங்காலத்தில் அதிக கவனம் செலுத்தும்- என்றுள்ளது. (ஐ-17)



வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தன் ஆலய 5ஆம் நாள் மாலை நேர திருவிழாவின் பதிவு

இன்று ஆறாம் திருவிழா




### துயரம் தீர்ப்பாய் திருமுருகா!

நொந்தும் நலிந்தும் நாளும் வாடி
எந்தத் தீர்வும் எட்டா நிலையறி
கந்தா! கடம்பா! கலியுக வரதா!
வந்தெம் துயரம் தீர்த்திடுவாயே!

நாயன்மார்கட்டு ப.மகேந்திரதாசன்

### கந்தனுக்கு வணக்கங்கள்

விண்ணுயர்ந்த கோபுரங்கள் காட்சிதர
பெண்ணவர் இருவர் துணை சேர
கண்கவர் கோலத்துடன் பவனிவர
பண்பாடும் பக்தர்கள் புடைசூழ

எங்கும் எதிலும் புனிதம் திகழ
பொங்கும் மகிழ்வுடன் ஊரே திரள
பாங்கும் அழகும் கொண்டு மிளிர
ஓங்கும் மேன்மையும் அன்பும் ஒளிர
நல்கும் நல்லைக் கந்தனுக்கு
கோடி வணக்கங்கள்!

சிவரம்யா

### நல்லைக் கந்தனே !

ஆறுதல் அளித்திடுவாய் ஆறுமுகனே!
கண்ணீர் துடைப்பாய் கந்தனே!
முகவாட்டத்தை தீர்த்திடுவாய் முருகனே!
குறைகள் பல தீர்ப்பாய் குமரனே!
வடுக்கள் நிறைந்த மனதை களைவாய்
வள்ளி மணாளனே!
சஞ்சலங்கள் தவிர்ப்பாய் சரவணபவனே!
நல்லூர்ப் பதிவாழ் நம் நல்லைக்கந்தனே!

ஆரியாலையூர்
மிஷாந்தி செல்வராஜா



# தவறிழைப்போரைக் காப்பாற்ற அரசு சட்டத்தை திருத்த முயற்சி

## ருவான் விஜேவர்தன குற்றச்சாட்டு

**கொழும்பு, ஜூலை 30**

**தவறு செய்பவர்களைக் காப்பாற்றுவதற்காக நாட்டின் சட்டங்களைத் திருத்துவதற்கு அரசு முயற்சிக்கின்றது என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ருவான் விஜேவர்தன தெரிவித்துள்ளார்.**

ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டின் பொருளாதாரம் மற்றும் சட்டம் ஒழுங்கு நிலைமை தொடர்ந்து மோசமடைந்து வருகின்றது. சட்டத்தின் ஆட்சியை முற்றாகப் புறக்கணிக்கும் அரசின் நடவடிக்கைகள் காரணமாக மக்கள் கடும் அதிருப்தியடைந்துள்ளனர். முக்கிய அரச பிரமுகர் ஒருவர் சமீபத்தில் தேர்தல் சட்டங்களையும் போக்குவரத்து விதிகளையும் மீறி தேர்தல் பரப்புரையில் ஈடுபட்டு வருகின்றார்.

குருநாகலில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கட்டடத்தை தரைமட்டமாக்கிய நபர் தண்டிக்கப்படவில்லை. அத்துடன் தற்போதைய அரசு விவசாயிகளின் அவலநிலையைப் புறக்கணித்துள்ளது. என்றார்.

(த)

# உப தலைவர் பதவியை தூக்கிவீசிய மதிவாணன்

## இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின்

கொழும்பு, ஜூலை 30

இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் உப தலைவர் பதவியிலிருந்து விலகுவதாக கே. மதிவாணன் அறிவித்துள்ளார். கிரிக்கெட்டினூடாக தாம் அடைந்த உயர்மட்ட நற்பெயருக்கு, அந்தப்பதவியில் நீடிப்பதன் மூலமாக எதிர்காலத்தில் களங்கத்தை ஏற்படுத்திக் கொள்ள தான் தயாரில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தனது பதவி விலகல் தொடர்பிலான அறிவிப்பை ஊடக அறிக்கை மூலமாக நேற்று வெளியிட்டுள்ளார்.

தற்போதைய நிர்வாகம் வெளிப்படைத்தன்மையுடன் செயற்படாததன் காரணமாக இந்தத் தீர்மானத்தை எடுத்தேன் என்று அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை கிரிக்கெட்டின் விதிகளுக்கு இணங்க, உப தலைவர்கள் இருவருக்கும் சம்பிரதாயபூர்வமாக சர்வதேச மற்றும் தேசிய கிரிக்கெட்டில் பொறுப்புகள் வழங்கப்பட்டிருந்தாலும் நிகழ்காலத்தில் தமக்கு எவ்வித பொறுப்புகளும் வழங்கப்படவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இதனால் இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தில் தாம் தனிமைப்படுத்தப்பட்டிருப்பது போன்று உணர்ந்துள்ளேன் என்றும் மதிவாணன் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், செயற்குழுக் கூட்டங்கள், நிர்வாகக்குழுக் கூட்டங்கள், நிதி கொடுக்கல் வாங்கல் விடயங்கள் என்பன விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும் சந்தர்ப்பங்கள் உட்பட ஏனைய சந்தர்ப்பங்களில் தமது எதிர்ப்புகள் மற்றும் கருத்துகளுக்கு எவ்வித முக்கியத்துவமும் வழங்கப்படுவதில்லை என்றும் அவர் ஊடக அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

(த)

# ஈஸ்டர் தாக்குதலுக்கு பணம் செலவிட்டேனா?

## குற்றச்சாட்டை மறுக்கிறார் ரிஷாட்

கொழும்பு, ஜூலை 30

ஈஸ்டர் தாக்குதலுக்கு தனது பணம் செலவிடப்பட்டதாக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன் முற்றாக நிராகரித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டார் என்று தெரிவித்தே சில ஊடகங்கள் இன்றைய தினம் (நேற்று) இது குறித்த தகவல்களை வெளியிட்டுள்ளன. எனினும், இது அப்பட்டமான பொய். தேர்தல் நெருங்குகின்ற நேரம் பார்த்து இவ்வாறான ஒரு பொய் சொல்வதன் ஊடாக, தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்தை அரசுக்குப் பெற்றுக்கொடுப்பதற்கான சதியாகவே இதனைப் பார்க்கின்றேன்.

எனது ஒரு ரூபா பணத்தைக்கூட பயங்கரவாத செயற்பாடுகளுக்கு நான் பயன்படுத்தவில்லை. சஹ்ரான் உட்பட பயங்கரவாதத்துடன் தொடர்புடைய யாரையும் எனக்குத் தெரியாது. இன்சாப் இப்ராஹீம் அஹமட் என்ற வியாபாரியைத் தவிர வேறு ஒருவரையும் எனக்குத் தெரியாது.

இந்தநிலையில் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் இவ்வாறான ஒரு விடயத்தைத் தெரிவித்திருந்தால் அதனை அவர் உடனடியாக மீளப்பெற்று உண்மையை நாட்டுக்கு வெளிப்படுத்தவேண்டும்.

அவ்வாறு அவர் சொல்லாவிட்டால், ஒரு வாரத்துக்குள் அவர் அதனைச் செய்யாவிட்டால் அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. என்றார்.

(த)

# மன்னார் வாக்காளர்களுக்கு புத்தளத்தில் வாக்களிப்பு ஏன்?

## *சாள்ஸ் நிர்மலநாதன் ஆணைக்குழுவுக்கு கடிதம்*

மன்னார், ஜூலை 30

மன்னார் மாவட்டத்தில் வசிக்காது புத்தளம் மாவட்டத்தில் வசித்துவருகின்ற வாக்காளர்களின் பதிவுகள் நீக்கப்பட்டுள்ளன என்று மன்னார் மாவட்டத் தேர்தல் திணைக்களம் கடந்த வருடம் அறிவித்திருந்தது. அவ்வாறிருக்கையில், மன்னார் மாவட்ட வாக்காளர்கள் 5 ஆயிரத்து 707 பேர் புத்தளத்தில் வாக்களிப்பதற்கென்று என்ன அடிப்படையில் வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படுகின்றன? என்று கேள்வியெழுப்பியுள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற வேட்பாளர் சாள்ஸ் நிர்மலநாதன்.

இந்தச் சிக்கல் குறித்து தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் மஹிந்த தேசப்பிரியவுக்குக் கடிதம் அனுப்பியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் அரசியல்வாதிகளின் செயற்பாடுகளால் புத்தளம் மாவட்டத்தில் வசிக்கும் முஸ்லிம் மக்கள் மன்னார் மாவட்டத்திலும் வாக்களித்து வருகின்றனர் என்று தொடர்ச்சியாக சந்தேகம் நிலவி வருகின்றது. அது பற்றிக் கேள்வி எழுப்பப்பட்ட நிலையிலேயே மன்னார் மாவட்டத்தில் வசிக்காது புத்தளம் மாவட்டத்தில் வசித்துவருகின்ற வாக்காளர்களின் பதிவுகள் நீக்கப்பட்டுள்ளன என்று மன்னார் மாவட்ட தேர்தல் திணைக்களம் கடந்த வருடம் அறிவித்திருந்தது.

இந்தநிலையில், நாடாளுமன்ற வேட்பாளர் மேற்கண்டவாறு கேள்வியெழுப்பியுள்ளார்.

(த-56)



# காலையிலேயே வாக்கிடுங்கள் மாலையில் எதுவும் நடக்கலாம்

## பிரதமர் மஹிந்த ஆருடம்



**கொழும்பு, ஜூலை 30**

**நாடாளுமன்றத் தேர்தல் வாக்களிப்பு தினமன்று காலையிலேயே சென்று மக்கள் வாக்களிக்க வேண்டும் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

மாவத்தகமவில் நடத்திய மக்கள் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நாட்டில் தற்போது நிலவும் நிலைமைகளுக்கமைய மாலையில் என்ன நடக்குமோ என்று கூற முடியாது. பொருளாதார ரீதியில் நாங்கள் அனைத்து பகுதிகளிலும் மேல் நோக்கி வந்திருந்தோம். ஆனால் தற்போது நாடு வங்குரோத்து நிலையில் உள்ளது.

வாக்குகளை வீணடிக்க வேண்டாம். காலையிலேயே வாக்களிக்கும் நிலையங்களுக்குச் சென்று விடுங்கள். காலையிலேயே வாக்களித்து விட வேண்டும். என்றார். (எ)

# 31ஆம் திகதி முதல் விசேட ரயில் சேவை

கொழும்பு, ஜூலை 30

எதிர்வரும் 31ஆம் திகதி முதல், எதிர்வரும் ஓகஸ்ட் 4ஆம் திகதி வரை 6 விசேட ரயில்கள் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன என்று மேலதிக ரயில் பொது முகாமையாளர் வீ.எஸ். பொல்வத்தகே தெரிவித்தார்.

தேர்தல் வாக்களிப்பிற்காக சொந்த இடங்களுக்குச் செல்லும் பொதுமக்களின் பயண வசதி கருதியே இவ் விசேட சேவைகள் இடம்பெறவுள்ளன.

இதற்கமைய எதிர்வரும் 31ஆம் திகதி மாலை 6 மணிக்கு கொழும்பு, கோட்டை ரயில் நிலையத்திலிருந்து அநுராதபுரம் ரயில் நிலையம் வரைக்கும், இரவு 7.35 மணிக்கு கோட்டை ரயில்நிலை யத்திலிருந்து நானுஓயா ரயில் நிலையம் வரைக்கும், இரவு 7 மணிக்கு மருதானை ரயில் நிலையத்திலிருந்து பெலியத்த ரயில் நிலையம் வரையும் விசேட ரயில் சேவைகள் இடம்பெறவுள்ளன. (ரி1)

# ரிஷாத்துக்கு எதிராக விசாரணை நடக்கும்!

## பொலிஸார் திட்டவட்டம்

கொழும்பு, ஜூலை 30

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தொடர்பாகக் கடந்த ஆண்டு ஜூன் 20ஆம் திகதி குற்றப் புலனாய்வுத் துறையிலிருந்து பெறப்பட்ட அறிக்கை செல்லுபடியாகாது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அந்த அறிக்கையில் ரிஷாத் பதியுதீன் உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்பு சம்பவத்தில் சந்தேகநபர் அல்லர் என்றும், இதனால் அவருக்கு எதிராக எந்த விசாரணையும் மேற்கொள்ளப்படக்கூடாது என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது என்று பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவித்துள்ளதாவது:

அந்தக் காலகட்டத்தில் வெளிவந்த தகவல்களின்படி, பதியுதீன் உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்பில் சந்தேகநபர் அல்லர், அவருக்கு எதிராக விசாரணை நடத்த வேண்டிய அவசியமில்லை என்று அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

எவ்வாறாயினும், இந்த அறிக்கை ஒரு வருடத்துக்கு முன்னர் வெளியிடப்பட்டது. அதனால் இந்த அறிக்கை செல்லு படியாகாது. இந்தநிலையில் பதியுதீன் மற்றும் பிறருக்கு எதிரான விசாரணை எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும்- என்றார். (எ)

# இன்னும் 10 வருடங்களில் வட, கிழக்கில் புலிகளின் ஆட்சி

## இன்பராஜா தெரிவிப்பு



வவுனியா,ஜூலை 30

விடுதலைப்புலிகள் ஆட்சி செய்த வடக்கு கிழக்கை, அரசியல் அங்கீகாரத்துடன் புலிகள் ஆள வேண்டும். அது விரைவில் நடக்கும். இவ்வாறு புணர்வாழ்வளிக்கப்பட்ட தமிழீழ விடுதலைப்புலிகள் கட்சியின் தலைவர் கந்தசாமி இன்பராஜா தெரிவித்தார்.

வவுனியா தமிழ் ஊடகவியலாளர் சங்க அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது.

தற்போதைய தேர்தல் தொடர்பாக புரிந்துணர்வுக் கடிதத்தை தமிழரசுக் கட்சியின் தலைவரிடம் கடந்த இரு மாதங்களுக்கு முன்னர் வழங்கினோம். அது தொடர்பாக கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளுடனும், தலைமையிடமும் கதைத்துவிட்டு பதில் சொல்வதாகக் கூறப்பட்டது. எனினும் இன்றுவரை அந்த விடயம் தொடர்பாக எமக்கு எதனையும் அறிவிக்கவில்லை.

ஏனைய கட்சிகள் மற்றும் பல சுயேச்சைக்குழுக்கள் வாக்குகளை உடைக்கும் நோக்குடன் களம் இறக்கப்பட்டுள்ளன. எமது பாரம்பரியக் கட்சியான கூட்டமைப்பை பலப்படுத்துவதை நோக்காகக் கொண்டு, அவர்களது வெற்றிக்காகப் பாடுபடுவோம். எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலில் வடக்கு-கிழக்கில் எமது கட்சிக்கு மூன்று உறுப்பினர்களை வழங்க வேண்டும்என்ற விடயத்தை புரிந்துணர்வு கடிதத்தில் முன்வைத்திருந்தோம். ஆனால் எமக்கான முடிவு கிடைக்கவில்லை.

கூட்டமைப்பு எம்மை பல வீனமாக நினைக்கின்றது. ஆனால் இன்னும் 5,10 வருடங்களில் நாங்கள் தான் பலமாக வரப்போகின்றோம். விடுதலைப்புலிகள் ஆட்சி செய்த வடக்கு கிழக்கை புலிகள் தான் அரசியல் அங்கீகாரத்துடன் ஆளவேண்டும். அதனை நாம் உருவாக்குவோம்- என்றார். (க-110)

# நாடாளுமன்றத்துக்கான சுகாதார வழிகாட்டல்கள்

கொழும்பு, ஜூலை 30

பொதுத் தேர்தலின் பின்னர் நாடாளுமன்றம் கொவிட் 19 சவாலுக்கு முகங்கொடுத்து சுகாதாரப் பாதுகாப்புடன், அமர்வுகளை முன்னெடுப்பதற்குத் தேவையான சுகாதார வழிகாட்டல் தொகுப்பு நாளை வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்துக்குக் கையளிக்கப்படவுள்ளது என்று நாடாளுமன்ற தொடர்பாடல் திணைக்களம் தெரிவித்துள்ளது. பொதுத் தேர்தலின் பின்னர் ஆரம்பிக்கவிருக்கும் நாடாளுமன்றத்தில் கலந்துகொள்ளும் உறுப்பினர்கள் மற்றும் பிரபுக்கள், நாடாளுமன்ற பணியாளர்கள், பாதுகாப்புப் பிரிவினர்களை கொவிட் 19 சூழலிலிருந்து பாதுகாப்பதற்கான வேலைத் திட்டங்களைத் தயாரிப்பது குறித்து ஆராயப்பட்டுள்ளது.

சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம், வைத்தியர் லக்ஷ்மன் கம்லத் தலைமையிலான சுகாதார அமைச்சின் குழுவினர் கடந்த 22ஆம் திகதி நாடாளுமன்றத்துக்குப் பயணம் மேற்கொண்டு இது தொடர்பாக ஆராய்ந்தனர்.

சுகாதாரப் பாதுகாப்பு வழிகாட்டல்களை தயாரிக்கும்போது நாடாளுமன்ற சபா மண்டபம், உணவுக் கூடம் மற்றும் நாடாளுமன்ற நூல் நிலையம் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படவுள்ளது என்று சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் லக்ஷ்மன் கம்லத் தெரிவித்தார். (எ)

# வடக்கின் மீது அதிக கவனம்

## மஹிந்த தேசப்பிரிய எச்சரிக்கை



கொழும்பு, ஜூலை 30

எந்தவகையான ஊடகங்களும் எதிர்வரும் 3ஆம் 4ஆம் திகதிகளில் விளம்பரமோ அல்லது ஊக்கமளிக்கும் விடயங்களையோ பிரசுரிக்க முடியாது.

இருப்பினும் வடக்கு மாகாணம் தனி நிர்வாகமாக செயற்படுவதால் இம்முறை விசேட கவனம் செலுத்தப்படுமென தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய எச்சரிக்கை விடுத்துள்ளார். எதிர்வரும் 5 ஆம் திகதி நாடாளுமன்ற பொதுத் தேர்தல் இடம்பெறவுள்ள நிலையில், பிரசாரத்தின் போதான ஊடக அறிக்கையிடல்கள் தொடர்பில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். (ரி1)




# சிறுபான்மையினரின் காவலன் ஐ.தே.கவே

## கட்சியின் தலைவர் ரணில் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 30

ஐக்கிய தேசியக் கட்சி சிறுபான்மையின மக்களை பாதுகாத்து வருகின்றது. இந்த நடவடிக்கை தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும். இவ்வாறு அந்தக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.



தேர்தல் பரப்புரை கூட்டத்தில் கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொரோனா காரணமாக ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியை கட்டுப்படுத்த முடியாது. நாட்டில் 7 பில்லியன் டொலர் அந்நிய செலாவணி இழக்கப்பட்டுள்ளது. அரசின் வருவாய் 50 வீதத்தால் குறைக்கப்பட்டுள்ளது. நாட்டை நிலை நிறுத்த முடியாதுபோயுள்ளது. அவ்வாறு செய்ய இந்த அரசுக்குப் பலமும் இல்லை. ஐக்கிய தேசியக் கட்சிக்கு மட்டுமே அந்த பலம் இருக்கின்றது. இதேவேளை, தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் பாதுகாக்கப்பட வேண்டும். இலங்கையர் என்ற அடையாளத்தைக் கொண்ட ஒரே கட்சி ஐக்கிய தேசியக் கட்சி மட்டுமே -என்றார். (ஒ,5)

# வர்க்குகளுக்காக வாக்குறுதிகளை வழங்குபவர்கள் நாங்களல்லர்

## சிவசக்தி ஆனந்தன் கருத்து



வவுனியா, ஜூலை 30

பொதுத்தேர்தலின் பின்னரான செல்நெறி தொடர்பில் எம்மிடம் பல வேலைத்திட்டங்கள் உள்ளன. வர்க்குகளுக்காக வாக்குறுதிகளை வழங்குபவர்கள் நாமல்லர். இவ்வாறு தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் பொதுச் செயலர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

கனகராயன்குளத்தில் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தேர்தல் அலுவலகத்தைத் திறந்து வைத்ததன் பின்னர் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது தமிழர் தரப்பின் பேரம்பேசல் என்பது கேள்விக்குள்ளாகியுள்ளது. இவ்வாறான நிலையில் மத்தியில் ஆட்சியில் இருப்பவர்களும் மாறியிருக்கும் உலக அரசியல் ஒழுங்கை கவனத்தில் கொள்ளாது தமிழ் மக்கள் விடயத்தில் எதேச்சதிகாரமான கருத்துக்களையே தெரிவிக்கின்றார்கள். இனப்பிரச்சினை என்று ஒன்று இல்லையென்றே கூறுமளவுக்கு நிலைமைகள் மோசடைந்துள்ளன. பொறுப்புக்கூறலை செய்யமாட்டோமென்று சர்வதேசத்துக்கே சவால் விடுக்கும் நிலைமை உருவாகியுள்ளது.

இந்த விடயங்களை தனியே ஓர் அரசியல் கட்டமைப்பாக நாம் கையாண்டு வென்றுவிட முடியாது. ஆகவே தான் நாம் அடுத்தகட்ட செல்நெறி தொடர்பில் திட்டங்களைக் கொண்டிருக்கின்றோம்.

இனப்பிரச்சினை தீர்வு, பொறுப்புக்கூறல் விடயத்தில் எமது அரசியல் கட்சியின் நியாயமான நிலைப்பாட்டுக்கு மேலும் வலுச்சேர்க்கும் முகமாக சிவில் அமைப்புக்கள், புத்திஜீவிகள், சர்வமத தலைவர்களை ஒருங்கிணைத்து உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பல்வேறு அழுத்தங்களை பிரயோகிப்பதற்கான நடவடிக்கைகளை முறையாக முன்னெடுக்கவும் திட்டமிட்டுள்ளோம்.

இவை அனைத்தும் தேர்தல் காலத்தில் உங்கள் வாக்குகளை பெற்றுக் கொள்வதற்காக இந்த மேடையில் மட்டும் வழங்கப்படும் வாக்குறுதிகளாக நீங்கள் நினைத்து விடக்கூடாது. எம்மைப் பொறுத்தவரையில் விடுதலையை எதிர்பார்த்திருக்கும் இனமொன்று தமது சமூகத்தின் அனைத்து தரப்புக்களையும் தன்னுள் ஈர்த்து கட்டமைப்புமிக்கதாக நிறுவன மயப்படுத்தப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும். அதற்கான வேலைத்திட்டங்கள் அனைத்தும் துரிதகதியில் மேற்கொள்ளப்படும் - என்றார். (ஒ,5,110)

அதிவேக

# நெடுஞ்சாலை வலையமைப்புக்குள் மலையகமும் உள்ளீர்க்கப்படும்

## மஹிந்தவின் தேர்தல் வாக்குறுதி



கம்பஹா, ஜூலை 30

வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு போன்று மலையகத்தையும் இணைத்து அமைக்கப்படும் அதிவேக நெடுஞ்சாலை அமைப்புகளை விரைவில் நிறைவு செய்வோம் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மரதகஹமுல பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடை பெற்ற சந்திப்பொன்றில் உரையாற்றிய பிரதமர் இவ்வாறு கூறியுள்ளார்.




அவர் மேலும் தெரிவித்ததாவது:

வாகன நெரிசல் காரணமாக வீதியில் செலவிடும் நேரத்தை சேமித்து, அந்தக் காலத்தை இன்னும் பிரயோசனமான வேலையில் ஈடுபடுத்துவதற்கு ஏற்ற வகையில் வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு போன்று மலையகத்தையும் இணைத்து அமைக்கப்படும் அதிவேக நெடுஞ்சாலை அமைப்புகளை விரைவில் நிறைவுசெய்யப்படும்.

நாடொன்று முன்னோக்கிப் பயணிக்க வேண்டுமாயின் அபிவிருத்தி முதலீடுகளை நாட்டுக்கு கொண்டு வருவதற்கு அரசு என்ற ரீதியில் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், அதற்கு அவசியமான அடிப்படை வசதிகளை வழங்குவதற்கு அரசு தயங்காது ஈடுபடும்.

அதன் கீழ் கிராம மட்டத்திலிருந்து நகரங்கள் வரையும், மாகாண மட்டம் வரையும், நாட்டின் முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளை இணைக்கும் அதிவேக நெடுஞ்சாலையை விரைவில் நிர்மாணித்து நிறைவு செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

2015ஆம் ஆண்டு வரை தமது அரசு முன்னெடுத்துச் சென்ற அபிவிருத்தி செயற்பாடுகளை கடந்த ஐந்து வருடங்களில் முழுமையாக நிறுத்தியதுடன், கடந்த ஐந்து வருடங்களை வீணடித்தமை தொடர்பில் நல்லாட்சி அரசு பொறுப்புக் கூற வேண்டும் - என்றார். (ஒ,5)

# இன்னும் 20ஆண்டுகளுக்கு ராஜபக்ஷக்கள் ஆட்சிதான்

## பீதியைக் கிளப்புகிறார் கருணா அம்மான்

மட்டக்களப்பு, ஜூலை 30

கோத்தாபய ராஜபக்ஷவின் அரசானது குறைந்தது 20 ஆண்டுகளுக்காவது நீடிக்க வாய்ப்பிருக்கின்றது. பலமான எதிர்க் கட்சியில்லை. இந்த அரசுடன் நெருக்கமாக செயற்டுகின்ற போதுதான் நாங்கள் மாற்றத்தை உருவாக்க முடியும். இவ்வாறு தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் தலைவர் விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா அம்மான்) தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் இடம்பெற்ற பரப்புரைக் கூட்டத்திலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மட்டக்களப்பு மாவட்டத்தில் எங்களுடைய பிரதிநிதிகள் இருந்தால்தான் அபிவிருத்திகளை தொடர்ச்சியாக கொண்டுசெல்ல முடியும். மக்கள் இந்த வாய்ப்பை இழக்கக்கூடாது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் எனக்கும் உள்ள நெருக்கம் பற்றி உங்கள் அனைவருக்கும் தெரியும். இந்த நெருக்கத்தை பயன்படுத்தி எங்களுடைய மக்களை அபிவிருத்திப் பாதையில் இட்டுச் செல்வதற்கு வாய்ப்பிருக்கின்றது.

ஆகவே இதனைப் புரிந்துகொண்டு எங்கள் குழந்தைகளின் எதிர்காலம், பெண்களின் வாழ்வாதாரம் மேம்பட வேண்டுமானால் சிறந்த முடிவை நீங்கள் எடுக்க வேண்டும்- என்றார். (ஒ,5)

# தேர்தலில் வெற்றி பெற்றவர்களின் சொத்து விவரங்களைப் பார்க்கலாம்

## தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 30

தமிழ் மக்கள் தேசிய கூட்டணி வேட்பாளர்களின் சொத்து விவரங்கள் யாவும் சேகரிக்கப்பட்டு 232, கோவில் வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ளன. இவற்றை பார்க்க விரும்புபவர்கள் தேர்தலின் பின்னர் முன் அனுமதியுடன் அவற்றைப் பார்வையிடலாம். பாதுகாப்பு காரணங்களுக்காக தேர்தலில் வெற்றி பெறுபவர்களின் சொத்து விவரங்கள் மாத்திரமே பகிரங்கப்படுத்தப்படும் என்று அந்தக் கட்சியின் ஊடகப் பிரிவு அனுப்பிவைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'தேர்தலில் வெற்றி பெறும் ஒருவர் வேட்பாளராக இருந்தபோது எவ்வளவு சொத்துக்களை வைத்திருந்தார் என்பதை ஒருவர் அறிவதன் மூலம், அவர் தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்காலத்தில் எவ்வளவு சொத்துக்களை சேர்த்தார் என்பதையும் பதவித் துஷ்பிரயோகம் அல்லது முறைகேடுகள் மூலம் சொத்துக்களை சேகரித்தாரா என்பதையும் அறிய முடியும்.

தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி ஊடாக நாடாளுமன்றத்துக்குத் தெரிவுசெய்யப்படும் வேட்பாளர்கள் தமது மாதாந்த படிகளின் 8 சதவீதத்தை பொதுமக்களின் நல்வாழ்வு திட்டங்களுக்காக இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட அவர்கள் விரும்பிய ஒரு அறக்கட்டளை நிதியத்துக்கு மாதாந்தம் வழங்க வேண்டும். அது தமிழ் மக்கள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியமாகவும் அமையலாம். அதே வேளை, ஆகக்குறைந்தது 2 சதவீதத்தை தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் பொதுவான செலவீனங்களுக்காகவும் வழங்கவேண்டும்' என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ,5)

# தேர்தல்கள் ஆணைக்குழுவின் அதிகாரங்களை குறைப்போம்

## தேர்தலின் பின்னர் இது நடக்கும் என்கின்றது பொதுஜன பெரமுன



**கொழும்பு, ஜூலை 30**
**நாடாளுமன்றத் தேர்தல் வெற்றியின் பின்னர் தேர்தல் ஆணைக்குழுவுக்கு இருக்கும் அதிகாரங்களைக் குறைப்பது என்று தீர்மானித்துள்ளதாக சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் கண்டி மாவட்ட வேட்பாளர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.**

கண்டியில் நேற்றுமுன்தினம் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்து கொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எந்தக் கட்சியும் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தைப் பெற முடியாத வகையில் ஜே.ஆர்.ஜெயவர்தன இந்த தேர்தல் முறையை உருவாக்கினார். நாங்கள் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தைப் பெற்றுக்கொள்ளும் சூழல் உருவாகியுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சி இரண்டாக பிளவுபட்டுள்ளது. அந்தக் கட்சியைச் சேர்ந்த 20 வீதமான ஆதரவாளர்கள் கட்சிக்கு வாக்களிக்க மாட்டார்கள். மலையக மக்களும், முஸ்லிம் மக்களும் சிறிலங்கா பொதுஜன பெரமுனவுடன் ஒன்றிணைந்து வருகின்றனர். 150 ஆசனங்களுக்கு மேலதிகமான ஆசனங்களைக் கைப்பற்றுவோம். கோத்தாபயவுக்கு தனித்த அதிகாரங்களை வழங்க வேண்டாம் என்று வடக்கில் உள்ள அடிப்படைவாத கட்சிகள் கூறுகின்றன. அப்படி தனி அதிகாரத்தைக் கொடுத்தால் நாடு ஆபத்துக்குள் செல்லும் என்று அந்தக் கட்சிகள் கூறுகின்றன.

அவர்கள் அடிப்படைவாதத்தை முன்னெடுத்துச்செல்ல முயற்சித்து வருகின்றனர். கடந்த ஜனாதிபதித் தேர்தலில் அவர்கள் கோத்தாவைத் தோற்கடிக்க முயற்சித்தனர்.

அதேவேளை தேர்தல் ஆணைக்குழு சில நேரங்களில் வெளியிடும் விதிமுறைகள் காரணமாக நாங்கள் எப்படி தேர்தல் பரப்புரைகளை மேற்கொள்வது என்பது புரியவில்லை. இப்படியான தேர்தல் ஆணைக்குழுவுடன் தேர்தலை நடத்த முடியாது. கட்சி அலுவலகங்கள் தேர்தல் அலுவலகங்களை வைக்க முடியாதாம், கூட்டங்களை நடத்த முடியாதாம். தனிமைப்படுத்தல் சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதை நாங்கள் 100 வீதம் ஏற்றுக்கொள்கிறோம். கூட்டங்களை நடத்த வேண்டாமாம், சுவரொட்டிகளை ஒட்ட வேண்டாமாம், பதாகைளை வைக்க வேண்டாமாம். வீடுக்கு வீடு சென்றும் பரப்புரை செய்ய வேண்டாமாம் அப்படியானால் எப்படி தேர்தல் பரப்புரைகளை முன்னெடுப்பது? இதனால் தேர்தல் வெற்றிக்கு பின்னர் தேர்தல் ஆணைக்குழுவின் அதிகாரங்களில் உடனடியாக மாற்றம் செய்யப்படும்- என்றார். (ஒ.5)

## 'சம்பந்தனின் கரங்களை பலப்படுத்துவோம்'

திருகோணமலை, ஜூலை 30

சம்பந்தனின் கரங்களைப் பலப்படுத்துவதன் ஊடாகவே தமிழ் மக்கள் தமக்கான நியாயமான தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியும். இவ்வாறு திருகோணமலை கொட்டியாபுரப்பற்று சர்வதேச ஒன்றியத்தின் தலைவர் கந்தையா இராசநாயகம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

சம்பந்தன் தன்னுடைய காலத்தில் எமது இனத்திற்கு ஓர் அரசியல் தீர்வை எடுத்துவிட வேண்டும் என்பதில் இன்றுவரைக்கும் தீர்மானமாகத்தான் இருக்கின்றார். இதற்கு நாம் அனைவரும் ஒன்றுபட்டு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். எமது உரிமைக்காக ஆயுதம் ஏந்தி போராடியபோதும் தொடர்ந்து வந்த அரசுகள் எமக்கான தீர்வை வழங்குவதில் கால இழுத்தடிப்பையே மேற்கொண்டு வந்தன. இந்தச் சூழ்நிலையில் ஜனநாயகத்தின் மூலம் அனைத்து மக்களும் சமமாக வாழக்கூடிய ஒரு தீர்வை எமக்கு எப்படியாவது பெற்றுக்கொடுத்து விடவேண்டும் என்ற நிலைப்பாட்டில் ஐயா இன்னமும் அயராது உழைத்து வருவதையும், அதன் அடிப்படையில் இந்த அரசுகளை சர்வதேசத்தின் பொறிமுறைக்குள் கொண்டு சென்று தீர்வைப் பெற்றுக் கொள்வதற்கான கைங்கரியத்தை மேற்கொண்டு வருவதையும் அனைவரும் அறிவார்கள்.

நாம் அகிம்சை வழியில் போராடினோம், ஆயுதம் கொண்டும் போராடினோம். அனைத்தையும் இழந்தோம். ஆனால் மீண்டும் அரசியல் என்ற ஜனநாயக வழியில் போராடுவோம். நிச்சயம் எமக்கு ஒருநாள் இனமத பேதமின்றி அனைவரும் சம உரிமையுடன் வாழ வழி பிறக்கும். நாம் என்றுமே எம் இனத்தையோ மற்ற இனத்தையோ வேறுபடுத்திப் பார்க்க வேண்டியதில்லை. அனைவரும் ஒற்றுமையாக ஒன்றிணைந்து சம்பந்தனின் கரங்களை பலப்படுத்துவோம். எமக்கான தீர்வு வந்தே தீரும் - என்றுள்ளது. (ஒ.5)

# சைவத்தைக் காக்கவே களமிறங்கியது சுயேச்சை

*பின்னணியில் சிவசேனை என்கிறார் சச்சிதானந்தன்*

மன்னார், ஜூலை 30

சுயேச்சைக் குழுவில் போட்டியிடும் தமிழ் தேசிய சைவ மக்கள் கட்சி வேட்பாளர் மனோ ஐங்கர சர்மாவுக்குப் பின்னால் சிவசேனை அமைப்பும், சிவசேனை தொண்டர்களும் நிற்கின்றார்கள். அவருடைய வெற்றி தான் சைவத்தின் வெற்றி. அவருடைய கட்சியில் 9 வேட்பாளர்கள் வன்னி மாவட்டம் முழுவதும் போட்டியிடுகின்றனர். வன்னி மாவட்டம் முழுக்க ஒரு இலட்சத்து 69 ஆயிரம் சைவ வாக்குகள் உள்ளன. இவ்வாறு சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன் புலவு சச்சிதானந்தன் தெரிவித்தார்.

மன்னார் தமிழ் தேசிய சைவ மக்கள் கட்சி அலுவலகத்தில் நேற்றுப் புதன்கிழமை காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மன்னார் சிவ பூமி. 500 ஆண்டுகளுக்கு முன் முழுமையாக சைவர்கள் வாழ்ந்த பூமி. முத்துக்குளித்தார்கள். குளங்களைக் கட்டினார்கள். நல்ல தமிழ் பெயர்களை வைத்தார்கள். தற்போது மன்னாரில் தமிழ் இல்லாத பெயர்கள் சில கிராமங்களுக்கு வைக்கப்பட்டுள்ளன. தமிழ்ப் பெயர்கள் மட்டும் இருந்த மன்னார் தற்போது பல்வேறு நாட்டுப் பெயர்களுடன் காணப்படுகின்றது.

இந்த மண்ணில் சைவத்தை சிதைக்க முற்படுகின்றார்கள். சைவத்தைச் சிதைக்க விடமாட்டோம் என்று வந்திருக்கின்றார் மனோ ஐங்கர சர்மா. அவரை அச்சுறுத்தலாம் என்று எவராவது நினைத்தால் திருக்கேதீச்சர வளைவை உடைத்தது போல அவரை எதுவும் செய்ய முடியாது. நீங்கள் திருக்கேதீஸ்வர வளைவை உடைக்கலாம். உடைப்பதற்கு துணையாக திருக்கேதீஸ்வரத்தில் உள்ளவர்களே இருப்பார்கள். ஆனால் ஐங்கரசர்மாவை யாரும் மிரட்டவோ உடைக்கவோ முடியாது. அவர் சைவத்துக்காகவும், தமிழுக்காகவும் இந்த மண்ணை மாற்றிக் கொண்டே வருகின்றார். மாற்றுவார், மாற்றத்தை தருவார்.

தமிழ் தேசிய சைவ மக்கள் கட்சி எதிர்வரும் தினங்களில் நாடாளுமன்றத் தேர்தலில் இருந்து விலகுவதாகவும் ஏனைய பெரிய சில கட்சிகள் எங்களோடு இரகசிய ஒப்பந்தங்கள் செய்து எங்களுக்கு ஆசனங்கள் வழங்குவதற்கு தயாராக இருப்பதாகவும் எனவே இப்படிப்பட்ட இந்த கட்சிக்கு நீங்கள் வாக்களிக்க வேண்டும் என்று சில விசமத்தனமான பரப்புரைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சைவத் தமிழர்களின் உரிமைகளுக்காக இந்தக் கட்சியை நாங்கள் ஆரம்பித்தோம். இந்தக் கட்சியின் செயற்பாடானது எந்தத் தடைகள் வந்தாலும் தடைகளைத் தகர்த்துக்கொண்டு மக்களின் ஜனநாயக உரிமைக்காகப் போராடுவதே - என்றார். (ஒ.5.56)



# கூட்டமைப்பின் பிரிவினை அரசியலை தோற்கடிக்க எமக்கே வாக்களியுங்கள்

## கோருகின்றது மொட்டுக் கட்சி

**கொழும்பு, ஜூலை 30**

**வடக்கு கிழக்கு தமிழர்களின் தாயகம் என்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரிவினைவாத அரசியல் தோற்கடிக்கப்படவேண்டும் என்று 'கடமை கலந்துரையாடல் அரங்கு' என்ற அமைப்பின் ஏற்பாட்டாளரும், சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் தேசியப்பட்டியல் வேட்பாளருமான கெவிது குமார துங்க தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:

11 ஆவது போர் வெற்றி விழாவை அண்மையில் கடைப்பிடித்தோம். உயிர்த் தியாகங்களுக்கு மத்தியிலேயே பயங்கரவாதிகளை எமது படையினர் தோற்கடித்தனர். இவ்வாறு பிரிவினைவாதத்தின் ஆயுதப் பிரிவே தோற்கடிக்கப்பட்டுள்ளது. அதன் அரசியல் பிரிவு இன்னமும் செயற்பட்டுகொண்டுதான் இருக்கின்றது.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்திலுள்ள சில சரத்துக்கள் ஒற்றையாட்சிக்கு முரணானவை. சட்டம் ஒழுங்கு, கல்வி, சுகாதாரம் மற்றும் காணி போன்ற அதிகாரங்களை என்றாவது ஒருநாள் மாகாணசபைகளுக்கு பகிர்வதற்கு அதில் ஏற்பாடுகள் உள்ளன.

அதிகாரப்பகிர்வு தெற்குக்கும் இருக்கின்றது எனக் கூறுகின்றனர். இதன்மூலம் வடக்கும் கிழக்கும் இணையும் நிலையும் இருக்கின்றது.

பொதுத்தேர்தலுக்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் முன்வைக்கப்பட்டுள்ள தேர்தல் விஞ்ஞாபனத்தில் வடக்கு, கிழக்கு தமிழர் தாயகம் என்பதால் அவை இணைக்கப்படவேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கான அதிகாரங்களும் கோரப்பட்டுள்ளன. இந்தப் பிரிவினைவாத அரசியலை நாம் தோற்கடிக்க எமக்கே வாக்களிக்க வேண்டும் - என்றார். (ஒ.5.44)

# தமிழ்த் தலைமைக்கு வாக்களியுங்கள்

## மொட்டுக் கட்சி வேட்பாளர் இப்படி பரப்புரை

மன்னார், ஜூலை 30

எனது கொள்ளை பிடிக்கவில்லை, எனது கட்சியைப் பிடிக்கவில்லை என்றால் உங்களுடைய வாக்குகள் ஒரு தமிழ் தலைமைக்கு வழங்கப்பட வேண்டும். மாற்றுத் தலைமைகளிடம் வாக்குகளை கொடுத்து நீங்கள் மண்டியிட்ட சமூகமாக மாறிவிடாதீர்கள். இவ்வாறு சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் வன்னி மாவட்ட வேட்பாளர் செல்வக்குமரன் டிலான் தெரிவித்தார்.

மன்னாரில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த கால ஆட்சியாளர்களின் தவறினால் வன்னி தேர்தல் மாவட்டத்தில் இன்று பல கட்சிகளும், பல சின்னங்களும், சுயேச்சைக் குழுக்களும் வலம் வந்து கொண்டிருக்கின்றன.

வன்னித் தேர்தல் மாவட்டம் ஒரு வர்த்தக தேர்தல் மாவட்டமாக மாறிக்கொண்டிருக்கிறது. கட்சிகள், சுயேச்சைக் குழுக்கள் வாக்குகளைச் சிதைப்பதால் எந்த ஒரு கட்சியாலும் அதிகமான வாக்குகளைப் பெற்றுக்கொள்ள முடியாத ஒரு சூழல் ஏற்பட்டிருக்கிறது.

வன்னி தேர்தல் தொகுதியில் பல தமிழ் கட்சிகள் இருக்கின்றன. பல தமிழ் வேட்பாளர்கள் போட்டியிடுகின்றார்கள். என்னைப் பிடிக்கவில்லை; எனது கட்சியைப் பிடிக்கவில்லை என்றால், உங்களுடைய வாக்குகள் ஒரு தமிழ் தலைமைக்கு வழங்கப்பட வேண்டும். மாற்றுத் தலைமைகளிடம் வாக்குகளை கொடுத்து நீங்கள் மண்டியிட்ட சமூகமாக மாறி விடாதீர்கள் - என்றார். (ஒ.5.56)




# நாவலப்பிட்டிய மக்களை மீட்டெடுத்தவன் நானே!!!

## மார்தட்டுகிறார் வேலுகுமார்

கண்டி, ஜூலை 30



அதிகார வர்க்கத்தாலும், இனவாத கும்பல்களாலும் கடந்த காலங்களில் அடக்கி ஆளப்பட்ட, ஒடுக்கி ஓரங்கட்டப்பட்ட நாவலப்பிட்டியில் வாழும் தமிழ் மக்களுக்கு, தலைநிமிர்ந்து வாழ்வதற்கான யுகத்தை நானே ஏற்படுத்திக்கொடுத்தேன். இதனால் அவர்களுக்கான அரசியல் அங்கீகாரமும் கிடைக்கப்பெற்றுள்ளது என்று ஜனநாயக மக்கள் முன்னணி யின் பிரதித் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட வேட்பாளருமான வேலு குமார் தெரிவித்தார்.

நாவலப்பிட்டி தொகுதியில் நேற்றுமுன் தினம் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது மலையக மக்களுக்கு 40 ஆண்டுகளுக்குப் பின்னரே வாக்குரிமை கிடைத்தது. வாக்குரிமை தொடர்பில் ஏன் கதைக்கின்றேன் என்றால், அதன் பின்னால் கடந்த காலங்களில் அரங்கேறிய அடக்குமுறை கதையொன்று இருந்தது.

மலையக மக்களுக்கு வாக்குரிமை கிடைத்திருந்தாலும், அதனை சுதந்திரமாகவும், மனசாட்சியின் பிரகாரமும் பயன்படுத்துவதற்கான வாய்ப்பு 2015 இற்கு முன்னர் நாவலப்பிட்டி பகுதிகளில் வாழும் தமிழ் மக்களுக்கு இருக்கவில்லை. வாக்களிப்பு இயந்திர மாகவே அவர்கள் கருதப்பட்டனர்.

குறிப்பிட்ட ஒருவருக்கு மட்டும்தான் வாக்களிக்கவேண்டும் என்று மிரட்டப்பட்டனர். மறுத்தவர்களுக்கு எதிராக வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன. தோட்டங்களுக்கு குண்டர் குழுக்கள் சென்று தாக்குதல் மேற்கொள்ளும் அராஜக அரசியலும் அரங்கேறியது. அதுமட்டுமல்ல, அபிவிருத்தியின்போது தோட்டப்பகுதிகள் புறக்கணிக்கப்பட்டன.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே அதிகார வர்க்கத்தின் கோரப்பிடிக்குள் இருந்து தமக்கு சுதந்திரம் வேண்டும், உரிமை அரசியல் வேண்டும் என்பதற்காக 2015 இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின்போதும் பொதுத் தேர்தலின்போதும் நாவலப்பிட்டி தொகுதியில் வாழும் தமிழ் மக்கள் ஓரணியில் திரண்டு வாக்களித்தனர். கண்டி மாவட்டத்துக்கு தமிழ்ப் பிரதிநிதித்துவம் என்ற கனவை நிறைவேற்றுவதற்கு பங்களிப்பு வழங்கினர்.

மக்கள் வழங்கிய ஆணையின் பிரகாரம் நான் நாடாளுமன்ற உறுப்பினரானேன். எதற்காக நாவலப்பிட்டி தொகுதியில் வாழும் தமிழ் மக்கள் எனக்கு வாக்களித்தார்களோ, என்னிடமிருந்து எதனை எதிர்பார்த்தார்களோ அவற்றை நான் நிறைவேற்றியுள்ளேன் என்ற திருப்தி எனக்கு இருக்கின்றது.

அப்பகுதியில் வாழும் மக்களுக்கு அரசியல் அங்கீகாரம் பெற்றுக்கொடுத்தேன். தலைநிமிர்ந்து வாழக்கூடிய யுகத்தை உருவாக்கினேன். கைகட்டி வாழ்வதற்கு பதிலாக அநீதியைத் தட்டிக்கேட்கும் தைரியத்தை வழங்கினேன்.

எனது வெற்றி உறுதி. அதனை வரலாற்று வெற்றியாக மாற்றியமைக்க நாவலப்பிட்டியில் வாழும் தமிழ் மக்களின் ஆதரவு அவசியம். அதனை வழங்குவீர்கள் என நம்புகின்றேன் - என்றார். (ஒ.5)

# ராஜபக்ஷக்களை பாதுகாத்தோர் ரணிலும், மைத்திரியும்தான்!

## ராஜித பகீர் குற்றச்சாட்டு

களுத்துறை, ஜூலை 30

நல்லாட்சிக் காலத்தில் ராஜபக்ஷக்களை காப்பாற்றும் முக்கிய பொறுப்பை அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுமே கையில் எடுத்திருந்தனர். இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

களுத்துறை மாவட்டத்தில் இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நல்லாட்சியை ஆரம்பிக்க தலைமை தாங்கிய முக்கிய நபர்கள் அனைவருமே நல்லாட்சியை நாசமாக்கிவிட்டனர்.

நாம் உருவாக்கிய நல்லாட்சியில் ஜனாதிபதியாக வந்து குந்திய மைத்திரிபால சிறிசேன 360 பாகையில் தனது அரசியல் பயணத்தை திரும்பி மீண்டும் ராஜபக்ஷவின் முகாமில் தஞ்சம் புகுந்து எம்மை நாசமாக்கியதை இன்னமும் ஏற்றுக்கொள்ள முடியாதுள்ளது.

நல்லாட்சி என்பது அரசமைப்பை உருவாக்குவதும், சட்டங்களை கொண்டுவருவதும் தான் என்று ரணில் நினைத்துக் கொண்டிருந்தார்.

ஊழல் குற்றங்களை நிறுத்துவதற்கு இவர்களில் எவரும் இணக்கம் தெரிவிக்கவில்லை. அர்ஜுன மகேந்திரன் விடயத்தில் நான் ஆரம்பத்தில் இருந்து முரண்பட்டுக் கொண்டே இருந்தேன். மகேந்திரனை நியமிக்காது தடுக்க வேண்டும் என்பதில் நான் அமைச்சரவையிலும் முரண்பட்டுக் கொண்டே இருந்தேன். ஆனால் ரணில் அதற்குச் சற்றும் செவிமடுக்கவில்லை. தனது அமைச்சின் கீழ் எடுக்கும் தீர்மானத்தை வேறு எவரும் மாற்றியமைக்க வேண்டாம் என்றார். அதன் விளைவையே இன்று



அனைவரும் அனுபவிக்க வேண்டியுள்ளது. ராஜபக்ஷவையும் அவரது மனைவி சிரந்தியையும் காப்பாற்ற ரணில் விக்கிரமசிங்கவே காரணம். அவர்களிடம் வாக்குறுதி வழங்கியுள்ளதாக என்னிடமே ரணில் கூறினார். அதேபோல் கோத்தாபய ராஜபக்சவை காப்பாற்றுவதாக மைத்திரிபால சிறிசேன வாக்குறுதி கொடுத்திருந்தார். குற்றவாளிகளைக் காப்பாற்றிய பிரதான பொறுப்பு நல்லாட்சி தலைவர்கள் இருவரிடமுமே இருந்தது. ஆனால் துரோகிகளாக நாம் அடையாளப்படுத்தப்பட்டுவிட்டோம். இன்றும் எம்மைப் பழிவாங்கும் அரசியல் வேலைத்திட்டத்தையே அரசு முன்னெடுத்து வருகின்றது - என்றார். (ஒ.5)

## நேர்மையான தலைமையோடு அரசியலில் பயணிக்கிறோம்

வேட்பாளர் வை.கே.றஹ்மான் பெருமிதம்

அம்பாறை, ஜூலை 30

சதிகாரத் தலைமையோடு பயணிக்காமல், சமூகத்தின் மீது உண்மையான பற்றுக் கொண்ட நேர்மையான, தலைமையோடு அரசியலில் நாம் பயணிக்கின்றோம். இதனால் தான் முஸ்லிம் மக்கள் எம்மோடு அணிதிரண்டு வருகின்றனர் என்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் திகாமடுல்ல தேர்தல் மாவட்ட வேட்பாளர் வை.கே.றஹ்மான் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

சிறுபான்மைச் சமூகங்களை விரோதிகளாகக் காட்டியும், ஏதுமறியா முஸ்லிம் சமூகத்தின் மீது நயவஞ்சகத்தனமாகப் பயங்கரவாத முத்திரை குத்தியும் பெரும்பான்மை சமூகத்தவரின் வாக்குகளைச் சூறையாட இன்றைய அரசு பகீரதப்பிரயத்தனங்களை முன்னெடுத்துவருகின்றது. இந்த நயவஞ்சகத் திட்டத்தின் ஓர் அங்கமாகத்தான் எமது சமூகத்தின் காவலன், எம் தலைவன் முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் மீது விசாரணை என்ற போர்வையில் அரசு பெரும் கெடுபிடிகளைக் காட்டிவருகின்றது.

இன்றைய முக்கியமான தேர்தல் பரப்புரைக் காலத்தில் கூட விசாரணை, விசாரணை என அழைத்து சித்திரவதைக்குள்ளாக்குகின்ற நிலைமையும் தொடர்வது விசனிக்கத்தக்கதாகும். இந்த நிலையில் நாம் எமது தலைமையைப் பாதுகாக்கவும், எழுச்சிக்கு உரம் கொடுக்கவும் நமது பிரதேசத் தலைமைகளை வலுப்படுத்த வேண்டும். அந்த வகையில் மக்கள் சேவகனாகத் திகழும் எமது வேட்பாளர் அஷ்ரப் தாஹிர் போன்றவர்களை நாடாளுமன்றம் அனுப்ப வேண்டும். என்றார். (ஐ-30)




# ஏமாற்று அரசியல்வாதிகளை ஆதரிக்க வெட்கம் இல்லையா?

மக்களிடம் கேள்வி எழுப்புகிறார் கிழக்கு முன்னாள் முதல்வர்

**மட்டக்களப்பு, ஜூலை 30**

**30 வருட காலம் தொடர்ச்சியாக மக்களால் தெரிவு செய்யப்பட்டும் மக்களுக்கான அபிவிருத்திகள் எதையுமே செய்யாமல் இருந்துவிட்டு தற்போது மீண்டும் வாசற்படி ஏறி வாக்குக் கேட்டு வரும் அரசியல்வாதிகளுக்குத்தான் வெட்கமில்லையென்றால், அவர்களிடம் எந்தக் கேள்விகளுமே திருப்பிக் கேட்காமல் வாக்குப் போட்டுக் கொண்டே இருக்கும் மக்களுக்கும் வெட்கமில்லையா? என கிழக்கின் முன்னாள் முதல்வர் நஸீர் அஹமட் கேள்வி எழுப்பினார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது;

சில அரசியல்வாதிகளுக்கு கடந்த 30 வருடகால வழமையான பொய்யும் புரட்டும் வாய்ப்பாடமாக உள்ளது. அதனை வைத்தே இப்பொழுதும் படம் காட்டுகிறார்கள். மக்களால் தெரிவுசெய்யப்படாமல் கடந்த 30 வருட காலமாக தேசியப் பட்டியல் மூலம் நாடாளுமன்றத்தை அலங்கரித்த நாயகர்களும் இப்பொழுது களத்தில் இறங்கியுள்ளனர்.

இவர்கள் மீண்டும் மீண்டும் மக்களிடம் வந்து தமக்கும் விளங்காமல், கேட்டுக் கொண்டிருப்போருக்கும் விளங்காமல் தத்துவம் பேசி, மக்களை மடையர்களாக்கி, பலரை மூளைச் சலவை செய்து தம் பின்னாலேயே செக்கு மாடுகளாய் சுற்றி வருவதற்கு சிலரைப் பயன்படுத்தி இருக்கிறார்கள். எனவே. இந்தச் சமூக விரோத அரசியல்வாதிகளைப் பற்றி மக்கள் நன்கு புரிந்துகொண்டு, அவர்களை இனி மேல் உங்கள் வீட்டுப் படிகளையும் நாடாளுமன்றப் படிகளையும் மிதிக்காத வண்ணம் பார்த்துக்கொள்ள வேண்டும்.

எதுவித உபயோகமும் அற்றவர்களான இவர்கள், உருப்படியாக சமூகத்துக்கு எதனைச் செய்தார்கள்.? எத்தனை தொழிற்சாலைகளை அமைத்து உள்ளூர் வளங்களைப் பயன்படுத்தி எத்தன்ன் குடும்பங்களுக்கு வாழ்வாதாரத் தொழில்களை வழங்கினார்கள்? எல்லாவற்றையும் செய்வோம் என்று சொல்லி நாடாளுமன்றத்துக்குச் சென்ற நாயகர்கள் மக்களுக்கு எதுவுமே செய்யாமல் மாடமாளிகைகளை அமைத்ததும், தோட்டந்துரவுகள் வாங்கியதும், வெளிநாடுகளில் முதலீடு செய்ததும்தான் நடந்திருக்கின்றன. இதனை மக்கள் உணர்ந்து இந்த ஊருக்கு உதவாத உதவாக்கரைகளை இம்முறை நாடாளுமன்றம் செல்லவிடாமல் விரட்டியடிக்க வேண்டும்-என்றார். (ஐ)





# எரிபொருள் விலையை குறைத்தால் வாழ்க்கைச் செலவு குறைவடையும்

## திட்டம் வகுத்துள்ளோம் என்கிறார் சஜித்



**கொழும்பு, ஜூலை 30**

**உலகச் சந்தையில் எரிபொருள் விலை குறைவடைந்துள்ள நிலையில் இதன் பயன்களை நாட்டு மக்களுக்குப் பெற்றுக் கொடுப்பது அரசின் கடமையாகும். எரிபொருளின் விலையைக் குறைத்தால் போக்குவரத்துச் செலவு, பொருள்களின் விலை என்பன குறைவடைவதுடன், மக்களின் வாழ்வாதார செலவும் குறையும். இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதமர் வேட்பாளர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.**

தெஹிவளை பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வாழ்வாதார பிரச்சினையை எதிர்நோக்கி வரும் நாளாந்த ஊதியம் பெற்றுவாழும் மக்கள், சுயதொழிலாளர்கள் மற்றும் சாதாரண மக்களுக்கு நிவாரணம் பெற்றுக் கொடுப்பதற்காக மாதத்துக்கு 20 ஆயிரம் ரூபாவை வழங்குவோம்.

நாங்கள் ஆட்சியமைத்து 24 மணித்தியாலத்துக்குள் எரிபொருளின் விலையைக் குறைப்போம். உலகச் சந்தையில் எரிபொருள் விலை குறைவடைந்துள்ள நிலையில் இதன் பயன்களை நாட்டு மக்களுக்குப் பெற்றுக் கொடுப்பது அரசின் கடமையாகும். எரிபொருளின் விலையைக் குறைத்தால் போக்குவரத்துச் செலவு, பொருள்களின் விலை என்பன குறைவடைவதுடன், மக்களின் வாழ்வாதர செலவு குறையும். நாங்கள் வழங்கும் 20 ஆயிரம் ரூபா பணம் மற்றும் வாழ்வாதார செலவுகள் குறையும் போது சேமிப்பு அதிகரிக்கும். இதனூடாக மக்களை மையப்படுத்திய பொருளாதார அபிவிருத்தியை முன்னெடுக்க முடியும்- என்றார். (ஒ.5)

# காட்டுப் பூனைகள் சில கரகமாடுகின்றன

## ஒட்டுக்குழுக்களை சாடுகிறார் சிறிதரன்



கிளிநொச்சி, ஜூலை 30

நாங்கள் நிம்மதியாக வாழவேண்டும் என்பதற்கான ஆயிரம் ஆயிரம் வீரர்கள் தங்கள் உயிரைக் கொடுத்து இந்த மண்ணின் விடுதலைக்காக போராடினார்களோ அந்த கிளிநொச்சி, யாழ்ப்பாண மாவட்டங்களில் சில காட்டுப்பூனைகள் இப்போது கரகம் ஆடிக்கொண்டு இருக்கின்றன. இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் சி.சிறிதரன் தெரிவித்தார்.

கிளிநொச்சி கண்ணகி நகர்ப் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பரப்புரைக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:


போர்க் காலத்தில் 3 ஆயிரத்துக்கு மேற்பட்ட இளையோர் காணாமல் ஆக்கப்படவும் அவர்களில் பலர் கொலை செய்யப்படவும் காரணமாக இருந்த டக்ளஸ் தேவானந்தா, அசோக் எனும் பெயரில் இயங்கிய சந்திரகுமார் மற்றும் அரசின் கைக்கூலிகளான பிள்ளையான், கருணா, அங்கஜன் போன்றோர் தற்போது தமிழர்களை மீட்பவர்கள் போலவும் தீர்வு பெற்றுத் தரப் போகின்றோம் எனவும் சொல்லி தமிழ் மக்களின் மாற்று அணியாக தங்களைக் காட்டிக்கொள்கின்றார்கள். நாங்கள் நிம்மதியாக வாழவேண்டும் என்பதற்கான ஆயிரம் ஆயிரம் வீரர்கள் தங்கள் உயிரைக் கொடுத்து இந்த மண்ணின் விடுதலைக்காக போராடினார்களோ அந்த கிளிநொச்சி, யாழ்ப்பாண மாவட்டங்களில் சில காட்டுப்பூனைகள் இப்போது கரகம் ஆடிக்கொண்டு இருக்கிறார்கள். எங்கள் ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்டதன் பின்னர் அரசியல் ரீதியாக இராஜதந்திர ரீதியாக போராடி வருகின்றோம். நம்மவர்கள் ஒட்டுக் குழுக்கள் போல கடந்த காலத்தில் ஆயுதங்களை விரும்பி கையில் எடுத்தவர்கள் அல்லர்.

நாங்கள் இப்போது யாரையும் துப்பாக்கிகளைத் தூக்குங்கள் என்றும் சொல்லவில்லை. எங்கள் உரிமைகள் வேண்டும் என்றே கேட்கின்றோம். அதனைப் பெற அரசியல் ரீதியாக போராடிவருகின்றோம். ஆகவே எங்கள் கைகளை பலப்படுத்த வேண்டிய கடமை தமிழர்களாகிய உங்களிடமே உள்ளது-என்றார். (ஒ.5)




# கூட்டமைப்பினர் என்னை பார்த்து அஞ்சுகின்றனர்

## இப்படிச் சொல்கிறார் விக்கி



யாழ்ப்பாணம், ஜூலை 30

தமிழ்த் தேசியக் கூட்;டமைப்பு மீதோ அல்லது ஏனைய அரசியல் கட்சிகள் மீதோ எனக்கு எவ்வித காழ்ப்புணர்ச்சியும் கிடையாது. ஆனால் அவர்கள் தான் என்னைப் பார்த்து அஞ்சுகின்றார்கள் போலத் தெரிகின்றது. இவ்வாறு வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மானிப்பாயில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரச அதிகாரிகளைக் கொண்டு பிழையான தகவல்களைத் திரட்டுகின்றார்கள். நடவாத நிகழ்வுகளை நடந்ததாகக் கூறுகின்றார்கள். நிதி நிர்வாகத்தில் இலங்கையிலேயே முதற்பரிசைப் பெற்ற எம்மை நிர்வாகம் தெரியாதவர்கள் என்கின்றார்கள். பொய்களை மூடை கட்டி வந்து தமது கூட்டங்களில் அவிழ்த்து விடுகின்றார்கள்.

நான் வாராந்தம் பத்திரிகைகளில் வழங்கி வருகின்ற கேள்வி பதில்கள் மக்களுக்கு ஒரு தெளிவூட்டலை ஏற்படுத்தியிருக்கின்றது.

இதனைக் கலைக்கும் முகமாக தேர்தலுக்கு முதல் நாள் என்மீது கூடுதல் அக்கறை கொண்ட சில பத்திரிகையாளர்கள் இணைந்து என்மீது கேள்விக் கணைகளைத் தொடுக்க ஆயத்தமாகின்றார்கள் என்று அறிந்தேன். உண்மையில் கேள்வி கேட்க விரும்புபவர்கள் அல்லது அரசியல் தெளிவை தமது பத்திரிகை வாயிலாகத் தெரியப்படுத்த விரும்புபவர்கள்; அவர்களின் கேள்விகளை நான் பதிலளிக்கக்கூடிய வகையில் தேர்தலுக்கு முற்கூட்டியே தொடுத்திருக்க வேண்டும். அதைவிடுத்து தேர்தலுக்குமுன்; பதில் கூற முடியாத விதமாகப் பொய்யான அடிப்படையிலான கேள்விக் கணைகளைத் தொடுக்க இருப்பது கோழைத்தனத்தையும் அவர்களின் பயத்தையுமே பிரதிபலிக்கின்றன. நான் போலி வாக்குறுதிகளை அள்ளி வழங்கி அரசியற் தீர்வு பெற்றுத் தருவேன், அரச வேலை பெற்றுத் தருவேன் என்று ஏமாற்றுபவன் அல்லர்.

ஆனால் எமது நிறுவனமயப்படுத்தப்பட்ட செயற்பாடுகளினூடாக மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்ற முடியும் என்ற நம்பிக்கை எனக்குண்டு. ஏற்கனவே புத்திஜீவிகள் பலர் புலத்திலும் நிலத்திலும் எம்முடன் ஒன்றிணைந்து இம் மாற்றத்திற்காக உழைக்கத் தொடங்கிவிட்டார்கள்.

அத்துடன் வடக்கு கிழக்கைச் சேர்ந்த ஐந்து கட்சிகள் ஒன்றிணைந்து செயற்படுகின்றன. கொள்கை மற்றும் அணுகுமுறைகளின் அடிப்படையில் மேலும் பலரை இணைத்துக்கொள்ள எதிர்பார்க்கின்றோம். தற்போது தனியாகப் பிரிந்து நிற்கின்ற அல்லது சுயேச்சையாக களமிறங்கியிருக்கின்ற கட்சிகளில் இருந்து பலர் கொள்கை அடிப்படையில் எம்முடன் வந்து இணைந்துகொள்ள வாய்ப்பிருக்கின்றது. சிறுசிறு பிரச்சினைகள் மற்றும் எதிர்பார்ப்புக்களின் அடிப்படையில் பிரிந்த சக அரசியல் தலைவர்களும் தொண்டர்களும் எம்முடன் வந்து விரைவில் இணைந்து கொள்வார்கள், -என்றார். (ஒ.5)

# எங்களுக்கும் ஒரு சந்தர்ப்பம் தாருங்கள்

## கோருகிறார் குணசீலன்



மன்னார், ஜூலை 30

மீண்டும் தங்களுக்குச் சந்தர்ப்பம் தாருங்கள் என்று கேட்பவர்களை விட புதுமுகமான எங்களுக்கு ஒரு சந்தர்ப்பத்தை தாருங்கள். இவ்வாறு தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் வன்னி மாவட்ட வேட்பாளர் ஜி.குணசீலன் கோரியுள்ளார்.

மன்னாரில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரச தரப்பு மொட்டுச் சின்னத்தில் களமிறங்கியுள்ளது. யானை, தொலைபேசி சின்னங்களிலும் தேசியக் கட்சியைச் சேர்ந்தவர்கள் போட்டியிடுகின்றனர். பேரினவாத கட்சிகளுக்கு ஆதரவாக தமிழ் கட்சிகள் அவர்களுடன் இணைந்து தமிழ் மக்களுடைய வாக்குகளைச் சிதறடித்து தமிழ் மக்களுடைய அரசியற் பலத்தை குறைக்கும் முயற்சிகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றார்கள். வீணை, மெழுகுதிரி சின்னக் கட்சியினர் மற்றும் ஏராளமான சுயேச்சைக் குழுக்கள் இதற்காகவே களமிறக்கப்பட்டுள்ளன.

எமது தேசிய இனப் பிரச்சினைத் தீர்வுக்கான பேரம் பேசும் வல்லமையை மழுங்கடிப்பதே இவர்களின் நோக்கம். தமிழ் மக்களின் பிரச்சினையை அதற்கான தீர்வை எந்தவொரு பேரினவாதக் கட்சியும் ஏற்றுக் கொண்டதாக சரித்திரமே இல்லை. அப்படிப்பட்ட கட்சிகள் தொடர்பில் தமிழ் மக்கள் சிந்திக்கவே கூடாது. தமிழ்த் தேசிய கொள்கையுடன் அடிப்படை பிரச்சினைகளை மனதில் கொண்டு அதனைத் தீர்க்க வேண்டும் என்பதற்காக களமிறங்கியுள்ள கட்சிகள் தொடர்பாக மக்கள் தீர்மானம் எடுக்க வேண்டும்.

பலர் வந்து தங்களுக்கு சந்தர்ப்பம் வழங்குமாறு கேட்பார்கள். அதிலும் குறிப்பாக சிலர் இன்னும் ஒரு சந்தர்ப்பம் தாருங்கள், இன்னும் ஒரு சந்தர்ப்பம் தாருங்கள் என்று சொல்லி மீண்டும் மீண்டும் சந்தர்ப்பம் கேட்பார்கள்.

நாங்கள் இம்முறை கேட்கின்றோம், இன்னுமொரு சந்தர்ப்பம் இன்னுமொரு சந்தர்ப்பம் என்று மீண்டும் மீண்டும் மக்கள் குறிப்பிட்ட வினைத்திறன் இல்லாத அடிப்படைக் கொள்கைகளை தவறவிட்ட கட்சிக்கு வாக்களிப்பதை விட எங்களுக்கு ஒரு சந்தர்ப்பம் தாருங்கள். நாங்கள் சிலவற்றை சாதித்து காட்டுவதற்கு. அந்தச் சந்தர்ப்பத்தை தந்து எங்களுக்கு ஒரு முயற்சியை மேற்கொள்ளுவதற்கான அத்திபாரத்தை இட்டுத் தாருங்கள்- என்றார். (ஒ.5,56)

## சு.க வை மஹிந்த பாதுகாப்பார் அதனடிப்படையிலேயே கூட்டணி

### மைத்திரி நம்பிக்கை



கொழும்பு, ஜூலை 30

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கும் இடையில் எந்தவித முரண்பாடுகளும் இல்லை. பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியைப் பாதுகாப்பார் என்ற நம்பிக்கையில் தான் கூட்டணி அமைத்தோம் என்று கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

தற்போது தேர்தல் காலம் என்ற காரணத்தால், இவ்வாறான விமர்சனங்கள், கருத்துக்கள் முன்வைக்கப்படுவது பெரிய விடயமல்ல. நல்லாட்சிக் காலத்தில் ஜனாதிபதியெனக்கூட கருதாது என்னை விமர்சித்தனர். கட்சியை விமர்சித்தனர். ஆனால் நாம் ஆட்சியைக் கொண்டு சென்றோம். அதேபோல் இப்போது அரசியலுக்காக இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுகின்றன. அதனை நாம் கருத்தில் கொள்ளவில்லை. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மனதளவிலும் பலமான கட்சியாக உள்ளது. மீண்டும் மக்களின் ஆதரவைப் பெற்றுக்கொள்ளவே நாம் முயற்சித்து வருகின்றோம். அதேபோல் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு ஆதரவை வழங்கியதன் மூலமாக ஒரு கணிசமான வாக்குகள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவின் வெற்றியை உறுதிசெய்தது என்பதை அவர்கள் மறந்துவிடக்கூடாது. அதன் விளைவாகவே பொதுத் தேர்தலின் போதும் நாம் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் இணைந்து கட்சியைப் பலப்படுத்தும் வேலைத்திட்டத்தை முன்னெடுத்து வருகின்றோம்-என்றார். (ஐ)

## அலரிமாளிகை மாத்திரமல்ல சிறிகொத்தாவும் எமக்கே

### ஐ.ம.ச. வேட்பாளர் ஹர்சன ராஜகருணா தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 30

எதிர்வரும் பொதுத்தேர்தலில் வெற்றி பெற்று அலரிமாளிகை மாத்திரமன்றி, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவையும் கைப்பற்றுவோம் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட வேட்பாளர் ஹர்சன ராஜகருணா தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

'நாட்டு மக்கள் அனைவரும் வாக்களிக்க வேண்டும். வாக்களிப்பது அனைவரதும் உரிமையாகும். யாருடைய கருத்துகளையும் கருத்திற் கொண்டு வாக்களிப்பதை புறக்கணிக்க வேண்டாம். சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழுவும் நியாயமான முறையில் தேர்தல் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.

குருநாகல் தொல்பொருளியல் சிறப்புரிமை மிக்க கட்டட உடைப்பு தொடர்பில் இதுவரையில் முறையான நடவடிக்கை எடுக்கவில்லை. இது 2 ஆம் புவனேகபாகு மன்னனின் அரச மண்டபம் என்று தெரிவிக்கப்பட்டபோதிலும் அந்த விடயம் தொடர்பில் இன்னமும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

இதில் கவலைக்குரிய விடயம் என்னவென்றால் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் தொடர்ந்தும் அமைதியாக இருப்பதே.

ஸ்ரீலங்கா சுதந்திர முன்னணி நல்லாட்சி அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட்டது போன்று தொடர்ந்தும் இருந்திருந்தால் கட்சி பாதுகாக்கப்பட்டிருக்கும். தற்போது மொட்டுக் கட்சியினர் சுதந்திரக் கட்சிக்கு பலத்த எதிர்ப்பை தெரிவித்து வருகின்றனர்.

இதேவேளை சிறிகொத்தா என்பது ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்களின் உரிமையாகும். இதற்கு எந்தவொரு நபரும் உரிமை கோர முடியாது. எதிர்வரும் பொதுத் தேர்தலில் வெற்றி பெற்று அலரிமாளிகையை பொறுப்பேற்பதுடன், சிறிகொத்தா தொடர்பிலும் நடவடிக்கை எடுப்போம்-என்றார் (ஐ)

## த.தே.ம.முன்னணிக்கு 5 அமைப்புக்கள் ஆதரவு

யாழ்ப்பாணம், ஜூலை 30




எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியினருக்கு, பூரண ஆதரவை வழங்குவதாக வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த 5 அமைப்புகள் கூட்டாகத் தெரிவித்துள்ளன.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், அமைப்புகளின் பிரதிநிதிகள் தமது ஆதரவைத் தெரிவித்தனர். கிராமிய உழைப்பாளர் சங்கம், மாவட்ட மீனவர் ஒத்துழைப்பு இயக்கம், மாவட்ட பூந்தளிர் பெண்கள் அமைப்பு, மாற்றத்துக்கான மாவட்ட இளைஞர் பேரவை, வடமராட்சி கிழக்கு பிரஜைகள் குழு ஆகிய அமைப்புக்கள் ஆதரவு தெரிவித்துள்ளன.

(சு-20)

பாராளுமன்றத் தேர்தல் - 2020
யாழ் தேர்தல் மாவட்டம்

அன்புக்கும் மதிப்பிற்குமுரிய எமது மக்களே!

நேர்மையும் கண்ணியமும் மிகுந்த
அனுபவமும் வெளிப்படைத்தன்மையும் கொண்ட
உங்கள் பிரதிநிதிகளை தெரிவுசெய்யுங்கள்.



6

தருமலிங்கம்
சித்தார்த்தன்
(முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்)



7

பாலச்சந்திரன்
கஜதீபன்
(முன்னாள் மாகாணசபை உறுப்பினர்)

1 2 3 4 5 6 7 8 9 10

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு (TNA)

# அரசியல் அமைப்பின் 19வது திருத்தங்கள் நிலைக்குமா?



கே.வி.தவராசா (ஜனாதிபதி சட்டத்தரணி)

பொதுஜன பெரமுன 19 ஆவது திருத்தத்தை நீக்கப்போவதாகவும் அதற்காக 3/2 பெரும்பான்மையை பொதுமக்களிடம் கோருகின்றது இது சாத்தியமா?

பொதுத் தேர்தலில் வெற்றி பெறவேண்டும் என்ற நோக்கில் மக்களுக்கு வழங்கப்படும் வாக்குறுதியா? 2020 ஆம் ஆண்டு நடைபெறப்போகும் பொதுத் தேர்தலில் வெற்றிபெறும் கட்சியினரால் பிரதமராக தெரிவுசெய்யப்படுபவர் (மகிந்த ராஜபக்ஷ அல்லது சஜித் பிரேமதாஸ) 19ஆவது திருத்தச்சட்டத்தின் மூலம் பகிரப்பட்ட அதிகாரங்களை தியாகம் செய்வார்களா? இலங்கை அரசியல் வரலாற்றில் எவரேனும் அதிகாரங்களை தியாகம் செய்துள்ளனரா?

1931 இல் சர்வசன வாக்குரிமை அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து படிப்படியாக நாம் பழக்கப்படுத்தப்பட்ட அரசாங்க முறைமையின் பிரகாரம் நாட்டுக்கு அரசியல் ஸ்திரத்தன்மையை வழங்கும் நோக்கில் 1978 ஆம் ஆண்டு ஜே.ஆர் ஜெயவர்த்தனவினால் அறிமுகப்படுத்தப்பட்ட அரசமைப்பு இறுதியில் நாட்டை ,உறுதிகுன்றச் செய்வதற்கே வழி வகுத்தது என்பதே யதார்த்தமாகும்.

**இறையாண்மையை விட சக்தி மிகுந்த அதிகாரம் வேறு எதுவும் இல்லை என்பதை பலர் மறந்துவிட்டார்கள் என்ற கருத்துருவாக்கமும் தற்போது வெகுவாக மேலெழுந்துள்ள நிலையில் தற்போதைய அதிகாரப்போட்டிக்கு என்னதான் தீர்வு என்பது அனைத்து பிரஜைகளினதும் வினாவாக உள்ளது. இந்நிலையில் ஸ்திரத்தன்மைக்காக தீர்வுகளை நோக்கி பயணிக்க வேண்டியமையின் அவசியத்தினையும் யதார்த்த பூர்வமானதும் நடைமுறைச் சாத்தியமானதுமான விடயங்களையும் பார்க்க வேண்டும்.**

1978 அரசமைப்பின் கீழ் அரசமுறைமை குறித்து விவாதித்த டாக்டர் கொல்வின் ஆர்.டி.சில்வா அது நாடாளுமன்ற ஜனநாயகம் என்ற வெளிச்சட்டையைப் போர்த்திய யாப்பு ரீதியான ஜனாதிபதி முறை சர்வாதிகாரம் என்று குறிப்பிட்டிருந்தார். அது உண்மை என்பது நிரூபணமாகியுள்ளது.

18ஆவது திருத்தத்தின் ஊடாக ஜனாதிபதியின் அதிகாரங்கள் அதிகரிக்கப்பட்டமை ஜனநாயகமயமாக்கலின் அடிப்படையில் எழுந்த மக்கள் கோரிக்கையின் விளைவான ஒரு செயற்பாடு அல்ல. மாறாக அது அந்த நேரத்தில் ஜனாதிபதியாக பதவி வகித்த ஒரு அரசியல் தலைவரின் மனவிருப்பத்தின் நிறைவேற்றமேயாகும்.

அது இலங்கையின் ஜனநாயகத்தை, பிரஜைகளின் சுதந்திரங்களை, உரிமைகளை நீதித்துறை உட்பட ஜனநாயக நிறுவனங்களை சேதப்படுத்தியது. அந்தச் சேதத்தில் இருந்து மீள்வதற்கான போராட்டம் பல்வேறு வடிவங்களில் நடைபெற்றிருந்தது. குறிப்பாக நாட்டில் நிலவிய இத்தகைய இருண்ட யுகத்தினை அகற்றி ஜனநாயக விழுமியங்கள் நிறைந்த கட்டமைப்புக்களை வலுவாக ஸ்தாபித்து பிரயோக ரீதியான வெற்றிகளை அடைந்து கொள்ளும் இலக்குடன் 2015 ஜனவரி 8ஆம் திகதிக்கு பின்னரான ஆட்சியாளர்களால் நடைமுறையில் உள்ள 1978ஆம் ஆண்டு அரசமைப்பில் 19ஆவது திருத்தச் சட்டம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

ஜனநாயக வெறுப்பை ஊட்டுகின்ற 18ஆவது திருத்தத்தினை நீக்கிவிட்டதாகக் கூறினாலும் ஒக்டோபர் 26இற்கு பின்னரான நிலைமைகளிருந்து தற்போது வரையில் 19ஆவது திருத்தமும் பின் கதவின் வழியாக கொண்டுவரப்பட்டு ஜனநாயகப் போராட்டத்தின் பயன்கள் மறுதலிக்கும் வகையில் அதிகாரத்தில் இருக்கும் தனிநபர் ஒருவரின் விருப்பு வெறுப்புகளுக்குள் சிக்க நிற்கின்ற நிலைமைகளே தொடர்வதாக உள்ளன.

ஒக்ரோபர் அரசியல் புரட்சியின் பின்னர் நிறைவேற்றதிகாரம், சட்டவாக்கம் மற்றும் நீதித்துறை ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாடுகள் உச்சக்கட்டத்தையடைந்து மும்முனை முட்டிமோதல்கள் எழுந்திருந்த நிலையில், நாட்டின் ஸ்திரத்தன்மையையும் எதிர்காலத்தினையும் கேள்விக்குறியாக்கியது.

### இறையாண்மை

இறையாண்மையைவிட சக்தி மிகுந்த அதிகாரம் வேறு எதுவும் இல்லை என்பதைப் பலர் மறந்துவிட்டார்கள் என்ற கருத்துருவாக்கமும் தற்போது வெகுவாக மேலெழுந்துள்ள நிலையில் தற்போதைய அதிகாரப்போட்டிக்கு என்னதான் தீர்வு என்பது அனைத்து பிரஜைகளினதும் வினாவாக உள்ளது. இந்நிலையில் ஸ்திரத்தன்மைக்காக தீர்வுகளை நோக்கி பயணிக்க வேண்டியமையின் அவசியத்தினையும், யதார்த்தபூர்வமானதும் நடைமுறைச் சாத்தியமானதுமான விடயங்களையும் பார்க்க வேண்டும்.

### 19ஆவது திருத்தம்

2015 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 15ம் திகதி அவசர அவசரமாகத் தயாரிக்கப்பட்ட பத்தொன்பதாவது திருத்தத்தில் அடங்கியுள்ள ஒரு சில ஏற்பாடுகள் தெளிவானதாக இல்லாததோடு ஜனாதிபதியும் பிரதமரும் வெவ்வேறு அரசியல் கட்சிகளிலிருந்து தெரிவு செய்யப்படுவார்களாயின் நல்லாட்சி அரசில் நடைபெற்றதுபோல் பிரதமரின் அதிகாரத்துக்கு இடைஞ்சலாக ஒரு தடையைப் போடுவதற்கு ஜனாதிபதிக்கு கணிசமானளவு அதிகாரம் இருக்கும்.

அத்துடன் மீண்டும் மீண்டும் குழப்ப நிலைக்கும் கூடிய சட்டப் பிரச்சினைகளுக்கும் இட்டுச் செல்லும். இந்நிலையில் ஒரே கட்சியிலிருந்து ஜனாதிபதியும் பிரதமரும் தெரிவுசெய்யப்படுவார்களாயினும் அவர்களிடையே அரசியல் அமைப்பின் விசேடமாக திருத்தங்கள், மாற்றங்கள் விடயத்தில் ஒத்த கருத்து காணப்படாவிடின் (அரசியல் அதிகாரம் இரத்தஉறவுகளுக்கு அப்பாற்பட்டது)கடந்த ஆட்சியில் நல்லாட்சியென தம்மை கூறிக்கொண்ட அரசுக்கு இறுதியில் ஏற்பட்ட அதே நிலைமை மீண்டும் ஆட்சியமைக்கப் போகின்ற இலங்கை அரசியலில் ஏற்படமாட்டாது என எதிர்பார்க்க முடியாது.

### 18ஆவது திருத்தம்

18ஆவது திருத்தத்தின் ஊடாக ஜனாதிபதியின் அதிகாரங்கள் அதிகரிக்கப்பட்டமை ஜனநாயக மயமாக்கலின் அடிப்படையில் எழுந்த மக்கள் கோரிக்கையின் விளைவான ஒரு செயற்பாடு அல்ல. மாறாக அது அந்த நேரத்தில் ஜனாதிபதியாக பதவி வகித்த ஒரு அரசியல் தலைவரின் மனவிருப்பத்தின் நிறைவேற்றமேயாகும் என்பதை ஏலவே பார்த்தோம்.

அது இலங்கையின் ஜனநாயகத்தை பிரஜைகளின் சுதந்திரங்களை, உரிமைகளை நீதித்துறை உட்பட ஜனநாயக நிறுவனங்களை சேதப்படுத்தியது. அந்தச் சேதத்தில் இருந்து மீள்வதற்கான போராட்டம் பல்வேறு வடிவங்களில் நடைபெற்றிருந்தது. குறிப்பாக நாட்டில் நிலவிய இத்தகைய இருண்ட யுகத்தினை அகற்றி ஜனநாயக விழுமியங்கள் நிறைந்த கட்டமைப்புக்களை வலுவாக ஸ்தாபித்து பிரயோக ரீதியான வெற்றிகளை அடைந்து கொள்ளும் இலக்குடன் 2015 ஜனவரி 8ஆம் திகதிக்கு பின்னரான ஆட்சியாளர்களால் நடைமுறையில் உள்ள 1978ஆம் ஆண்டு அரசியல் அமைப்பில் 19ஆவது திருத்தச் சட்டம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

### ஜனாதிபதியின் அதிகாரங்கள்

2015ஆம் ஆண்டு வைகாசி மாதம் 15ஆம் திகதி அவசர அவசரமாகத் தயாரிக்கப்பட்ட பத்தொன்பதாவது திருத்தத்தில் அடங்கியுள்ள ஒரு சில ஏற்பாடுகள் தெளிவானதாக இல்லாததோடு ஜனாதிபதியும் பிரதமரும் வெவ்வேறு அரசியல் கட்சிகளிலிருந்து தெரிவு செய்யப்படுவார்களாயின் மீண்டும் மீண்டும் குழப்ப நிலைக்கும் கூடிய சட்டப் பிரச்சினைகளுக்கும் இட்டுச் செல்லும் வகையிலேயே உள்ளன.

### ஜனாதிபதியின் அதிகாரம் நீக்கப்படமுடியாதது

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை அதிகாரபூர்வமாக இல்லாதொழிக்கப்படவில்லை என்பதோடு

(தொடர்ச்சி)

# அரசியல் அமைப்பின்...

19ஆவது திருத்தம் தொடர்பான தனது தீர்ப்பில் உயர் நீதிமன்றம் ஜனாதிபதியின் ஒரு சில அதிகாரங்கள் சர்வஜன வாக்கெடுப்பொன்று இன்றி நீக்கப்பட முடியாது என்று விசேடமாக குறிப்பிட்டுள்ளது. நடைபெறப்போகும் பொதுத்தேர்தலில் பிரதமர் பிறிதொரு கட்சியலிருந்து தெரிவு செய்யப்படுவாராயின் பிரதமரின் அதிகாரத்துக்கு இடைஞ்சலாக ஒரு தடையைப் போடுவதற்கு அவருக்கு கணிசமானளவு அதிகாரம் இருக்கும்.

இந்த அரசியலமைப்பின் கீழ் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச 2019ஆம் ஆண்டுத் தேர்தலில் மக்களினால் நேரடியாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளரார் அவரே ஆட்சித் தலைவரும், ஆட்சித் துறையினதும் அரசாங்கத்தினதும் தலைவரும் ஆயுதந் தாங்கிய படைகளின் படைத்தலைவராகவும் அமைச்சரவையின் தலைவருமாவார். அதனால் பத்தொன்பதாவது திருத்தத்தோடு ஜனாதிபதியின் அதிகாரங்கள் பெருமளவு குறைக்கப்பட்டுள்ளன என்றும் அடுத்த ஜனாதிபதிக்கு எந்தவொரு அமைச்சர் பதவியையும் வகிக்க முடியாதிருக்குமென்றும் பெரும்பாலும் அவர் ஒரு சம்பிரதாயபூர்வத் தலைவராகவே இருப்பார் என முன்வைக்கப்படும் வாதம் சட்டரீதியாக வலுவிலக்கப்பட்டது.

**தேர்தலால் மாத்திரம் தீர்க்க முடியுமா?**

இன்றைய அரசியலில் உள்ள ம்க்கிய பிரச்சினைகளை அதாவது அரசியல் அமைப்பிற்கான பத்தொன்பதாவது திருத்தினால் மேலும் சிக்கலடைந்துள்ள அரசாங்க முறைமையின் உள்ளார்ந்த தவறுகளிலிருந்து எழும் பிரச்சினைகளை தேர்தலால் மாத்திரம் தீர்க்க முடியுமா என்ற வினா எழுகின்ற போதிலும் அவ் வினாவுக்கான விடை தற்போதய சூழ்நிலையில் சாத்தியமாகாது.

எவ்வாறாயினும் மற்றைய கட்சிகளின் ஆதரவின்றி விகிதாசாரத் தேர்தல் முறையில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றுக்கொள்ள முடியாது என்பதுடன் நாட்டுக்கு ஏற்படும் விளைவுகள் என்னவாகவிருப்பினும் பல ஆண்டுகளாக மாறி மாறி ஆட்சிக்கு வரும் அரசுகள் நடந்து கொண்டதுபோல தேர்தலில் வெற்றி வாய்ப்பை பெறும் கட்சியும் தொடர்ந்தும் நடந்து கொள்ளுமா? இந்தச் சூழ்நிலையில் நடைபெறப்போகும் தேர்தல் ஒன்றில் வெற்றிபெறும் எந்தவொரு கட்சியும் இம்முறைமையை நாட்டின் நலனைக் கருத்தில்கொண்டு மாற்றியமைக்குமென எதிர்பார்ப்பது சிரமமாகும். கடந்த காலத்தில் நாம் கண்ணுற்ற போக்கு நாட்டிற்கு ஏற்படும் விளைவுகளைப் பொருட்படுத்தாது வெற்றி பெறுவோர் தமது பதவிக் காலத்தில் தமது பதவியை உறுதிப்படுத்திக்கொள்ள முயலுவர் என்பதாகும்.

**சஜித் பிரேமதாச பிரதமராவாரா?**

ஜனாதிபதி தேர்தலில் பொதுஜன பெரமுன கட்சியின் சார்பில் போட்டியிட்ட கோத்தாபய ராஜபக்ச வெற்றி பெற்றுபதவியில் உள்ளார் நாடாளுமன்றத் தேர்தலில் பிறிதொரு கட்சி நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையைப் பெற்றுக் கொள்வதுமான 2015 இல் நடைபெற்றதைப் போன்றதொரு நிலைமையில் மீண்டும் சிக்கிக்கொள்வது மிகமிக அரிதான விதிவிலக்கான சூழ்நிலையாகவே காணப்படுகின்றது. அவ்வாறாதொரு சூழ்நிலையேற்படுமாக இருந்தால் அது ஸ்திரமற்ற தன்மையையே ஏற்படுத்தும்.

**சலிப்படைந்த மக்கள்**

18ஆவது திருத்தத்தின் ஊடாக ஜனாதிபதியின் அதிகாரங்கள் அதிகரிக்கப்பட்டமையை 19ஆவது திருத்தச்சட்டத்தின் மூலம் அதிகாரங்கள் பகிரப்பட்டு அந்த அதிகாரங்களை 2015 ஜனவரி 8ஆம் திகதி முதல் நாடாளுமன்றம் கலைக்கப்படும் வரை நல்லாட்சியில் பிரதமராக பதவி வகித்த ரணில் விக்கிரமசிங்க கையாண்டார்.

தொடர்ந்தும் 2020 ஆம் ஆண்டு நடைபெறப்போகும் பொதுத்தேர்தலில் வெற்றிபெறும் கட்சியினரால் பிரதமராக தெரிவு செய்யப்படுபவர் (மகிந்த ராஜபக்ச அல்லது சஜித் பிரேமதாச) 19ஆவது திருத்தச்சட்டத்தின் மூலம் பகிரப்பட்ட அதிகாரங்களை தியாகம் செய்வார்களா? இலங்கை

அரசியல் வரலாற்றில் எவரேனும் அதிகாரங்களை தியாகம் செய்துள்ளனரா? தற்போதைய ஸ்திரமற்ற நிலையினால் அரசு மற்றும் அரசியல் முறைமை ஆகியவற்றின் மீதும் மக்கள் முழுமையாக சலிப்படைந்துள்ளமை கவனத்தில் எடுக்கப்பட வேண்டியதொன்றாகும். வெஸ்ட்மின்ஸ்டர் முறைமையைப் போலன்றி தற்போதைய நாடாளுமன்ற முறைமையின் கீழ் ஜனாதிபதி பதவியையும் உள்ளடக்கும் அரசாங்கத்தை மாற்ற முடியாது. எனவே ஸ்திரத்தன்மையற்ற எந்தவொரு நிலைமையும் தீர்வின்றி நீடித்துச் செல்லலாம். அதுவே இப்பொழுது நடந்து கொண்டிருக்கின்றது தொடர்ந்தும் நடைபெறப்போகின்றது. தற்போதுள்ள பத்தொன்பதாவது திருத்த ஜனாதிபதி முறைமையைத் திருத்துவதன் மூலம் அல்லது எமது நாட்டின் தேவைக்கு ஏற்ப சரிசெய்யப்பட்ட காலத்தால் பரீட்சிக்கப்பட்ட வெஸ்ட் மினிஸ்டர் முறைமைக்கு திரும்பிச் செல்வதன் மூலம் மட்டுமே இதனைச் செய்யலாம் என அரசியல் விமர்சகர்கள் கருத்து வெளியிட்ட போதிலும் அவ்வாறு நடைபெறும் சாத்தியக்கூறுகள் அறவே காணப்படவில்லை.

**அரசியல் பிரச்சனைகள்**

அதிகாரங்கள் பகிரப்படுவதால் அரசியல் பிரச்சனைகள் தீர்க்கப்படலாம் என்ற நம்பிக்கையில் மிகச் சிரமத்தின் மத்தியில்ஆட்சிக்கு கொண்டுவரப்பட்ட நல்லாட்சி அரசில் விரைவாகக் கொண்டுவரப்பட்ட 19 ஆம் திருத்தத்தினால் பகிரப்பட்ட அதிகாரங்களை பதவியில் இருந்தவர்களே அனுபவித்தனர் இறுதியில் ஒருவரையொருவர் குற்றம்சாட்டி தங்களின் காலத்தை நிறைவு செய்தனர்.

**நாட்டின் நலனில் அக்கறையின்மை**

இந்தச் சூழ்நிலையில் நடைபெறப்போகும் தேர்தலில் வெற்றிபெறும் எந்தவொரு கட்சியும் இம்முறைமையை நாட்டின் நலனைக் கருத்தில்கொண்டு மாற்றியமைக்குமென எதிர்பார்ப்பது சிரமமாகும். கடந்த காலத்தில் நாம் கண்ணுற்ற போக்கு நாட்டுக்கு ஏற்படும் விளைவுகளைப் பொருட்படுத்தாது வெற்றிபெறுவோர் தமது பதவிக் காலத்தில் தமது அதிகாரத்தை உறுதிப்படுத்திக்கொள்ள முயல்வர் என்பதாகும்.

நாடு எதிர்நோக்கும் இன்றைய சிக்கல்நிலை நிரந்தரமாகத் தீர்க்கப்பட வேண்டுமாயின் அனைத்துப் பிரதான கட்சிகளும் ஒன்றிணைந்து சில அரசியல் உறுதிப்பாட்டைக் கொண்டுவருவதற்கு தேவையான மாற்றங்களைச் செய்வதே மிகவும் பொருத்தமான விடயமாகும். நடைபெறுமா?

**யதார்த்த நிலைமை**

ஜே.ஆர் ஜெயவர்த்தனவால் உருவாக்கப்பட்ட அரசமைப்பின் உட்பொருளை மாற்றி மிகக் குறுகிய காலப்பகுதியில் அதிகளவான திருத்தங்களினால் மாற்றியமைக்கப்பட்டுள்ளது. இத்திருத்தங்களுள் பெரும்பாலானவை பதவியிலிருந்தவர்களின் விருப்பங்களுக்கு பொருந்தக்கூடியதாக செய்யப்பட்டதேயன்றி நாட்டின் நலனில் அறிமுகப்படுத்தப்படவில்லை. மக்கள் விருப்புக்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருக்கவில்லை என்பதே உண்மை.

# உள்ளூராட்சி அமைப்புக்களின் செயற்பாடுகள் சிறக்கவேண்டும்

## அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

மன்னார், ஜூலை 30

உள்ளூராட்சி அமைப்புக்களிடம் வெளிக்கொணரப்படாது இருக்கும் கட்டமைப்புக்களை வெளிக்கொணருவதன் மூலம் மக்களின் நாளாந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய நிலை ஏற்படும் என்று வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் திருமதி எஸ்.மோகநாதன் தெரிவித்தார். வடக்கு மாகாண சபையின் குறித்தொதுக்கப்பட்ட ஏழு மில்லியன் ரூபா நிதித் திட்டத்தின் கீழ் மன்னார் உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கான விடுதி கட்டடத்தை வட மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சாள்ஸ் நேற்று முன்தினம் திறந்து வைத்தார். இந்த நிகழ்வில் கலந்து



கொண்டபோதே வட மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் திருமதி எஸ்.மோகநாதன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது; நாங்கள் முன்பு நினைத்தோம் சகல அதிகாரங்களும் மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகத்திடம்தான் உள்ளன என்று. ஆனால் உண்மையில் உள்ளூராட்சித் திணைக்களத்திடமும், பிரதேச சபைகளிடமும் தான் மக்களுக்குச் சிறந்த சேவையாற்றக்கூடிய கட்டமைப்புக்கள் காணப்படுகின்றது. ஆனால் இவைகள் உண்மையில் இன்னும் வெளிக்கொணரப்படாது இருக்கின்றன. தற்பொழுது உள்ள உள்ளூராட்சிப் பணிப்பாளர் மிகவும் சிறந்தவர். இவரின் காலத்தில் இவைகளை வெளிக்கொண்டுவரும் பட்சத்தில் உள்ளூராட்சி அமைப்புக்கள் சிறந்து விளங்கும் என நம்புகின்றோம். பிரதேச சபைகள் நகர சபைகள் ஒரு மனிதனின் இறப்பின் நல்ல பக்கம் வரை தங்கள் சேவையைச் செய்யக்கூடிய நாளாந்த மனித வாழ்க்கையோடு இணைந்துள்ளதுதான் -என்றார். (ஐ)

போதைப்பொருள்கள் தொடர்பில் தகவல் வழங்

# மின்னஞ்சல், தொலைந ல்

# இலக்கம் அறிமுகம்

கொழும்பு, ஜூலை 30

போதைப்பொருள்கள், குற்றச்செயல் கும்பல்களின் றுப்
பினர்கள் மற்றும் போதைப்பொருள் வர்த்தகர்கள் டர்
பான தகவல்களை வழங்குவதற்காக, மின்னஞ்ச ழக
வரியும், தொலைநகல் இலக்கமும் பொலிஸ் தலை மய
கத்தால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

இது தொடர்பான தகவல்களைப் பொதுமக்கள் வழ வ
தற்காக 1997, 1917 எனும் தொலைபேசி இலக் ள்
ஏற்கனவே அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

இந்தநிலையிலேயே, மின்னஞ்சல் முகவரியும் ல
நகல் இலக்கமும் தற்போது அறிமுகப்படுத்தப்பட் ன
என பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இதற்கமைய, போதைப்பொருள்கள் தொடர்பான ல்
களை 1997@police.lk எனும் மின்னஞ்சல் ரி
ஊடாக வழங்க முடியும். அத்துடன், குற்றச்செயல் ல்
மற்றும் போதைப்பொருள் வர்த்தகர்கள் தொடர்ப க
வல்களை 1917@police.lk எனும் மின்னஞ்சல் ரி
ஊடாக வழங்க முடியும். மேலும், 011 2440 44 ம்
தொலைநகல் இலக்கம் ஊடாகவும் பொதுமக்கள் ல்
களை வழங்க முடியும் என பொலிஸ் ஊடகப்பிரி ரி
வித்துள்ளது. )

# இலங்கை அரசை ஜெனிவாவில் பிணையெடுத்தவர் டக்ளஸ்

## போட்டுத் தாக்குகிறார் சுரேஷ் பிரேமச்சந்திரன்

**யாழ்ப்பாணம், ஜூலை 30**
**ஜெனிவாவிலுள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபைக்குச் சென்று இலங்கையில் இனப்படு கொலை நடைபெறவில்லை என்று பேசியவர்தான் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா. – இவ்வாறு தெரிவித்தார் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் வேட்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன்.**

மானிப்பாயில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் பங்கேற்று கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
ஜனாதிபதியாக கோத்தாபய இருக்கின்றார். தேர்தல் முடிவடைந்த பின்னர் மஹிந்த ராஜபக்ஷ பிரதமராக வர இருக்கின்றார். ராஜபக்சக்கள் இருக்கக்கூடிய அரசு எவ்வாறு இருக்கும் என்பது எல்லோருக்கும் தெரியும். கடந்த காலத்தில் மஹிந்த ராஜபக்ச ஜனாதிபதியாக இருந்தார். கோத்தாபய ராஜபக்ஷ பாதுகாப்புச் செயலராக இருந்தார். இவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான் பல்லாயிரக் கணக்கான மக்கள் கொல்லப்பட்டார்கள். ஆயிரக்கணக்கான இளையோர் காணாமல் ஆக்கப்பட்டார்கள். இன்று அதே ஆட்சி மீண்டும் வருகின்றது. கோத்தாபய தான் முழுக்க சிங்களவாக்குகளாலே தெரிவுசெய்யப்பட்டவன் என்பதைத் தெளிவாகக் கூறியிருக்கின்றார். அவர்கள் எவ்வாறு நடந்து கொள்வார்கள் என்பது வெளிப்படையானது.
இந்தத் தேர்தலில் களமிறங்கி இருப்பவர்கள் தமிழ் மக்களுடைய பாதுகாப்பை உத்தரவாதப்படுத்துவார்களா? சிங்களக் குடியேற்றங்களை தடுத்து நிறுத்துவார்களா? அது பற்றிப் பேசுவார்களா? அமைச்சர்களாக வந்தால் தடுத்து நிறுத்துவார்களா? கடந்த காலத்தில் இவர்கள் அமைச்சர்களாக இருந்தபொழுது அரசு என்னவெல்லாம் செய்தார்களோ அதற்கு ஆமாம் சாமி போட்டார்களே தவிர அதற்கு எதிராகச் செயற்பட்டதில்லை. டக்ளஸ் தேவானந்தா ஜெனிவா சென்று இலங்கையில் இனப்படுகொலை நடைபெறவில்லை என்றுதான் பேசினார். பல ஆயிரக் கணக்கான மக்கள் கொல்லப்பட்ட நிலையில் ஜெனிவாவுக்குச் சென்று இலங்கை அரசைக் காப்பாற்றியவர் அவர். நாங்கள் நம்பி வாக்களித்த கூட்ட மைப்பினரும் இன்று தமது கொள்கைகளில் இருந்து விலகி அவர்களும் அமைச்சர்களாவதற்கு தங்களுக்கு வாக்களியுங்கள் என்று மக்க ளிடம் கேட்கின்றார்கள்- என்றார். (ஒ,5)

## தேர்தல் முறைப்பாடுகள்

# 5400

கொழும்பு, ஜூலை,30
நாடாளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர், தேர்தல் தொடர்பாக இதுவரையில் மொத்தமாக 5 ஆயிரத்து 400 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்று தேர்தல்கள் ஆணைக்குழு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ மத்திய நிலையத்துக்கு 1,020 முறைப்பாடுகளும், மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ மத்திய நிலையத்துக்கு 4 ஆயிரத்து 380 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன. இந்தநிலையில், கடந்த 26ஆம் திகதி மாலை 4 மணி முதல் மறுநாள் 27ஆம் திகதி மாலை 4 மணி வரையான 24 மணித்தியால காலப்பகுதியில் மட்டும் 164 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ மத்திய நிலையத்தில் 9 முறைப்பாடுகளும், மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ மத்திய நிலையத்தில் 155 முறைப்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
இதேவேளை, வன்முறைகள் தொடர்பில் இதுவரையில் எவ்வித முறைப்பாடுகளும் கிடைக்கவில்லை எனவும், தேர்தல்கள் ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது. (அ,22)

## அங்கஜன், விஜயகலாவுக்கு வாக்களிப்பது

# தமிழின அழிப்பை நாங்களே ஏற்றுக் கொள்வதற்கு சமம்

## கூறுகிறார் ஐங்கரநேசன்

யாழ்ப்பாணம், ஜூலை 30
நாடாளுமன்றத் தேர்தலில் வடக்கு கிழக்கில் தமிழ்க் கட்சிகளைவிடத் தென்னிலங்கைக் கட்சிகளே அதிகம் போட்டியிடுகின்றன. இலங்கையில் காலத்திற்குக் காலம் இனக்கலவரங்களைத் தூண்டிவிட்ட கட்சிகளும் இனவழிப்பை மேற்கொண்ட கட்சிகளும் தமிழர்கள் எல்லாவற்றையும் மறந்துவிடுவார்கள் என்ற நினைப்பில் இங்கே களமிறங்கியுள்ளன. இக்கட்சிகளின் வேட்பாளர்களான அங்கஜன் இராமநாதன், விஜயகலா மகேஸ்வரன் போன்றோர் தமிழர்களாக இருந்தாலும் நாங்கள் வாக்களிப்பது தமிழின அழிப்பை நாங்களே ஏற்றுக்கொண்டது போலாகிவிடும். இது சர்வதேசத்திற்குப் பிழையான செய்தியையே சொல்லும் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவரும் நாடாளுமன்ற வேட்பாளருமான பொ.ஐங்கரநேசன் எச்சரித்துள்ளார். தேர்தல் பரப்புரைக் கூட்டம்



புத்தூர் கிழக்கில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றபோதே முதன்மை வேட்பாளரான பொ.ஐங்கரநேசன் இவ்வாறு எச்சரித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
ராஜபக்ஷ சகோதரர்களைப் போன்றே சரத்பொன்சேகாவும் தமிழினப் படுகொலைக் குற்றவாளிதான். ஆனாலும் போர் முடிந்த கையோடு அவரின் கைகளிலுள்ள ரத்தம் காய்வதற்கு முன்பாகவே அவருக்கு வாக்களிக்குமாறு எங்களது தலைவர்கள் வேண்டியிருந்தார்கள்.
தமிழ்த் தலைமைகள் ஆதரித்த மைத்திரிபால சிறிசேனவும் போரை முன்னெடுத்த அரசில் பிரதிப் பாதுகாப்பு அமைச்சராக இருந்தவர் என்ற வகையில் இவரும் போர்க்குற்றவாளியே. எமது தலைமைகள் ஜனாதிபதியாக ஆக்குவதற்குக் கடும் பிரயத்தனம் மேற்கொண்ட ரணில் விக்கிரமசிங்கவும் இனப்படுகொலைப் போரை ஆதரித்தவர்தான்.
காலத்திற்குக் காலம் ஜனாதிபதித் தேர்தலின்போது தமிழ்மக்களை சிங்களக் கட்சிகளுக்கு வாக்களிக்கப் பழக்கியதாலேயே நாடாளுமன்றத் தேர்தல்களிலும் பேரினவாதக் கட்சிகளுக்கு தமிழ்மக்களில் ஒரு தொகையினர் அதன் விளைவுகளை அறியாது வாக்களித்து வருகின்றனர். இந்த நம்பிக்கையிலேயே இக்கட்சிகளும் தொடர்ந்தும் இங்கு போட்டியிட்டு வருகின்றன. இவர்களுக்கு வாக்களித்து இவர்கள் நிகழ்த்திய இனக்கலவரங்களையும் இனப்படுகொலையும் நாங்கள் ஏற்றுக்கொண்டவர்களாக ஆகிவிடக் கூடாது. எனவே இவர்களை அறவே நிராகரிப்போம் - என்றார். (ஒ,5)

# தேர்தல் கடமையில் 84 ஆயிரம் பொலிஸ்!

கொழும்பு, ஜூலை,30
எதிர்வரும் பொதுத் தேர்தல் பாதுகாப்பு நடவடிக்கைக்காக சுமார் 84 ஆயிரம் பொலிஸ் மற்றும் சிவில் பாதுகாப்புப் படையினரை பணியில் ஈடுபடுத்துவதற்கு தீர்மானிக்கப்பட் டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான ஜாலிய சேனாரத்ன தெரிவித்துள்ளார்.



கொழும்பில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அத்துடன் பொதுத்தேர்தலுக்காக 75 ஆயிரம் பொலிஸாரையும் 9 ஆயிரம் சிவில் பாதுகாப்பு படையின்ரையும் சேவை யில் ஈடுபடுத்த திட்டமிட்டுள்ளதாக வும் குறிப்பிட்டார். கொவிட்19 அச்சுறுத்தல் காரணமாக விதிக்கப்பட்டுள்ள சுகாதார வழிமுறைகள் தேர்தல் காலத்தில் பின்பற்றப்படுகிறதா என்பது பற்றி பாதுகாப்புப் பிரிவினர் மிகுந்த கவனம் செலுத்தவுள்ளதாகவும் அவர் கூறினார். (அ)



# தமிழ் சிங்கள பிரச்சினைகளுக்கு பிக்குகளே முதன்மைக் காரணம்

## விடுதலைப் புலிகள் மக்கள் பேரவை குற்றச்சாட்டு

வவுனியா,ஜூலை 30

தமிழர்களுக்கும், சிங்களவர்களுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள பிளவுகளுக்கு ஆட்சியாளர்களை விட பௌத்த பிக்குகளே காரணம்.

இவ்வாறு விடுதலைப் புலிகள் மக்கள் பேரவையின் பிரதித்தலைவர் செ.அரவிந்தன் தெரிவித்தார்.

வவுனியா தமிழ் ஊடகவியலாளர் சங்க அலுவலகத்தில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சமஷ்டியைக் கோரினால் வடக்கு கிழக்கில் இரத்த ஆறு ஓடும் என்று பௌத்த துறவிகள் தெரிவிக்கின்றனர். உண்மையில் சமஷ்டி தொடர்பான அறிவற்றவர்களாகவே அவர்கள் இருக்கின்றனர்.

1926 இல் சமஷ்டியை முதல் முதலாகக் கோரியது சிங்கள மக்கள் தான். பண்டாரநாயக்கவும் அது தொடர்பான முன்மொழிவுகளை வைத்தார்.

சமஸ்டி தொடர்பான அறிவற்றவர்களாக அரசியல் மேடைகளிலே அவர்கள் பேசுவது அவர்களின் துறவறத்துக்கு துரோகம் இழைப்பதாகவே பார்க்க முடியும். இந்த நாட்டில் இனக்கலவரங்களை முன்னெடுத்ததில் பௌத்த பிக்குகள் பிரதான இடத்தை வகிக்கின்றனர். அரசியல் கருத்துக்களைக் கூறுவது துறவிகளின் செயற்பாடு அல்ல. எனவே அறம் சார்ந்து அன்பைப் போதிக்கும் கருத்துக்களை அவர்கள் முன் வைக்க வேண்டும். சிங்கள மக்கள் இந்த விடயத்தில் ஏமாறக் கூடாது.

விடுதலைப் புலிகளால் உருவாக்கப்பட்ட கூட்டமைப்பு சமஷ்டிக் கொள்கையில் உறுதியுடன் செயற்படுவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் இன்று அந்த நம்பிக்கை தளர்ந்து போயிருக்கின்றது.

தனிநாட்டுக்காகப் போராடிய நாங்கள் சமஷ்டிக் கொள்கையின் அடிப்படையிலாவது எங்களுக்கான தீர்வுகள் வழங்கப்பட வேண்டும் என்பதில் தெளிவாக இருக்கின்றோம் - என்றார். (சு-110)

## ராஜபக்ஷக்களும் கூட்டமைப்புக்கும் இடையில் இரகசிய பேச்சாம்!!!

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வெல்ல வைப்பதற்கு ராஜபக்ஷக்கள் முழுமையான ஒத்துழைப்புக்களை வழங்குகின்றனர் என்று வவுனியா மாவட்ட பிரஜைகள் குழு தெரிவித்துள்ளது. இது தொடர்பில் அந்த அமைப்பு அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கோத்தாபய ராஜபக்ஷ தலைமையிலான தாமரை மொட்டுக் கட்சியே கொழும்பில் ஆட்சி அமைக்கப் போகின்றது. எனவே தாங்கள் கையாளக்கூடிய, தமது அரசியல் தீர்மானங்களுக்கு ஒத்து இசைந்து போகக் கூடிய, ஒரு தரப்பே வடக்கு, கிழக்கில் இம்முறை தேர்தலில் அதிக ஆசனங்களுடன் வெல்ல வேண்டும் என்று ராஜபக்ஷ குடும்பத்தினர் விரும்புகின்றனர்.

தமக்குப் பொருத்தமான தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை தேர்தலில் வெல்ல வைக்க ராஜபக்ஷக்கள் தம்மால் ஆன அனைத்து ஒத்தாசை, உதவிகளையும் வழங்குகின்றனர். இதற்காக குறித்த இரண்டு தரப்பும் ஏற்கனவே இரகசிய பேச்சுக்களில் ஈடுபட்டு இந்த விடயத்தில் இணக்கமும் கண்டுள்ளனர். தமிழ் மக்களை கூட்டமைப்புக்கு வாக்களிக்கச் செய்ய உற்சாகப்படுத்தும் வகையில், ஊக்குவிக்கும் வகையில் 'தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழீழம் கேட்கிறது. புலிகள் கேட்டதை விடவும் அதிகமான அதிகாரங்களை கூட்டமைப்பு கோருகிறது' என்று ராஜபக்ஷ தரப்பினர் கத்துகின்றனர்.

இவ் அறிக்கைகள் எல்லாம் கூட்ட மைப்பினர் எழுதிக் கொடுத்து ராஜபக் ஷ தரப்பினர் வாசித்த அறிக்கைகளே! தமிழ் மக்களின் வாக்குகளை கூட்டமைப்பின் பக்கம் ஈர்த்து கூட்டமைப்பை வெல்ல வைக்க இரண்டு தரப்பும் கதைத்துப் பேசி நடக்கும் அலுவல்கள் இவை! தமிழ் மக்களின் ஆணை கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தரப்புக்கு கிடைத்து விடக்கூடாது என்று ராஜபக்ஷ தரப்பினர் விரும்புகின்றனர். சர்வதேச விசாரணையிலிருந்து தப்பித்து தங்கள் உயிர்களைப் பாதுகாத்துக் கொள்ளவும், உள்ளக விசாரணையை நடைமுறைப்படுத்தவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உதவியைக் கேட்கின்றனர். அதற்காக கூட்டமைப்பை வெல்ல வைக்கப் பாடுபடுகின்றனர், என்று அந்த அறிக்கையில் குறிப்பி டப்பட்டுள்ளது. (ஒ.5)

## போரால் நிறைவேற்ற முடியாததை எட்டுவதற்கு கூட்டமைப்பு முயற்சி!

கொழும்பு, ஜூலை 30

போரால் நிறைவேற்றிக்கொள்ள முடியாதவற்றை இன்று ஜனநாயகத்தின் முகத்தைக் காட்டி பெற்றுக் கொள்வதற்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பு முயற்சிக்கின்றது - என்று தெரிவித்தார் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ.

தம்பதெனியவில் நேற்றுமுன்தினம் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு வடக்கு கிழக்கை பிரித்துக்கொண்டு தனி அரசாங்கமொன்றை கட்டியெழுப்புவதற்கு முயற்சித்தனர். அந்த முயற்சியைத் தோற்கடிக்க எம்மால் முடிந்தது. பிரபாகரன் கேட்டதை ஒருபோதும் நாம் கொடுக்கப்போவதில்லை - என்றும் அவர் தெரிவித்தார். (ம)

# நீதியான தேர்தலை நடத்த மக்கள் முன்வர வேண்டும்

## கபே அமைப்பு வேண்டுகோள்

கொழும்பு, ஜூலை 30

நடைபெறவுள்ள பொதுதேர்தலில் வாக்காளர்கள் அமைதியானதும் நீதியானதுமான தேர்தலை நடத்த முன்வர வேண்டும். இதற்காக ஊழல், இலஞ்சமற்ற வேட்பாளர்களைச் சிந்தித்துத் தெரிவு செய்ய வேண்டும் என்று சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கம் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மனாஸ் மக்கீன் தெரிவித்தார்.




தேர்தல் கடமைகளில் ஈடுபடவுள்ள திருகோணமலை மாவட்ட கண்காணிப்பாளர்களை தெளிவுபடுத்தும் செயலமர்வு கின்னியாவில்கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

பெரும் சவாலான கொவிட்19 கால கட்டத்தில் தேர்தலை எதிர்நோக்க வேண்டியுள்ளது. மொத்தமாக இம்முறை 196 மக்கள் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்ய 7,458 வேட்பாளர்கள் கட்சிகள், சுயேச்சை குழுக்கள் ஊடாக களமிறங்கியுள்ளனர். இதில் முன்னாள் ஜனாதிபதி இருவர்கள், முன்னாள் ஜனாதிபதி, பிரதமர்களின் புதல்வர்கள் நால்வரும் நாடாளுமன்ற பொதுதேர்தலில் களமிறக்கப்பட்டுள்ளனர். பெண் வேட்பாளர்கள் 819 பேர்கள் களமிறக்கப்பட்டாலும் 55 இற்கும் குறைந்தவர்களே தேர்தல் பரப்புரை நடவடிக்கைகளில் இறங்கியுள்ளார்கள் ஏனையவர்கள் பெயரளவில் சுயேச்சை குழுவில் உள்ளார்கள்.

அதிகமாக வெறுப்பூட்டும் பேச்சுக்கள்,பொய் பரப்புரைகள் வேட்பாளர்களால் இடம்பெற்று வருகின்றன என எமது அமைப்புக்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்று வருகின்றன. தங்கள் வாக்கு வங்கிகளை அதிகரிக்க வேட்பாளர்கள் நாடாளுமன்ற தேர்தல் கூட்டங்களில் இவ்வாறான விடயங்களை முன்னெடுக்கின்றனர் 25 மாவட்டங்களில் 15 பிரதேசங்களில் வன்முறை சம்பவங்கள் தேர்தலின் முன்பும், அதன் பின்பும், தேர்தல் தினத்தன்றும் இடம் பெறலாம் என ஊகிக்கப்பட்டு பொலிஸ் மா அதிபருக்கு இது தொடர்பில் அறிக்கைகளைச் சமர்ப்பித்துள்ளோம். வேட்பாளர்கள் இலஞ்சம், ஊழலற்ற பெண்கள் துஷ்பிரயோகம், சிறுவர் துஷ்பிரயோகம், இனவாத அரசியல் போன்றவற்றிலிருந்து நீக்கி நல்லவராக இருப்பவரை மக்கள் நாடாளுமன்றம் அனுப்ப வேண்டும் - என்றார். (ஐ)

பாராளுமன்றத் தேர்தல் - 2020
யாழ்ப்பாணம் - கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்



மாம்பழம் தமிழ்த் தேசியத்தின் குறியீடு
மாம்பழம் தமிழ்ச் சூழலின் அடையாளம்
பொ. ஐங்கரநேசன்
தமிழ்த் தேசியத்தினதும் சூழலியத்தினதும் உறுதிப்பாடு



# ரி-56 துப்பாக்கியுடன் ஒருவர் கைதானார்

கொழும்பு, ஜூலை 30

ரி56 ரக துப்பாக்கி மற்று ம் அதற்குரிய 22 ரவைக ளுடன் வெல்லவ பகுதியில் ஒருவர் கைது செய்யப்பட் டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். திட்டமிட்ட குற்றச்செயல்களில் ஈடுபடும் குழு உறுப்பினர் ஒருவ ருடைய தகவலுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட சுற் றிவளைப்பின்போதே துப்பாக்கி உள்ளிட்ட வெடிபொ ருள்கள் மீட்கப்பட்டன என்று பொலிஸ் விசேட அதிர டிப்படையினர் தெரிவித்தனர். வீட்டுத் தோட்டத்தில் பிளாஸ்டிக் வாளியில் கிறீஸ் இட்டு புதைக்கப்பட்டிருந்த நிலையில் துப்பாக்கி மீட்கப்பட்டுள்ளது.

பேலியகொடை பகுதியில் திட்டமிட்ட குற்றச்செயல்களில் ஈடுபடும் குழுவைச் சேர்ந்த மல்வத்தே மஞ்சு என்ப வருக்குச் சொந்தமான துப்பாக்கியே கைப்பற்றப்பட் டுள்ளதாக பொலிஸ் விசேட அதிரடிப்படை குறிப்பிட் டுள்ளது. (கு)

# புலனாய்வு தகவல் பகிர மத்தியஸ்த வழிமுறை!

கொழும்பு, ஜூலை 30

நல்லாட்சி அரசின் காலத்தில் புலனாய்வுத் தகவல் களை அரசுடன் பகிர்ந்து கொள்ளும்போது மத்தியஸ்த வழி கடைப்பிடிக்கப்பட்டது என்று அரச புலனாய்வு சேவை அதிகாரி ஒருவர் சாட்சியமளித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்கள் தொடர்பான ஜனா திபதி ஆணைக்குழு விசாரணையின் போது சாட்சிய மளித்த அரச புலனாய்வு சேவையின் கிழக்கு மாகாண முன்னாள் அதிகாரி நிலந்த ஜெயவர்த்தனவே இவ் வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

முன்னைய நல்லாட்சி அரசாங்கம் சக்தி வாய்ந்த தலை வர்களான மைத்திரிபால சிறிசேனவையும், ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையிலான இரண்டு பிரதான கட்சிகளையும் கொண்டிருந்தது. அந்த தலைவர்களி டம் புலனாய்வுத் தகவல்களை பகிரும்போது மத்தியஸ்த நிலையை கடைபிடித்தோம். முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு புலனாய்வுத் தகவல்களை பகிரும் போது அதைச் சட்டம் ஒழுங்கு அமைச்சராக இருந்த சாகல ரத்நாயக்கவின் ஊடாகவே பகிர்ந்தோம். என் றார். (எ)



சமூக சேவைகளை ஆற்றிவரும் யாழ்ப்பாணம் பெனின்சுலா றோட்றக்ட் கழகம், சுயம்பு பண்பாட்டு நாடக கலைஞர்களுடன், திருநெல்வேலி சந்தையில் கொரோனா விழிப்புணர்வு தொடர்பாக வீதியோர நாடகத்தை அண்மையில் நடத்தினர். (கு)



சித்தவைத்திய திணைக்களம் நினைத்தால்

# மூலிகைப் பொருள்களை மக்களே தயாரிக்கலாம்

வடக்கு ஆளுநர் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 30

**வட மாகாண சித்த வைத்திய திணைக்களம் நினைத்தால் மக்களைக் கொண்டே மூலிகை யினாலான பொருள்களைத் தயாரித்து மக்கள் பாவ னைக்காக விநியோகிக்க முடியும். இதன் மூலம் வாழ்வாதாரத்திற்காக ஏங்குகின்ற மக்களுக்கு வாய்ப் பளிக்க முடியும் என்று வடமாகாண ஆளுநர் பீ.எஸ். எம்.சாள்ஸ் தெரிவித்துள்ளார்.**

மன்னார்- பள்ளமடு கிராமிய சித்த மருத்துவமனையை நேற்றுமுன்தி னம் திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித் தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், சித்த வைத்தியத் துறையை வளர்க்க வேண்டுமென்ற சிந்தனையில் வட மாகாண சபை ஆர்வமுடன் ஈடுபட் டிருப்பது மகிழ்ச்சியாகவுள்ளது. நோயின் தன்மைகளையும் அதற்கு ரிய மருந்தையும் உணவுப் பழக்கத் தையும் சரியாகச் சொல்லுகின்ற ஒரு வைத்திய முறைதான் இந்த சித்த வைத்திய முறை. இவற்றைப்பற்றிய சரியான புரிதலைமக்களுக்குகொண்டு செல்ல வைத்தியர்கள் முயற்சி எடுக் கவேண்டும். அப்பொழுதுதான் மக் களுக்கு குறிப்பாக இளைய தலை முறைக்கு இம்மருத்துவமுறையில் நம்பிக்கை ஏற்படும். வட மாகாணத் தில் இருக்கும் இந்த சித்த வைத்தியத் திணைக்களம் நினைத்தால் மக்க ளைக்கொண்டே மூலிகையினா லான பொருள்களைத் தயாரித்து மக்கள் பாவனைக்காக விநியோகிக்க முடியும். இதன் மூலம் வாழ்வாதாரத் திற்காக ஏங்குகின்ற மக்களுக்கு வாய்ப்பளிக்கின்ற சந்தர்ப்பமாகவும் அமையும். தகுந்த பொருள்களைப் பெற்றுக்கொள்ள விரும்புகிற மக்க ளுக்கும் நல்ல சந்தர்ப்பமாகவும் அமையும். எனவே, இந்த சித்த வைத்தியத்துறை அதனோடு சம்பந் தப்பட்ட பல்வேறு பிரிவுகளை மக்கள் மயப்படுத்த வேண்டும். அதற்கான முயற்சிகளை சித்த மருத்துவத் திணைக்கள அதிகாரிகள் மேற் கொள்ள வேண்டும். எனத் தெரிவித் தார். சித்த மருத்துவமும் கொரோ னாவுக்குப்பின் வாழ்க்கை முறையும் என்ற தலைப்பில் உருவான இறுவட் டையும் ஆளுநர் வெளியிட்டு வைத் தார். நிகழ்வில் வட மாகாண பிரதம செயலாளர், சுகாதார சுதேச மருத்து வம் நன்னடத்தை மற்றும் சிறுவர் பரா மரிப்பு சேவைகள் அமைச்சின் செய லாளர், மாந்தை மேற்கு பிரதேச செயலாளர், மாகாண சுதேச மருத்து வத் திணைக்கள ஆணையாளர் மற் றும் உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்துகொண்டிருந்தனர். (ரி1)

# குடாநாட்டில் சிறுதானிய பயிர்ச்செய்கை அமோகம்


யாழ்ப்பாணம், ஜூலை 30

குடாநாட்டில் தற்போது பயறு மற்றும் குரக்கன் போன்ற சிறுதானியப் பயிர்ச்செய்கை பரவலாக ஆரம்பிக்கப்பட் டுள்ளன.

பயிர்ச்செய்கையாளர்கள் 310 வரையிலான ஹெக்டேயர் நிலப்பரப்பில் இந்த் சிறுதா னியச் செய்கையில் ஈடுபட் டுள்ளனர்.

இதில் 150 ஹெக்டேயர் நிலப் பரப்பில் பயறும் 160 ஹெக் டேயரில் குரக்கனும் பயிரிப் பட்டுள்ளன. தற்போது மழை பெய்து வருவதனால் இந்த சிறுதானிய பயிர்கள் மிகவும் நல்ல நிலையில் காணப்படு கின்றன என மாவட்ட விவ சாய திணைக்களத் தகவல் கள் தெரிவிக்கின்றன.

வலிகாமம் மேற்கு, வலி. வடக்கு மற்றும் தென்மராட்சி போன்ற இடங்களில் சிறுதா னிய செய்கையில் அதிக மான செய்கையாளர்கள் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது. (ரி1-17)



# நாட்டில் இதுவரை 155,540 பி.சி.ஆர். பரிசோதனைகள்

கொழும்பு, ஜூலை 30

பெப்ரவரி மாதத்திலிருந்து இதுவரையான காலப் பகுதி யில் நாட்டில் 155,540 பி. சி. ஆர்.பரிசோதனைகள் முன் னெடுக்கப்பட்டுள்ளன. நேற்று முன்தினம் மாத்திரம் நாட்டில் 1,349 பி.சி.ஆர். சோதனைகள் முன்னெடு க்கப்பட்டுள்ளன என்று சுகா தார அமைச்சு தெரிவித்துள் ளது. (ரி1)

# ராஜாங்கனைப் பகுதியில் பயணக் கட்டுப்பாடுகள் நீக்கம்

அநுராதபுரம், ஜூலை 30

கொரோனா அச்சம் காரணமாக அநுராதபுரம், ராஜாங்கனை பகுதியில் விதிக்கப்பட்ட பயணக் கட்டுப்பாடுகளை பல கட்டங் களில் நீக்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டாக்டர் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார். ராஜாங்கனை பகுதியில் கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டமையால் கடந்த 19 ஆம் திகதி இப் பகுதிக்கான பயணக் கட்டுப்பாடுகள் விதிக் கப்பட்டன. எனினும் கடந்த 19 ஆம் திகதி முதல் இதுவரை இந்தப் பிரதேசங்களில் கொரோனாத் தொற்றாளர்கள் எவரும் இனங்காணப்படவில்லை. இதனை கருத்திற்கொண்டு பய ணக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்படவுள்ளன. (ரி3)



சர்வதேச நாணய நிதியத்தின் 2019 ஆம் ஆண்டு அறிக் கையை ஆதாரமாகக்கொண்டு தேசிய இறைவரித் திணைக் களம் முன்னெடுக்கும் வேலைத்திட்டங்களை எதிர்த்தும், அதிகாரிகளின் இடமாற்றத்தை கண்டித்தும், இறை வரித் திணைக்களத்தின் தொழிற்சங்கங்களால் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டமொன்று முன் னெடுக்கப்பட்டது. (ரி3)

# பொதுச் சுகாதார பரிசோதகர்களின் தொழிற்சங்க நடவடிக்கை நிறைவு

கொழும்பு, ஜூலை 30

**தனிமைப்படுத்தல் மற்றும் தொற்றுநோய் தடுப்பு கட்டளைச் சட்டத்தில் பொதுச் சுகாதார பரிசோதகர்களுக்கான அதிகாரங்கள் தொடர்பில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக முன்னெடுக்கப்பட்ட தொழிற்சங்க நடவடிக்கை நேற்றுமுன்தினத்துடன் நிறைவுக்கு வந்துள்ளது. பிரதமருடன் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் போது எட்டப்பட்ட இணக்கப்பாட்டுக்கு அமைய தொழிற்சங்க நடவடிக்கையை நிறைவுக்கு கொண்டுவரத் தீர்மானித்தோம் என பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொதுச் சுகாதார பரிசோதகர்களுக்கான அதிகாரங்கள் தொடர்பில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக கடந்த 16 ஆம் திகதி முதல் 28 ஆம் திகதி வரையான 11 நாட்கள் நாடளாவிய ரீதியில் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுத்திருந்தனர். தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இந்தக் காலப்பகுதிக்குள் பல பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன. எனினும் அந்தப் பேச்சுவார்த்தைகளின் போது எமக்கான உரிய தீர்வு வழங்கப்படாமையால் தொழிற்சங்க நடவடிக்கையைத் தொடர்ந்தும் முன்னெடுக்க வேண்டியேற்பட்டது.

இந்நிலையில், பொதுத்தேர்தல் நடைபெறவிருக்கும் நிலையில் கொவிட் 19 கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் விவகாரத்தில் பொதுச் சுகாதார பரிசோதகர்களுக்குக் காணப்படும் அதிகாரங்களைச் சுற்றறிக்கை வெளியிடுவது சட்டத்திற்கு முரணானதாகும் என்று சட்டமா அதிபர் சுகாதார அமைச்சின் செயலாளருக்கு அறிவித்திருந்தார்.

இவ்வாறான நிலையில் மக்களுக்கு ஏற்படும் பிரச்சினையைக் கருத்திற்கொண்டு பிரதமருடனான பேச்சுவார்த்தைக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. இதன்போது சட்டமா அதிபர் திணைக்களத்தின் தெளிவுபடுத்தலுக்கு அமைய 1897 ஆம் இலக்க நோய்த் தொற்றாளர்களை தனிமைப்படுத்துவதற்கான மற்றும் தொற்றுநோய் கட்டுப்படுத்தலுக்கான கட்டளை சட்டத்தின் 38 ஆவது உறுப்புரைக்கமைய பொதுச் சுகாதார பரிசோதகர்களுக்கு பரிசோதகர்கள் என்ற ரீதியில் அதிகாரங்கள் காணப்படுவதாகக் கூறப்பட்டது. அதற்கமைய பொதுச் சுகாதார பரிசோதகர்களுக்கு வேண்டிய இடங்களுக்குச் செல்லுதல் , சட்ட மீறல் இடம்பெறும்போது அதில் தலையிடுதல் உள்ளிட்ட அதிகாரங்கள் காணப்படுவதாக சட்டமா அதிபர் திணைக்களத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி பேச்சுவார்த்தையில் கலந்துகொண்ட அதிகாரி தெளிவுபடுத்தினார்.

அதற்கமைய பரிசோதகர்களாக எமக்கு காணப்படும் அதிகாரங்களுக்கு ஏற்ப செயற்படமுடியும் என்பதால் தொற்றுநோய்க் கட்டுப்படுத்தல் நடவடிக்கைகளில் நாம் தொடர்ச்சியாக ஈடுபடத் தீர்மானித்துள்ளோம். இந்தக் கட்டளைச்சட்டத்தின் கீழ் ஏதேனுமொரு வழக்கு தொடரப்பட்டால் அது தொடர்பில் சுகாதார மருத்துவ அதிகாரிகளுக்கும் (எம்.ஓ.எச்.) பொதுச் சுகாதார பரிசோதகர்களுக்கும் இடையில் கருத்து முரண்பாடு ஏற்பட்டால் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் ஆலோசனைக்கமைய செயற்படுவதற்கு இணக்கப்பாடு எட்டப்பட்டது. கட்டளைச்சட்டத்தில் மாற்றங்களை ஏற்படுத்தாமல் எமது கடமைகளைத் தொடர்ச்சியாக முன்னெடுக்க இணக்கம் காணப்பட்டது என்றார்.

இது தொடர்பில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அனில் ஜாசிங்க தெரிவிக்கையில்,

பொதுச் சுகாதார பரிசோதகர்களின் தொழிற்சங்க நடவடிக்கை குறித்து பிரதமர் தலைமையில் பேச்சுவார்த்தை நடைபெற்றது. தனிமைப்படுத்தல் கட்டளைச் சட்டத்தை நடைமுறைப்படுத்தும்போது வழக்கு தொடரப்பட்டால் சுகாதார மருத்துவ அதிகாரிகள் இணக்கம் தெரிவிக்க வேண்டும் என்றும், அதில் இரண்டு தரப்புக்கும் முரண்பாடுகள் ஏற்படும் பட்சத்தில் எனது ஆலோசனையின் பேரில் செயற்பட வேண்டும் என்றும் இணக்கப்பாடு எட்டப்பட்டது. இந்த தனிமைப்படுத்தல் கட்டளை சட்டம் மிகப் பழமையானது என்பதால் அதில் திருத்தங்கள் அல்லது மாற்றங்களை ஏற்படுத்துவது தொடர்பிலும் பிரதமரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டது- என்றார். (ரி3)

## சில பகுதிகளுக்கு டெங்கு எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 30

நாட்டில் கடந்த நாள்களாக தொடரும் மழையுடனான வானிலை காரணமாக பல மாவட்டங்களுக்கு டெங்கு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அதன்படி கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கண்டி, காலி மற்றும் இரத்தினபுரி ஆகிய பகுதிகளுக்கே இவ்வாறு டெங்கு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மாநகராட்சி மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் 50 சதவீத டெங்கு நுளம்புகளின் இனப்பெருக்கத்துக்கு உகந்த களமாக அடையாளம் காணப்பட்டுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது. நிலவும் மழையுடனான வானிலை தொடர்ந்தால், டெங்கு நுளம்புகள் பரவு வதைக் கட்டுப்படுத்த தேவையான நடவடிக்கைகள் எடுக்கப் படாவிட்டால் தற்போதைய நிலைமை மோசமாகிவிடும் என்றும் கூறப்பட்டுள்ளது. (ரி3-22)



மன்னார் மாவட்டச் செயலக பணியாளர்களின் பாவனைக்காக சுகாதார முறைப்படி கை கழுவும் இயந்திரம் ஒன்று மன்னார் உலக தரிசன நிறுவனத்தினால் (வேள்ட் விசன்) வழங்கப்பட்டது. மன்னார் மாவட்ட அரசாங்க அதிபரிடம் மன்னார் உலக தரிசன நிறுவனத்தின்(வேள்ட் விசன்) பிரதிநிதி இயந்திரத்தை நேற்றுக் கையளித்தார். (ரி1-56)

## இந்தியாவிடம் இருந்து மேலும் ஒரு பில். டொலர்கள் இலங்கைக்கு?

கொழும்பு, ஜூலை 30

இந்தியாவிடம் இருந்து மேலும் ஒரு பில்லியன் டொலர்களை பெறும் பேச்சுவார்த்தையில் இலங்கை ஈடுபட்டுள் ளது.

ஏற்கனவே இந்திய அரசாங்கம் கையெழுத்திட்டுள்ள 400 மில்லியன் நாணய மாற்று உடன்படிக்கைக்கு அப்பால் இந்த மேலதிக ஒரு பில்லியன் டொலர்களை இந்தியாவிடம் இருந்து இலங்கை எதிர்பார்க்கிறது. இது தொடர்பில் இந்திய மத்திய வங்கியின் அதிகாரிகளும் இலங்கையின் மத்திய வங்கியின் அதிகாரிகளும் பேச்சுக்களை நடத்திவருகின்றனர். இதன் மூலம் நாட்டின் தேவைகளைப் பூர்த்தி செய்ய இலங்கை மத்திய வங்கிக்குத் தேவையான குறுகிய கால நிதியுதவியைப் பெற்றுக்கொள்ளமுடியுமென தெரிவிக்கப்படுகிறது. (ரி3)

## கட்டாரில் இருந்து 29 பேர் வருகை

கொழும்பு, ஜூலை 30

கொரோனா தொற்று காரணமாக உள்நாட்டிற்கு வர முடியாமல் கட்டார் நாட்டில் தங்கியிருந்த இலங்கையர் 29 பேர் நேற்று நாடு திரும்பியுள்ளனர். அதேவேளை இங்கிலாந்தில் தங்கியிருந்த இலங்கையர்கள் 3 பேர் நேற்று இரவு நாடு திரும்பியுள்ளனர். அவர்களுக்குப் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு, அவர்கள் தனிமைப்படுத்தல் மத்திய நிலையங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## யாழ்.நகரில் நால்வர் கைது

கொடிகாமம், ஜூலை 30

இருவேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட் டில் நான்கு பேர் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர். யாழ்ப்பாண நகர்ப் பகுதியில் போக்குவரத்து விதி களை மீறிய குற்றச் சாட்டில் இருவரும் போதைப் பொருள்களை தம்வசம் வைத்திருந்தார்கள் என்ற குற்றச்சாட்டில் இருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த-159)

## மாவட்டச் செயலக வாள்வெட்டு 5ஆவது சந்தேகநபரும் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 30

யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தின் முன்பாக இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் நால்வர் ஏற்கனவே கைதாகி விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ள நிலையில், கடந்த 27ஆம் திகதி 5 ஆவது சந்தேக நபரும் கைது செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

இவர் நீர்வேலி பகுதியைச் சேர்ந்த 25 வயதுடைய இளைஞன் என்று தெரிவிக்கப்பட்டது. சந்தேக நபரை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்திய போது ஓகஸ்ட் 4ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்க யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்ற நீதிவான் பீற்றர்போல் உத்தரவிட்டார். (ஒ.5.25)

## கத்திக்குத்தில் பெண் காயம்

யாழ்ப்பாணம், ஜூலை 30

பெண் ஒருவரின் தலைமயிரை வெட்டியமை, அவரைக் கத்தியால் குத்தியமை ஆகிய குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடைய அந்தப் பெண்ணின் கணவரை சந்தேகத்தில் கைது செய்துள்ளதாக சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர்.

ரமணன் ஆரணி (வயது32) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே, காயங்களுடன் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். ஊரெழுவைச் சேர்ந்த மேற்படி பெண் குப்பிளானில் வீடொன்றில் பணி புரிந்து வரு கின்றார். அவர் கணவனைப் பிரிந்து வாழ்ந்து வருகின்றார். வழமைபோன்று குப்பிளானில் உள்ள வீட்டுக்கு நேற்றுப் பணி செய்யச் சென்றுள்ளார். வீட்டின் உரிமையாளர் வெளியில் சென்றிருந்த போது, பெண்ணின் கணவர் வீடு புகுந்து தாக்குதல் நடத்தியுள்ளதாகப் பொலிஸார் கூறுகின்றனர். பெண்ணின் தலைமயிரை வெட்டியதுடன், அவரைக் கத்தியால் குத்தியதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ஒ.5.26)

# பிரபாகரனின் கொள்கையை கூட்டமைப்பு கைவிடவில்லை

## திரும்பத் திரும்ப சிங்கள மக்களிடம் சொல்கிறார் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ

கொழும்பு, ஜூலை 30

சிலர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் ஒப்பந்தம் செய்கின்றனர். ஆனால், பொதுத்தேர்தலில் நாம்தான் வெற்றிபெறுவோம் என்பதை புரிந்துகொள்ளவேண்டும். பிரபாகரனின் கொள்கையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்னும் கைவிடவில்லை. இவ்வாறு சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவரும், பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.



மினுவாங்கொடை பகுதியில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த ஐந்தாண்டு காலப்பகுதிதான் எமது நாட்டுக்கு இருண்ட யுகமாகும். உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் முன்கூட்டியே அனைத்துத் தகவல்களும் கிடைக்கப்பெற்றிருந்தும், வாக்குகளுக்காக அரசு மௌனம் காத்தது. இவ்வாறு வாக்குகளுக்காக நாட்டைக் காட்டிக் கொடுத்த சம்பவம் கூட கடந்த ஆட்சியிலேயே அரங்கேறியது.

அன்று ஆட்சி நடத்திய கட்சிதான் இன்று எம்முடன் தேர்தலில் போட்டியிடுகின்றது. அம்பாந்தோட்டையில் தோல்வி உறுதி என்பதை தெரிந்ததால்தான் எல்லைதாண்டி வந்து சஜித் பிரேமதாச கொழும்பில் போட்டியிடுகின்றார்.

அதேவேளை, இலங்கையில் 2005 ஆம் ஆண்டுக்கு பிறகே பெரிய அபிவிருத்திகள் முன்னெடுக்கப்பட்ட காலப்பகுதியாகும். 30 வருடகால போரையும் முடிவுக்கு கொண்டுவந்தோம். வாக்குகளை எதிர்பார்த்து நாம் இவற்றைச் செய்யவில்லை. ஆனாலும், சிலர் கடந்த காலத்தை மறந்துவிட்டனர். குறிப்பாக மாகாணசபைத் தேர்தலை நடத்த முயற்சித்தபோது (வடக்கு மாகாணசபை) வேண்டாம், தோல்வியடைந்துவிடுவோம் என பலரும் கூறினர். தோற்றாலும் பரவாயில்லை, மக்களுக்கு அவர்களுக்கான பிரதிநிதிகளை வழங்கவேண்டும் என நான் பதில் வழங்கினேன். அவ்வாறு செய்தும் அவர்களின் (கூட்டமைப்பினரின்) கொள்கை மாறவில்லை.

அன்று பிரபாகரன் துப்பாக்கியால் பெற முற்பட்டதை இன்று சம்பந்தன் தரப்பு வாக்குகளால் பெறுவதற்கு முயற்சிக்கின்றது. அதற்கு நாம் இடமளிக்கமாட்டோம். சிலர் இன்று கூட்டமைப்புடன் ஒப்பந்தம் செய்கின்றனர். ஆனால் பொதுத் தேர்தலில் எமது வெற்றியே உறுதி என்பதை கூறிவைக்க விரும்புகின்றேன் - என்றார். (ஓ.5,44)

---

# நாடாளுமன்றத்தில் பெண்களின் பிரதிநிதித்துவம் அதிகரிக்கப்படும்

### சுயேச்சை வேட்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 30

பொதுத் தேர்தலில் வெற்றிபெற்றால் நாடாளுமன்றத்தில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதற்கான வேலைத்திட்டங்களை முன்னெடுப்பேன் என்று கம்பஹா மாவட்டத்தின் சுயேச்சை வேட்பாளர் பெதும் கேர்னர் தெரிவித்தார்.

களனியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

'இன்று நாட்டிலுள்ள சனத்தொகையை மையப்படுத்தி பார்க்கும்போது நாடாளுமன்றத்தின் பெண்கள் பிரதிநிதித்துவம் போதுமானதாக இல்லை.

13 பெண்கள் மாத்திரமே நாடாளுமன்றத்தை பிரதி நிதித்துவப்படுத்துகின்றனர்.

அதன்படி, நாடாளுமன்றத்தில் பெண்களின் அங்கத்துவம் 5சதவீதமாக மாத்திரமே உள்ளது. இந்த நிலைமை ஆரோக்கியமானதொரு நாடாளுமன்ற கட்டமைப்புக்கு வழி செய்யாது.

உலகின் முதலாவது பெண் பிரதமரையும், நிறைவேற்று அதிகாரம் கொண்ட பெண் ஜனாதிபதியையும் முதலாவதாக உருவாக்கிக் கொண்ட நாடெனப் பெருமை பேசிக்கொண்டாலும், நாடாளுமன்றத்தில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை மேம்படுத்துவதில் அக்கறை இன்மையே காணப்படுகின்றது - என்றார். (ஐ)

---

# தேர்தல் சுவரொட்டிகளுடன் கைதானவர்களுக்கு தண்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 30

நாடாளுமன்றத் தேர்தல் வேட்பாளர்களின் சுவரொட்டிகளை பொது இடங்களில் ஒட்டிய குற்றச்சாட்டில் இந்த மாதம் வெவ்வேறு தினங்களில் கைதுசெய்யப்பட்ட நபர்களுக்கு மல்லாகம் நீதிமன்றால் தண்டம் விதிக்கப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் ஒருவருக்கு ஆதரவாக வட்டுக்கோட்டை பகுதியில் வட்டுக்கோட்டை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட இரண்டு சந்தேக நபர்களுக்கு தலா ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

அதேபோல் கூட்டமைப்பின் மற்றொரு வேட்பாளருக்கு ஆதரவாக சுவரொட்டியை சுழிபுரம் பகுதியில் ஒட்டிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 6 பேரில் ஒருவருக்கு ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. கைது செய்யப்பட்ட 5 மாணவர்களும் நீதிவானால் எச்சரிக்கை செய்து விடுவிக்கப்பட்டனர்.

அதே போல் ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளருக்கு ஆதரவான சுவரொட்டிகளுடன் கைதுசெய்யப்பட்ட நால்வருக்கு ஆயிரம் ரூபா வீதம் 4 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (ஓ.5,25)

---

# கருத்தரங்கு

கிளிநொச்சி, ஜூலை 30

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில், வாக்கெடுப்பு நிலைய எழுதுநர்களாக கடமையாற்றவுள்ளவர்களுக்கான கருத்தரங்கு கிளிநொச்சியில் மாவட்ட கூட்டுறவு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இக்கருத்தரங்கில் அரச திணைக்கள அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்கள் கலந்துகொண்டனர்.

நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் வி.கு.வி. ஞானதயாளன் கலந்து கொண்டு கருத்துரை வழங்கினார். (ஐ-159)

---

### சாபக்கேடான

# 13ஆவது திருத்தத்துக்கு முடிவு கட்டுவோம் என்கிறது பெரமுன

கொழும்பு, ஜூலை 30

இலங்கைக்கு பெரும் சாபக்கேடாக மாறியுள்ள அரசமைப்பின் 13 மற்றும் 19 ஆவது திருத்தச்சட்டங்களை நீக்கிவிட்டு சர்வதேச ஆலோசனையின்றி நாட்டுக்கு தேவையான விதத்தில் புதிய அரசமைப்பு இயற்றப்படும் என்று தூய ஹெலஉறுமய கட்சியின் தலைவரும், சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் கொழும்பு மாவட்ட வேட்பாளருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:




அரசமைப்பின் 19 ஆவது திருத்தச்சட்டத்தால் நாட்டுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்பதை அச்சட்டத்தை சமர்ப்பித்த மைத்திரிபால சிறிசேனவே ஏற்றுக்கொண்டுள்ளார். சட்டத்தை இயற்றுவதற்கு பெரும் பங்கு வகித்த ஜயம்பதிவிக்கிரமரத்ன, சுமந்திரன் போன்றவர்களும் விமர்சனங்களை முன்வைத்துள்ளனர். எனவே, 19 ஆவது திருத்தச் சட்டத்தை இல்லாதொழிக்கவேண்டும்.

13ஆவது திருத்தச்சட்டத்தை பாதுகாப்பேன் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச யாழ்ப்பாணத்தில் வைத்து கூறியுள்ளார். சஜித்தின் தந்தையான ரணசிங்க பிரேமதாச மாகாணங்களுக்கு பொலிஸ், காணி அதிகாரங்களை வழங்குவதற்கும், மாகாணங்கள் இணைப்புக்கும் கடும் எதிர்ப்பை அன்று வெளியிட்டிருந்தார். ஆனால், சஜித்தின் நிலைப்பாடு மாறுபட்டுள்ளது.

எனவே, 13, 19 உட்பட தற்போது நடைமுறையில் உள்ள அரசமைப்பை நீக்கிவிட்டு புதியதொரு அரசமைப்பு இயற்றப்படவேண்டும். வெளிநாட்டு ஆலோசனையின்றி, எமது மண்ணில் இருந்து உருவாகும் அரசமைப்பாக அது இருக்கவேண்டும். அதற்கானவாய்ப்பு தற்போது உருவாகியுள்ளது. சிறந்த தலைவர் இருக்கிறார். இப்படியானதொரு தலைவர் மீண்டும் கிடைக்கமாட்டார். எனவேதான் மூன்றிலிரண்டு பெரும்பான்மையை கோருகின்றோம், என்றார். (ஓ.5,44)

---

# தமிழ் முற்போக்கு கூட்டணியை ஆதரிக்க ஈரோஸ் ஜனநாயக முன்னணி தீர்மானம்

பொதுத்தேர்தலில் தமிழ் முற்போக்கு கூட்டணியை ஆதரிப்பதற்கு ஈரோஸ் ஜனநாயக முன்னணி தீர்மானித்துள்ளது என்று முன்னணியின் தேசிய அமைப்பாளர் ஜீவன் ராஜேந்திரன் தெரிவித்தார்.

ஹற்றனில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

நடைபெறவுள்ள பொதுத்தேர்தலானது தமிழ் மக்களுக்கு முக்கியத்துவமிக்க ஒன்றாகும். அந்தவகையில் மலையக மக்களின் அடிமைச் சின்னமான லயத்து வீட்டுமுறை முற்றாக ஒழிக்கப்பட்டு, அனைவரும் நிலவுரிமை பெற்றவர்களாக வாழவேண்டும் என்ற பிரதான கோரிக்கையை முன்வைத்தே தமிழ் முற்போக்கு கூட்டணிக்கு எமது ஆதரவை வழங்குவதற்கு தீர்மானித்துள்ளோம்.


தமிழ் முற்போக்கு கூட்டணி கடந்த காலங்களில் சில திருப்திகரமான சேவைகளைச் செய்துள்ளது. அதிலும் குறிப்பாக நுவரெலியா மாவட்டத்தில் பிரதேச செயலகங்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளது. பிரதேச சபை சட்டத்தில் திருத்தம், அதிகார சபை உருவாக்கம், தனி வீடு, காணி உரிமை ஆகிய விடயங்களும் செய்யப்பட்டுள்ளன. ஈரோஸ் ஜனநாயக முன்னணி, மூன்று வெவ்வேறான பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கும் பிராந்தியங்களில் அரசியல் செய்துவருகின்றது. தேர்தல் தொடர்பில் முடிவெடுக்கும் அதிகாரம் அந்தந்த பிராந்தியக் குழுக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதன்படி வடக்கு, கிழக்கிலுள்ள பிராந்தியக்குழுக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஆதரவு தெரிவித்துள்ளன. மலையகத்தில் தமிழ் முற்போக்கு கூட்டணியை ஆதரிக்க முடிவெடுக்கப்பட்டது.' - என்றார். (ஐ)

தொடர் மழை காரணமாக

# அறுவடை செய்யும் நிலையிலுள்ள நிலக்கடலை பயிர்கள் பாதிப்பு

மன்னார், ஜூலை 30

மன்னார் மாவட்டத்தில் கடந்த இரு நாள்களாக பெய்து வரும் மழை காரணமாக அறுவடை செய்யும் நிலையில் இருந்த முன்னூறு ஏக்கருக்கும் மேற்பட்ட நிலக்கடலை பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.





மன்னார் மாவட்டத்தில் மாந்தை மேற்கு நானாட்டான் மடு முசலி போன்ற இடங்களில் குழாய்க் கிணற்று இறைப்பு நீர் மூலம் பாரிய செலவுகளின் மத்தியில் நிலக்கடலை பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டு அறுவடை செய்யும் நிலையில் இருந்தது. தற்போது பெய்துவரும் மழை காரணமாக கடலைகள் முளைத்தும், அழுகிப்போகும் நிலையும் ஏற்படுவதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

விவசாயத்தின் மூலம் தொடர்ச்சியாக இழப்புக்கள்தான் ஏற்பட்டு வருகிறது என்று தெரிவித்த விவசாயிகள் இந்த தாழமுக்கமான கால நிலை தொடர்ந்தால் நிலக்கடலையை தொடர்ந்து உப தானியங்களாக செய்யப்பட்ட உளுந்து பயறு கொளப்பி போன்ற பயிர்களும் பாதிக்கப்படும் என்று கவலை தெரிவித்தனர். (ஐ-213)

# மத்திய கலாசார நிதியத்தில் நிதி மோசடி

கொழும்பு, ஜூலை 30

மத்திய கலாசார நிதியத்தில் 11 பில்லியன் ரூபா வரை நிதி மோசடி இடம்பெற்றுள்ளதாக பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது. 2016 - 2019 ஆம் ஆண்டுகளுக்கிடையில் மத்திய கலாசார நிதியத்தில் இடம்பெற்ற முரண்பாடுகள் மற்றும் முறைகேடுகள் குறித்து ஆராய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நியமித்த குழுவினால் வழங்கப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்தத் தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. அத்துடன் மத்திய கலாசார நிதியத்தில் பல நிதி முரண்பாடுகள் பதிவாகியுள்ளன எனவும் அந்த குழுவினர் பிரதமரிடம் சமர்ப்பித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி3)

# 6கிலோ கஞ்சாவுடன் 60 வயது நபர் கைது

கொழும்பு, ஜூலை 30

ஆறு கிலோவிற்கும் அதிகமான கஞ்சா போதைப்பொருளுடன் சந்தேக நபரொருவர் பேலியகொட களனி பகுதியில் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார். பொலிஸ் ஊழல் தடுப்பு பிரிவினருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்தது. களனி திப்பிட்டிகொட பகுதியைச் சேர்ந்த 60 வயதுடைய நப ரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். இவரிடமிருந்து ஆறு கிலோ 360 கிராம் கஞ்சா போதைப் பொருள் மற்றும் 30 கிராம் ஐஸ் போதைப் பொருளும் கைப்பற்றப்பட்டுள்ளது. (ரி)



டிரிபேர்க் கல்லூரியின் பழைய மாணவரும் நமக்காக நாம் அமைப்பின் வடமாகாண தலைவருமான ஆ.நிலான் அவர்களின் ஏற்பாட்டில், டிரிபேக் கல்லூரிக்கு உடல் வெப்பநிலையை அளவிடும் கருவிகள் இரண்டு கல்லூரி அதிபரிடம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை கையளிக்கப்பட்டன. (ரி3-159)

# கடவுச்சீட்டு திணைக்களத்தில் கொரோனா நோயாளிகள்

## மீண்டும் தனிமைப்படுத்தலுக்கு அனுப்பிவைப்பு

கொழும்பு, ஜூலை 30

தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறி கடவுச்சீட்டு திணைக்களத்திற்கு சென்ற இருவர் தனிமைப்படுத்தல் நிலையத்துக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

வெளிநாட்டில் இருந்து இலங்கை வந்த கொரோனாத் தொற்றாளர்கள் இருவர் தனிமைப்படுத்தல் காலத்தை நிறைவுசெய்து சுயதனிமைப்படுத்தலில் வைக்கப்பட்டனர்.

இந்நிலையில் தங்கள் கடவுச்சீட்டினை புதுப்பிப்பதற்காக குடிவரவு குடியகல்வு திணைக்களத்திற்கு இவர்கள் சென்ற சந்தர்ப்பத்தில் அவர்கள் புலனாய்வுப் பிரிவினால் தனிமைப்படுத்தல் நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

ஆஸ்திரேலியாவில் இருந்து கடந்த 10ஆம் திகதி இலங்கைக்கு வந்த குறித்த இருவரும் கிளிநொச்சி பிரதேசத்தை சேர்ந்தவர்களாவர்.

கொரோனாத் தொற்றுக்குள்ளான இவர்கள் இருவரும் ராஜகிரிய தனிமைப்படுத்தல் நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டனர். கடந்த 24ஆம் திகதி தனிமைப்படுத்தல் காலத்தை நிறைவுசெய்த பின்னர் அவர்கள் இருவரும் சுயதனிமைப்படுத்தலுக்காக கிளிநொச்சி வீடுகளுக்கு அனுப்பப்பட்டனர்.

இந்நிலையில், இந்த நபர்கள் இருவரும் தங்கள் கடவுச்சீட்டினைப் புதுப்பிப்பதற்காக குடிவரவு குடியகல்வு திணைக்க எத்திற்கு சென்றுள்ளனர்.

புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த தகவலுக்கைய அவர்கள் மீண்டும் தனிமைப்படுத்தலுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். (ரி3)

# இன்றைய நாள்

**மேடம்:** மனதில் தேவையற்ற குழப்பம் ஏற்படும். மற்றவர்களிடம் அதிகம் பேசாமல் இருப்பது நல்லது. அலுவலகப் பணிகளில் பல குறுக்கீடுகள் வந்தாலும் அதை சாமர்த்தியமாக சமாளித்து வெற்றி காண்பீர்கள்.

**இடபம்:** எடுத்த முயற்சியில் வெற்றி கிடைக்கும். வெளிநாடுகளில் வேலை பார்ப்பவர்களுக்கு நல்ல முன்னேற்றம் உண்டு. உறவினர்களிடம் இருந்து எதிர்பார்த்த உதவிகளை பெறுவீர்கள்.

**மிதுனம்:** நண்பர்கள் மூலம் பண உதவி கிடைக்கும். மற்றவர்களால் கைவிடப்பட்ட செயல்களை செய்து முடிப்பீர்கள். அரசாங்க வகையில் எதிர்பார்த்த ஆதாயம் உண்டு.

**கடகம்:** வியாபாரத்தில் வேலையாட்கள் சிறிது பிரச்னை கொடுக்க வாய்ப்புள்ளது. விலை உயர்ந்த பொருட்கள் வாங்குவீர்கள். பிள்ளைகளை புதிய பாதையில் வழிநடத்துவீர்கள். மனைவி வழி உறவினரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும்.

**சிம்மம்:** பணியாளர்களின் நீண்ட கால கோரிக்கைகள் நிறைவேறும். கடின உழைப்பினால் வெற்றிகளை ஈட்டுவீர்கள். சிலருக்கு தேவையில்லாத அலைச்சல் ஏற்படக்கூடும்.

**கன்னி:** அடுத்தவரின் உணர்ச்சிகளைப் புரிந்து கொண்டு அதற்கேற்றபடி செயல்படுவீர்கள். உங்கள் உழைப்பால் மேலதிகாரிகளை ஆச்சரியப்படுத்துவீர்கள். பெண்களுக்கு பணப் புழக்கம் அதிகரிக்கும்.

**துலாம்:** எதிலும் எச்சரிக்கையுடன் இருப்பீர்கள். கலைத் துறையின ரின் செயல்கள் மக்களை கவரும் விதத்தில் அமையும். வியாபாரிகளின் புதிய முயற்சிக்கு வெற்றி கிடைக்கும்.

**விருச்சிகம்:** உறவினர்களை சந்தித்து உற்சாகம் அடைவீர்கள். அக்கம் பக்கத்தினரிடையே உங்களின் செல்வாக்கு கூடும். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி இலக்கை எட்டுவீர்கள்.

**தனுசு:** அக்கம் பக்கத்தினரிடம் பேசும் போது கவனமாக இருக்கவும். போடுவதைத் தவிர்க்க வேண்டும். கணவன் மனைவிக்கிடையே நெருக்கம் அதிகரிக்கும்.

**மகரம்:** திட்டமிட்ட வேலையில் பல குறுக்கீடுகள் வந்தாலும் குறிப்பிட்ட நேரத்திற்குள் செய்து முடிப்பீர்கள். வியாபாரத்தில் ஏற்படும் சிறு விரயங்களால் கவலை ஏற்படும்.

**கும்பம்:** ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். உத்தியோகத்தில் சிறப்பான நிலையை அடைவீர்கள். பெற்றோர் ஆரோக்கியத்தில் கவனம் கொள்ளவும்.

**மீனம்:** மகளின் திருமணம் பற்றி கவலை கொண்டிருந்தவர்களுக்கு நல்ல செய்தி கிடைக்கும். பண வரவுகள் சற்றே குறைவாக இருக்கும். அலுவலகத்தில் கலகலப்பான சூழல் உருவாகும்.

## இருவருக்கு தலா 10,000 தண்டம்

சாவகச்சேரி, ஜூலை 30
ஹெரோய்ன் போதைப் பொருளை தம்வசம் வைத்திருந்த இருவருக்கு சாவகச்சேரி நீதி மன்றால் தலா 10 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

போதைப்பொருள் கடத்தப்படுவதாக சாவகச்சேரி மதுவரித் திணைக்களத்துக்கு தகவல் கிடைத்தது.

இதனையடுத்து நேற்றுமுன்தினம் கோப்பாய் பாலத்தருகே உள்ள பஸ் தரிப்பிடத்தில் வைத்து போதைப் பொருளை கைமாற்றிக்கொண்டிருந்த வேளை இருவர் கைது செய்யப்பட்டனர். இவர்களிடமிருந்து 225 மில்லிக்கிராம் ஹெரோய்ன் போதைப் பவுடரை கைப்பற்றியதாக மதுவரித் திணைக்களத்தினர் தெரிவித்தனர்.

சந்தேகநபர்கள் இருவரும் சாவகச்சேரி நீதி மன்றில் நேற்று முற்படுத்தப்பட்டனர்.

இருவரும் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து தலா 10 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (ஐ)

## மாணவர்கள் கௌரவிப்பு

தென்மராட்சி, ஜூலை 30
இலங்கை சமூக பாதுகாப்புச் சபையின் 'ஆரக்ஷாவ' குழந்தைகள் ஒய்வூதியம் திட்டத்தில் இணைந்து கொண்டுள்ள கடந்த ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இந்த நிகழ்வு இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு தென்மராட்சி பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறும் என்று பிரதேச செயலர் திருமதி உ. சுபலிங்கம் அறிவித்துள்ளார்.

இலங்கை சமூக பாதுகாப்புச் சபையின் குழந்தைகள் ஒய்வூதியத் திட்டத்தில் வயது-1 தொடக்கம் பதினேழு வயது வரையானவர்கள் இணைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-9)

# பாடசாலைகளுக்கு மீண்டும் விடுமுறை



கொழும்பு, ஜூலை 30
**பொதுத்தேர்தல் இடம்பெறவுள்ள அடுத்த வாரத்தில் நான்கு நாள்கள் அனைத்து அரச பாடசாலைகளுக்கும் விடுமுறை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

கல்வி அமைச்சில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில், கல்வி அமைச்சர் டளஸ் அழகப்பெரும இதனைத் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 4ஆம் திகதி முதல் 7 ஆம் திகதிவரை பாடசாலைகளை மூடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் அனைத்துப் பாடசாலைகளும் 11, 12, 13 ஆம் தர மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்காக கடந்த 27 ஆம் திகதி மீண்டும் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

எனினும் ஏனைய தர மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகள் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் பத்தாம் திகதி ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் கற்றல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள 11, 12, 13 ஆம் தர மாணவர்களுக்கே தேர்தலை முன்னிட்டு வழங்கப்படும் விடுமுறை பொருந்தும் என அமைச்சரால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (க)

## துறைமுக ஊழியர்கள் மீண்டும் போராட்டம்

கொழும்பு, ஜூலை 30
கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தின் நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பிக்கக் கோரி துறைமுக அதிகார சபையின் ஊழியர்கள் மீண்டும் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

துறைமுக அதிகார சபையின் எல். பீ. நுழைவாயில் பகுதியில் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கோரிக்கை நிறைவேற்றாப்படாவிடில் போராட்டத்தை உண்ணாவிரதப் போராட்டமாக முன்னெடுப்பதற்கு ஆர்ப்பாட்டக்காரர்கள் தீர்மானித்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)



யாழ்ப்பாணம் பெனிசுலா றோட்டறக்ட் கழகத்தின் ஏற்பாட்டில் "மன அழுத்த நிவாரணம் மற்றும் ஆரோக்கியமான உதவிக்குறிப்புகளுக்கான யோகா" என்னும் தலைப்பில் மன அழுத்தத்திலிருந்து விடுபடும் யோகா செயற்திட்டம் நல்லூரில் அமைந்துள்ள திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் அண்மையில் நடாத் தப்பட்டது. (க)

## வெற்றிலைக்கூறின் விலை அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 30
கொழும்பில் பாக்கின் விலை திடீரென அதிகரித்ததால் யாழ். மாவட்டச் சந்தைகளில் வெற்றிலைக் கூறின் விலை பத்து ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஒரு கிலோ முழுப்பாக்கின் விலை 700 ரூபாவாக அதிகரித்துள்ளது. இதனால் பாக்குச் சீவலின் விலையும் அதிகரித்துள்ளது. இதனால் வியாபாரிகளால் இருபது ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட சீவல் கூறு நேற்றுத் தொடக்கம் 30 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. (க-9)

# காட்டு யானைகளை கட்டுப்படுத்த கோரிக்கை

*வனஜீவராசிகள் திணைக்களத்துக்கு கடிதம்*

முல்லைத்தீவு, ஜூலை 30
ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட திருமுறிகண்டி கிராம அலுவலர் பிரிவில் காட்டு யானைகளின் தொல்லைகள் அதிகரித்துள்ளன. அவற்றைக் கட்டுப்படுத்தக் கோரி, புதுக்குடியிருப்பு பிரதேச சபை தவிசாளர் செ. பிறேமகாந், ஒட்டுசுட்டான் வனஜீவராசிகள் திணைக்களத்துக்குக் கடிதம் அனுப்பியுள்ளார்.

இந்தப் பகுதியில் காட்டு யானைகளின் வருகை அதிகரித்துள்ளதால், மக்கள் அச்சத்தில் உள்ளனர். விவசாய தோட்டங்கள் மற்றும் பயன் தரும் மரங்கள் காட்டு யானைகளால் அழிக்கப்படுகின்றன.

அண்மையில் கிளிநொச்சி பல்கலைக்கழக விரிவுரையாளர் ஒருவர், காட்டு யானையின் தாக்குதலில் பாதிக்கப்பட்டுள்ளார்.

காட்டு யானைகள் மக்கள் குடியிருப்புகளுக்குள் பிரவேசிப்பது மக்களுக்கு மிகுந்த அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. இது தொடர்பில் விரைந்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கடிதத்தில் கோரப்பட்டுள்ளது. (க-222)

# குருபரன் மீதான நடவடிக்கை கோழைத்தனமான செயற்பாடு

*மங்களராஜா கண்டனம்*

யாழ்ப்பாணம், ஜூலை 30
யாழ். பல்கலைக்கழக சட்டத் துறைத் தலைவராக விளங்கிய குமாரவடிவேல் குருபரன் பதவியிலிருந்து விலகியமை சட்டத்துறை மாணவர்களுக்கு மட்டுமன்றி யாழ். மக்களுக்கும் ஒரு பேரிழப்பாகும். அவர் மீதான நடவடிக்கை கோழைத்தனமான செயற்பாடாக கொள்ளத்தக்கது.

இவ்வாறு யாழ். கத்தோலிக்க மறை மாவட்ட நீதி சமாதான ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அதன் தலைவர் அருட்பணி எஸ். வி. பி. மங்களராஜா அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நாவற்குழியில் கைது செய்யப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டோரின் ஆட்கொணர்வு மனு மீதான வழக்கில் இவர் முன்னிலையானமை தான் இவரை நீக்குவதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைக்கான காரணமென அறிகிறோம். இவரை நீக்குவதற்கென்றே பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு கொடுத்த அழுத்தத்துக்கு அடிபணிந்து பல்கலைக் கழகப் பேரவையும் செயற்பட்டிருப்பது போலத் தென்படுகிறது.

பல்கலைகழக பேரவை தமது சுயாதீன தன்மையை இழந்துவிட்டது போலத் தென்படுகின்றது.

குருபரனை நீக்குவதற்காகவே அவசரம் அவசரமாக சட்டங்களில் மாற்றங்களைச் செய்து, முன்னர் சில விதிமுறைகளின் படி வழக்குகளில் முன்னிலையாகலாம் என்றிருந்த சட்டங்களில் மாற்றம் செய்யப்பட்டு பல்கலைக்கழக பேராசிரியர்கள் வழக்குகளில் முன்னிலையாவதற்கு முற்றாகத்தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஏட்டுச்சுரைக்காய் கறிக்கு உதவாது என்று ஒரு பழமொழியுண்டு. மருத்துவத்துறை, பொறியியல் துறை போன்ற எந்தத்துறையானாலும் அங்கு பயில்வோருக்கு நடைமுறை, செய்முறைப்பயிற்சி அவர்களது பாடவிதானத்தின் ஒரு முக்கிய அம்சமாகும்.

அதுபோல சட்டத்துறையிலும் பல்கழைக்கழகப் பேராசிரியர்கள் தமது மாணவர்களை தாம் முன்னிலையாகும் வழக்குகளுக்கு நீதிமன்றுக்கு அழைத்துச் சென்று வழக்கில் எவ்வாறு வாதங்களை வரிசைப்படுத்தி முன்வைப்பது, சாட்சிகளை முன்னிலைப்படுத்தி விசாரிப்பது அல்லது குறுக்கு விசாரணை செய்வது, நீதிவானின் தலையீடுகள் சம்பந்தமான விடயங்கள் எல்லாவற்றையும் அவதானிக்க வைப்பது போன்ற பயிற்சி சட்டத்துறை மாணவர்களுக்கு மிக முக்கியமானதொன்றாகும்.

எதுவிதமான வலுவான நீதியான காரணமுமின்றி தமது மனச்சாட்சிக்கு ஏற்ப செயற்படும் சட்டத்தரணி ஒருவரை அவர் முன்னிலை யாகி யிருக்கும் வழக்கிலிருந்து அப் புறப்படுத்த மேற்கொள்ளும் நடவடிக்கை கோழைத் த னமானது.

அத்துடன் குருபரன் மீதான நடவடிக்கை சட்டத்துறைக்கு மட்டுமல்ல கடந்த பல வருடங்களாக கட்டவிழ்த்தப்பட்டிருக்கும் மனித உரிமை மீறல் செயற்பாடுகளுக்கு நீதி கிடைப்பதை இன்னும் தாமதமாக்கும். இது குருபரன் என்ற தனிப்பட்ட, இலங்கை குடியுரிமை பெற்ற ஒரு வரது அடிப்படை உரிமைகளை மீறும் செயற்பாடு - என்றுள்ளது. (க)

# மனித உரிமை அமைப்புக்கள் இலங்கைக்கு கடும் எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 30

சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் மனித உரிமை பாதுகாவலர்கள் உள்ளிட்டோரை அச்சுறுத்தி கைது செய்யும் நடவடிக்கைகளை இலங்கை உடனடியாக நிறுத்திக்கொள்ள வேண்டும் என்று சர்வதேச மனித உரிமை அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன.

இலங்கையின் தற்போதைய நிலைமைகள் தொடர்பாக கருத்து தெரிவிக்கும்போதே சர்வதேச மனித உரிமை அமைப்புகள் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளன. அதில் மேலும் உள்ளதாவது;

'அரச சார்பற்ற செயலகம் உட்பட பல அமைப்புகள் பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன. மேலும் பாதுகாப்பான ஒழுக்கமான நாட்டை உருவாக்குவதற்கான ஜனாதிபதி செயலணிகள் போன்றன நியமிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் ஓய்வுபெற்ற பாதுகாப்பு அதிகாரிகள் உயர் பதவிகளுக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். இது நாட்டை இராணுவமயப்படுத்துவதை நோக்கிய ஆபத்தான போக்காகும். ஜனாதிபதி உட்பட தற்போதைய அரசாங்கத்திலுள்ள பலர், உள்நாட்டு போரின்போது போர்க்குற்றங்களில் ஈடுபட்டவர்கள். எனவே அனைத்து இலங்கையர்களினதும் மனித உரிமைகளை மதிக்குமாறும், பாதுகாக்குமாறும் ஐக்கிய நாடுகள் சபை மற்றும் இலங்கைக்கு நிதி வழங்கும் சமூகம் வேண்டுகோள் விடுக்கவேண்டும்' என்றும் அந்த அமைப்புகள் வலியுறுத்தியுள்ளன. (ஐ)

# 33 கிலோ கஞ்சாவுடன் ஒருவர் நேற்றுக் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 30

யாழ்ப்பாணம் ஐந்து சந்திப் பகுதியில் 33 கிலோ 792 கிராம் கேரளக் கஞ்சாவுடன் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய தலைமைப்பொலிஸ் பரிசோதகர் பிரசாத் பெர்ணாண்டே தெரிவித்தார். யாழ்ப்பாணம் குற்றத்தடுப்பு புலனாய்வு பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கு அமைய யாழ்ப்பாணம் ஐந்து சந்தி பகுதியில் உள்ள வீட்டில் வைத்து இந்தக் கஞ்சா பொதிகள் கைப்பற்றப்பட்டுள்ளதாகப் பொலிஸார் கூறினர். இவற்றின் பெறுமதி சுமார் 66 இல்ட்சம் ரூபா என்று கணக்கிடப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்ட சந்தேக நபர் தொடர்பில் மேலதிக விசாரணை முன்னெடுக்கப்படுகின்றது. (ஒ,5,25)



# புத்தளத்தில் வாக்களிக்கும் ஏற்பாடு தேர்தல் சட்டத்தின்படியே நடக்கிறது

## வவுனியா தெரிவத்தாட்சி அலுவலர் தெரிவிப்பு

கொழும்பு, ஜுலை 30

தேர்தல் சட்டத்தின் பிரகாரமே இடம்பெயர்ந்த வாக்காளர்களுக்கு புத்தளத்தில் வாக்களிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று வன்னித் தேர்தல் மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலரும் வவுனியா மாவட்டச் செயலருமான சமன் பந்துலசேன தெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்டச் செயலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேர்தல் சட்டத்தின் 125 (அ) உறுப்புரைக்கு அமைவாக இடம்பெயர்ந்த வாக்காளர் ஒருவர் தான் வாழும் பிரதேசத்தில் வாக்களிப்பதற்கான ஏற்பாடுகளை முறைப்படி கோருமிடத்து தேர்தல் ஆணைக் குழு அதனை ஏற்றுக்கொள்ளும். குறிப்பாக வாக்காளர்கள் தமக்குப் பாதுகாப்பு அடிப்படையின் கீழ் தாம் வசிக்கும் இடத்தில் வாக்களிப்பதற்கான அனுமதியைக் கோரும்போது அதற்கான அனுமதியை தேர்தல் ஆணைக் குழு வழங்கும். அந்த அடிப்படையில்தான் புத்தளத்தில் உள்ள இடம்பெயர்ந்த வாக்காளர்கள் விண்ணப்பங்களை அனுப்பியுள்ளனர். அதனை தேர்தல் ஆணைக் குழு உரிய முறைப்படி ஏற்றுக் கொண்டு அவர்களுக்கு வாக்களிக்கும் உரிமையை இந்தமுறை வழங்கியுள்ளது.

வன்னி மாவட்டத்தின் தெரிவத்தாட்சி அலுவலர் என்ற வகையில் வவுனியா, மன்னார் மற்றும் முல்லைத்தீவு ஆகிய மூன்று மாவட்டங்களில் வாக்காளர்கள் தங்களுக்கு என்று அறிவிக்கப்பட்டுள்ள வாக்களிப்பு நிலையங்களில் எந்தவித தங்கு தடையுமின்றி வாக்களிப்பதற்கான சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

புத்தளம் மாவட்டத்தில் உள்ள வாக்காளர்கள் மன்னார் பிரதேசத்துக்கோ அல்லது தங்களது நிரந்தர பிரதேசத்துக்கோ சென்று வாக்களிக்கும்போது கடந்தகால அனுபவங்களின் அடிப்படையில் போக்குவரத்து இடைஞ்சல் மற்றும் பாதுகாப்பு அச்சுறுத்தல் உள்ளிட்ட பிரச்சினைகள் காரணமாகத்தான் அவர்களுக்கு தேர்தல் ஆணைக் குழு இடம்பெயர்ந்து இருக்கும் தற்போதைய இடத்தில் வாக்களிக்க அனுமதி வழங்கியுள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் பரிந்துரையின்படியே அந்தக் கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதனைச் செயற்படுத்தும் அதிகாரியே மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர். எனவே எந்தவித மோசடிகளும், முறைகேடுகளும் இன்றி வாக்களிப்பு இடம்பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. என்றார். (த-18)



கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயம்

**வரலட்சுமி காப்பு**

31.07.2020 வெள்ளிக்கிழமை பிற்பகல் 02.00 மணிக்கு அம்பாளுக்கு விசேட பூஜைகள் இடம்பெற்று அதனைத் தொடர்ந்து திருவிளக்குப் பூஜையும், காப்பு கட்டலும் இடம்பெறும்.

வரலட்சுமி காப்பு கட்ட விரும்புபவர்கள் தமது பெயர்களை முற்கூட்டியே ஆலயக் காரியாலயத்தில் பதிவுசெய்யவும்.

**ஆலய பரிபாலன சபையினர்**

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம் வெளிவாரிப் பரீட்சைகள் வியாபார முகாமைத்துவமாணிக் கற்கைநெறி (வெளிவாரி)**

**• முதலாம் வருட முதலாம் அரையாண்டுப் பரீட்சை - 2018**

மேற்படி பரீட்சையினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் எதிர்வரும் ஆவணி மாதமளவில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இப்பரீட்சைக்கு தோற்றத் தகுதியான பரீட்சார்த்திகள் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்திலோ அல்லது www.codl.jfn.ac.lk எனும் இணையத்தள முகவரியிலோ விண்ணப்பப்படிவத்தினைப் பெற்றுக்கொள்ளலாம்.

மேற்படி பரீட்சைகளுக்கான பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்வதற்கான இறுதித்திகதி 14.08.2020 **(வெள்ளிக்கிழமை)** ஆகும்.

மேலதிக விவரங்களைப் பெறவிரும்புவோர் 021-222-3612 என்ற தொலைபேசி எண்ணுடன்தொடர்பு கொள்ளலாம்.

பதிவாளர்
29.07.2020

(in 13338) (13.17)

## கண்ணீர் அஞ்சலி

வடமாகாண ஆயுர்வேத மருத்துவர் நலன்புரி மன்றத்தில் உறுப்பினராக உள்ள **வைத்திய கலாநிதி எட்ணா. J** அவர்களின் தந்தை


**கபிரியேல் எட்வேட்**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**வடமாகாண ஆயுர்வேத மருத்துவர் நலன்புரிச்சங்கம்.**

## கண்ணீருடன்.....

திருமறைக் கலாமன்றத்தின் ஸ்தாபக அங்கத்தவரும், மூதவை உறுப்பினரும் மன்றத்தின் வளர்ச்சியில் அரை நூற்றாண்டுக்கு மேலாக அர்ப்பணிப்புடன் பணியாற்றிய கலைச்சேவையாளனுமாகிய



**வைத்திய கலாநிதி**
**கபிரியேல் எட்வேட்**

அவர்கள் 28.07.2020 இல் காலமானதையிட்டு ஆழ்ந்த துயரடைந்துள்ளோம். அவருக்கு எமது நெஞ்சம் கனக்கும் கண்ணீர்த் துளிகளை காணிக்கையாக்கி, அவரது இழப்பால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து, அவரது ஆத்ம சாந்திக்காக இறைவனை இறைஞ்சி நிற்கின்றோம்.

**இயக்குநர், அங்கத்தவர்கள், திருமறைக் கலாமன்றம்**

**238, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.**

குறிப்பு :

இன்று காலை 8.45 மணிக்கு அவரது இல்லத்தில் திருமறைக் கலாமன்றத்தின் ஏற்பாட்டில் அஞ்சலி நிகழ்வு இடம்பெறும். இந்நிகழ்வில் மன்ற அங்கத்தவர்கள், ஆதரவாளர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

# கட்சி உறுப்புரிமை நீக்கப்பட்ட பலரும் ரணிலுடன் பேச்சு

## அதனால் அவர்களின் பெயர்களை வெளியிடவில்லை என்கிறது ஐ.தே.க.

கொழும்பு, ஜுலை 30

ஐக்கிய மக்கள் சக்தியில் வேட்புமனுத் தாக்கல் செய்தமைக்காக கட்சி உறுப்புரிமை நீக்கப்பட்ட பலர் ரணில் விக்ரமசிங்கவுடன் பேச்சுக்களில் ஈடுபட்டுள்ளனர். பொதுத்தேர்தலின் பின்னர் மீண்டும் ஐ.தே. க.வுடன் இணைந்து நேர்மையாகச் செயற்படுவோம் என்று அவர்கள் உறுதிமொழி வழங்கியுள்ளனர் என்று ஐ.தே.க.வின் தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

அதனால், கட்சி உறுப்புரிமை நீக்கப்பட்டவர்களின் பெயர்களை வெளியிடுவதை ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய செயற்குழு தாமதப்படுத்தியுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய கட்சி உறுப்புரிமை நீக்கப்பட்டுள்ள 54 வேட்பாளர்களின் பெயர்களை சில தினங்களுக்கு வெளியிடவேண்டாம் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் செயற்குழுவுக்கு அறிவித்துள்ளார். ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பாக வேட்புமனு தாக்கல்செய்த 54 ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியை ஆதரிக்காத உள்ளூராட்சி அமைப்புகளின் 61 உறுப்பினர்களின் பெயர் விவரங்களை நேற்று வெளியிடுவதாக ஐ.தே.க. முன்னர் அறிவித்திருந்தது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

## தேவை

**German Sheperd** அல்லது **Lion Sheperd**இன

**ஆண் நாய்க்குட்டி தேவை.**

தொடர்பு:- 076 116 5106

## பெயர் மாற்றம்

நாரந்தனை தெற்கு ஊர்காவற்றுறை இல் வசிக்கும் **இராயப்பு ஜீலியஸ்** ஆகிய நான் இன்றில் இருந்து எனது பெயரை **இராயப்பு ஜூலியஸ்** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் எனது பெயரை **இராயப்பு ஜூலியஸ்** என்றே பயன்படுத்துவேன் என இலங்கை சோசலிச குடியரசுக்கு தெரியப்படுத்துகின்றேன்.

(உ-33256) (13.17) **இராயப்பு ஜூலியஸ்**

## பணிப்பெண் தேவை

சண்டிலிப்பாயில் உள்ள வீடொன்றில் 77 வயதுடைய வயோதிபப் பெண் ஒருவரை தங்கி நின்று பராமரிப்பதற்கு பணிப்பெண் தேவை. (தகுந்த சம்பளம் வழங்கப்படும்)

தொடர்பு: viber No: 0044 7438 453457
யோசேப் தவசீலன்
Email: tjoseph74@hotmail.com

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



**சோமசுந்தரம் நவரத்தினராசா**
(நவரத்தினம்)

பிறப்பு 08.05.1946 — இறப்பு 30.06.2020

கடந்த 30.06.2020 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த சோமசுந்தரம் நரவத்தினராசா (நவரத்தினம்) அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (30.07.2020) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நெல்லொரு பதிபிள்ளையார் கோயிலடி, தாவடி தெற்கு, கொக்குவில்.

**குடும்பத்தினர்.**

## 33 சாராயப் போத்தல்களுடன் கொழும்புத்துறையில் முதியவர் கைது

அனுமதியின்றி 33 சாராயப் போத்தல்களை வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் யாழ்ப்பாணப் பொலிஸார் முதியவர் ஒருவரை நேற்றுக் கைதுசெய்துள்ளனர். யாழ்ப்பாணம் கொழும்புத்துறையைச் சேர்ந்த அவர், விற்பனை செய்யும் நோக்கில் 250 மில்லிலீற்றர் அளவுடைய 33 சாராயப் போத்தல்கள் வைத்திருந்தார் என்றும் தமக்குக் கிடைத்த தகவலுக்கமைய அவர் கைதுசெய்யப்பட்டார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (த-159)

## ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
06
07
1942

உதிர்வு
17
08
2013

**அமரர் தம்பிமுத்து சுந்தரேஸ்வரன்**
**(இராசா)**
**திதி: ஏகாதசி (30.07.2020)**

உங்களை நாமிழந்து
ஏழு ஆண்டுகள்
இத்தனை விரைவாய்
ஓடி மறைந்தாலும்
அனுதினமும்
உங்கள் நினைவுகள்
எங்களது மனங்களில்
பசுமை மாறாது
நீண்டு நிலைத்திருக்கும்
உங்களது ஆத்மா
சாந்திபெற அருள
சிவபூத நாதேஸ்வரர்
திருப்பாதங்களை
வேண்டித் துதிக்கின்றோம்

கரந்தன் வீதி,
நீர்வேலி தெற்கு.

குடும்பத்தினர்.

(ஐ 33250) (13.17)

யாழ்ப்பாண நகரில்

# போக்குவரத்து விதிகளை மீறினரென இருவர் கைது

கொடிகாமம், ஜூலை 30

யாழ்ப்பாண நகரப் பகுதியில் போக்குவரத்து விதிகளை மீறின் என்ற குற்றச்சாட்டில் இருவரை யாழ்ப்பாணப் பொலிஸ் நிலைய போக்குவரத்துப் பிரிவுப் பிரிவினர் நேற்றுக் கைதுசெய்தனர். மது அருந்தியமை மற்றும் வாகன அனுமதிப் பத்திரமின்றி மோட்டார் சைக்கிள் செலுத்தியமை ஆகிய குற்றங்கள் அவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ளன. அவர்கள் விசாரணையில் உள்ளனர் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த-159)

## பதினெட்டாம் ஆண்டு நினைவஞ்சலி



நயினையம்பதியில்
03
09
1936

நல்லையம்பதியில்
19
07
2002

**அமரர் நயினையூர் இராமநாதன் கோபாலபிள்ளை**
**திதி : ஆடிப்பூர்வபட்ச ஏகாதசி (30.07.2020)**


ஐயா எங்கள் அன்பின் குலதெய்வமே
எங்களை பிரிந்து பதினெட்டு ஆண்டுகள் ஆகிவிட்டதோ
உங்கள் பதினேழாம் ஆண்டுதனில் அம்மா எனும்
ஆருயிர் அன்புத் தெய்வமும் உங்களுடன் வந்துவிட்டா
உங்களை பிரிந்து நாங்கள் தவிக்கின்றோம்
பாசம், நேசம் என்ற தாய், தந்தை உறவுகளுக்கு
வேறு எந்த உறவுகளும் நிகராகுமா, ஈடாகுமா ஐயா !

என்றும் உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல நாயன்மார்கட்டு அரசடிப்பிள்ளையாரையும், நயினை நாகபூசணியையும், நல்லூர் முருகனையும் பிரார்த்திக்கின்றோம்.

2/1 மூர்த்த விநாயகர் வீதி,
கடுக்காயடிலேன்,
நல்லூர், யாழ்ப்பாணம்.

உங்கள் பிரிவால் துயருறும்,
அன்புப் பிள்ளைகள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்.

## 10 ஆம் வருட நினைவஞ்சலி



மண்ணில்
15
12
1952


விண்ணில்
21
07
2010

**அமரர் வல்லிபுரம் கணேசலிங்கம்**
**(முன்னாள் உரிமையாளர் – எரிக்கணேஸ் பல் மூக்குக் கண்ணாடியகம்)**
திதி : ஆடிமாதம் வளர்பிறை ஏகாதசி 30.07.2020

அப்பா என்றழைத்த எம் தெய்வமே!
மூன்றெழுத்தில் தாம் பெற்ற தவம்...
இத்தவத்தைப் பெற நாம் இறைவனிடம் கையேந்தவில்லை
எனினும் கொடுத்தார் எமக்கு மாபெரும் வரமாய் என் தந்தையே
அப்பா...!
என்ற ஒன்றின் இலக்கணத்தில்
அன்பு, பாசம், பிரிவு, நேசம், செல்வம்
வெகுளித்தனம் என இவை அனைத்தும் அடங்கிவிடும்
அன்பு என்ற ஒன்றின் அடையாளமே நீங்கள் மட்டும் தான்.
இனி உங்களை எப்போது காண்போம் அப்பா!
உயிரோடு கலந்த எங்களை ... நீங்கள்
உடலால் பிரிய என்ன காரணமோ....!
உங்களை பிரிந்து பத்து ஆண்டுகள் ஆகியும்
உங்கள் நினைவுகள் ஒன்று கூட
எங்களை விட்டு போகவில்லையே.
நிஜமான வாழ்க்கையிலே -நீங்கள்
நிழலாய் வந்திடுங்கள்
அழகான வாழ்க்கையில் அஸ்திவாரம் நீங்கள் தானே...!

மனைவி, பிள்ளைகள்,
சகோதரர்கள்.

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு
28
04
1939

உதிர்வு
12
08
2019

**அமரர் கணபதிப்பிள்ளை சுந்தரலிங்கம்**
**(ஓய்வுநிலை அதிபர், சமாதான நீதவான்)**
**திதி: ஏகாதசி (30.07.2020)**

எமது குடும்பத்தின் மூச்சுக்காற்றாய் நின்று
எம்மையெல்லாம் வழிநடத்திய தந்தையே
நீங்கள் எம்மைவிட்டு பிரிந்து ஆண்டு
ஒன்று கடந்தாலும் ஆறவில்லை எம் துயரம்
மீண்டும் எம் உறவில் வந்துதிக்க
வேண்டுகின்றோம்

பத்தானை வீதி,
தாவடி தெற்கு, கொக்குவில்.

மனைவி, மகள், மருமகன்,
பேரப்பிள்ளைகள்




## 47 சீன செயலிகளுக்கு தடை விதித்தது இந்தியா

புதுடில்லி, ஜூலை 30

இந்திய தகவல் தொடர்பாடல் அமைச்சு மேலும் 47 சீன செயலிகளுக்குத் தடை விதித்துள்ளது. இந்தியாவில் ஏற்கனவே 59 சீன செயலிகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து மேலும் 47 செயலிகளுக்கு மத்திய அரசு நேற்று முன்தினம் தடை விதித்துள்ளது. இதைத்தொடர்ந்து தடை செய்யப்பட்டுள்ள சீன செயலிகளின் எண்ணிக்கை 106 ஆக அதிகரித்துள்ளது. இந்தியாவின் எல்லைப் பிராந்தியமான லடாக்கில் சீன ஊடுருவலுக்கு பின்னர் மத்திய அரசு நாட்டின் பாதுகாப்புத் தொடர்பாக பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இதன்படி, இந்தியாவின் இறையாண்மை மற்றும் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் விளைவிப்பதாகத் தெரிவித்து சீன செயலிகளுக்கு மத்திய அரசு தடை விதித்துள்ளது.

மேலும் பொழுதுபோக்கு செயலிகளைப் பயன்படுத்தக்கூடாது என இராணுவ வீரர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதுடன், தொழில்நுட்பப் பாதுகாப்பு தொடர்பான அனைத்து நடவடிக்கைகளிலும் மத்திய அரசு கவனம் செலுத்தியுள்ளது. இந்த நிலையில், பப்ஜி உள்ளிட்ட மேலும் 47 சீன செயலிகளுக்கு தடை விதிப்பது தொடர்பில் மத்திய அரசு ஆலோசித்து வருகின்றது என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (ரி1)

## மலேசிய முன்னாள் பிரதமர் நஜிப்பிற்கு 12 ஆண்டு சிறை

கோலாலம்பூர், ஜூலை 30

மலேசிய முன்னாள் பிரதமர் நஜிப் ரசாக் மீது 12ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. 1 மலேசிய அபிவிருத்தி பெர்ஹாத் நிதியத்தின் நிதியில் இடம்பெற்ற திருட்டு தொடர்பில் அவர் குற்றவாளி என்பது நிரூபனமானது. இந் நிலையிலேயே நேற்று முன்தினம் இத் தீர்ப்பு அளிக்கப்பட்டது. 210மில்லியன் ரிங்கிட் அபராதம் வழங்கவும் நீதிமன்றம் அவருக்கு உத்தரவிட்டுள்ளது.


2009தொடக்கம் 2018ஆம் ஆண்டு வரை பிரதமராக இருந்த நஜிப்பின் தனிப்பட்ட வங்கிக் கணக்கிற்கு 42மில்லியன் ரிங்கிட் தொகை பரிமாற்றப்பட்டதை மையமாகக் கொண்டதாகவே இந்த வழக்கு அமைந்திருந்தது. (ரி1)

உணவுப் பற்றாக்குறையால்

# 1.28 இலட்சம் சிறுவர்கள் உயிரிழக்கும் அபாயம்

ஐக்கிய நாடுகள் சபை எச்சரிப்பு

**சர்வதேச ரீதியில் 1.28 இலட்சம் சிறுவர்கள் உணவுப் பற்றாக்குறையால் உயிரிழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்று ஐக்கிய நாடுகள் சபை எச்சரித்துள்ளது.**



கொரோனா வைரஸ் பரவலைத் தடுப்பதற்கென பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. அதன் காரணமாக உணவுப் பொருள் உற்பத்தி வேளாண்மை நுகர்வு சந்தை என்பன துண்டிக்கப்பட்டுள்ளன. தொலைதூர கிராம பகுதிகளுக்கான உணவுப் பொருள் மற்றும் மருந்து விநியோகமும் தடைப்பட்டுள்ளன. இந்நிலையில் ஒவ்வொரு மாதமும் சுமார் 10 ஆயிரம் சிறுவர்கள் உணவுப் பற்றாக்குறையால் உயிரிழக்கின்றமை கண்டறியப்பட்டுள்ளது. அதற்கமைய இவ்வருடத்தில் மாத்திரம் 1.28 இலட்சம் சிறுவர்கள் உயிரிழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இதேவேளை மக்களிடையே ஊட்டச்சத்து பற்றாக்குறை அதிகரித்து வரும் நிலையில் அது நீண்டகால பின்விளைவுகளை ஏற்படுத்தக்கூடும் உணவுப் பற்றாக்குறையை நீக்க சர்வதேச நாடுகள் துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென ஐக்கிய நாடுகள் சபை அறிவுறுத்தியுள்ளது. (ரி-1)

3 மாதங்களின் பின்


## சீனாவில் கொரோனா 100 ஐக் கடந்தது

பீஜிங், ஜூலை 30

மூன்று மாதங்களுக்குப் பிறகு சீனாவில் 100க்கும் அதிகமானவர்களுக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

சீனாவில் கொரோனா வைரஸ் இரண்டாம் கட்டப் பரவலை அடைந்துள்ளது. இதன் காரணமாக அங்கு கொரோனாப் பரவல் மெல்லத் தீவிரமடைந்துள்ளது.

இதுகுறித்து சீனாவின் சுகாதார அமைச்சுக் தெரிவிக்கும் போது, "சீனாவில் கடந்த மூன்று மாதங்களுக்குப் பிறகு நேற்று 100க்கும் அதிகமானவர்களுக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதில் 89 பேருக்கு உள்ளூரிலேயே தொற்று ஏற்பட்டுள்ளது. இவர்கள் அனைவரும் சின்ஜியாங் மாகாணத்தைச் சேந்தவர்கள் எனத் தெரிவித்துள்ளது. (ரி1)



சீன மாணவர்களை குறிவைத்து

## ஆஸ்திரேலியாவில் கடத்தல் மோசடி

கான்பரா, ஜூலை 30

ஆஸ்திரேலியாவில் மோசடிக்காரர்கள் சீனாவிலிருந்து வரும் மாணவர்களைக் குறிவைத்து கடத்தல் மோசடியில் சிக்கவைப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதில் சிக்கும் மாணவர்களும் அவர்களின் குடும்பத்தினரும் பெருமளவில் பிணைத்தொகை அளிக்கவேண்டும் என்று மிரட்டப்பட்டுள்ளமை தெரிய வந்துள்ளது.

பல சம்பவங்களில் மிரட்டப்பட்ட மாணவர்கள் தாங்கள் கடத்தப்பட்டதைப் போன்று போலியாக ஒளிப்பதிவு செய்து சீனாவிலுள்ள குடும்பத்தினருக்கு அனுப்பிப் பணம்பெறவேண்டிக் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளனர்.

இதுவரை இவ்வாறு 8 சம்பவங்கள் குறித்து புகார் அளிக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். அவற்றில் ஒரு சம்பவத்தில் மீட்புத் தொகையாக சுமார் 2 மில்லியன் டொலர் அளிக்கப்பட்டுள்ளது.

சீன மொழி பேசும் மோசடிக்காரர்கள் பாதிக்கப்பட்டவர்களுடன் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு மாணவர்கள் பெரும் பிரச்சினையில் சிக்கியுள்ளனர் என்று கூறுவர். அந்தப் பிரச்சினையிலிருந்து தப்பிக்கப் பிணைத்தொகை அளிக்கவேண்டும் என்று மிரட்டுவர். மேலும், மாணவர்கள் தங்கள் குடும்பத்தினருடன் தொடர்பு வைத்திருக்க அனுமதிக்கப்படமாட்டார்கள்.

இவ்வாறான சம்பவங்களிலிருந்து மாணவர்கள் தப்பிப்பதற்கு விழிப்புடன் இருக்கவேண்டும் என்றும், முன்கூட்டியே உதவி நாட வேண்டும் என்றும் நியூ சவுத் வேல்ஸ் பொலிஸ் தெரிவித்துள்ளது. (ரி1)

# புகலிடக் கோரிக்கையாளர்கள் 65 பேருக்கு கொரோனா உறுதி

மோல்டா அரசு அறிவிப்பு

மத்தியதரைக் கடலில் வைத்து மோல்டா கரையோரப் பாதுகாப்புப் படையினரால் மீட்கப்பட்ட புகலிடக் கோரிக்கையாளர்களில், 65 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட 94 புகலிடக் கோரிக்கையாளர்களும் கரைக்கு அழைத்து வரப்பட்டு பி.சி.ஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருந்தனர்.



பரிசோதனை முடிவுகள் கிடைக்கப்பெற்றவர்களில், 65 பேர் தொற்றுக்குள்ளானது கண்டறியப்பட்டதுடன், 20 பேருக்குத் தொற்று இல்லையென்பதும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஏனைய 9 பேரினது முடிவுகள் இன்னும் கிடைக்கப்பெறவில்லை என மோல்டா அறிவித்துள்ளது. புகலிடக் கோரிக்கையாளர்கள் எரித்திரியா, மொரோக்கோ மற்றும் சூடான் ஆகிய நாடுகளை சேர்ந்தவர்களெனவும் இவர்கள் லிபியாவிலிருந்து தமது பயணத்தை ஆரம்பித்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி1)

# தமிழ், முஸ்லிம் மக்கள் மீண்டும் ஒருமுறை ராஜபக்சக்களுடன் கைகோர்க்க வேண்டும்

## லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன அழைப்பு

**கொழும்பு, ஜூலை 30**
**இஸ்லாம் அடிப்படைவாதிகள் மற்றும் தமிழ் பிரிவினைவாதிகளை விடுத்து ஏனைய அனைத்து தமிழ், முஸ்லிம் மக்கள் மீண்டும் ஒருமுறை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச மற்றும் மஹிந்த ராஜபக்சவுடன் கைகோர்க்க வேண்டும் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.**

பொதுஜன பெரமுன அலுவலகத்தில் நேற்றுப் புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்தமுறை மூன்றில் இரண்டு பெரும்பான்மை அல்ல. 1977 ஜே.ஆர்.ஜயவர்தன ஆட்சிக் காலத்தைப்போன்று 6 இல் 5 பெரும்பான்மைப் பலம் கிடைக்கும் என்று நம்புகின்றோம் என்று தெரிவித்தார்.

இதுதவிர, பொதுஜன பெரமுனவின் நிறுவுநர் பசில் ராஜபக்சவை அரசியலிலிருந்து நீக்குவதற்கான சதித்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்றும் அவர் தெரிவித்தார்.

முன்னாள் அமைச்சரொருவர் கொழும்பிலுள்ள நட்சத்திர ஹொட்டலொன்றில் இதுபற்றி பலருடன் பேசியிருக்கின்றார். இது தொடர்பில் பொலிஸ்மா அதிபரிடம் முறைப்பாடளித்திருக்கின்றோம். இரகசியமானதும் நுட்பமானதுமான விசாரணை முன்னெடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்துகின்றோம். பசில் ராஜபக்சவை அரசியலிலிருந்து நீக்காமல் எந்தச் சந்தர்ப்பத்திலும் தம்மால் ஆட்சியைக் கைப்பற்ற முடியாது என்று குறித்த அந்த முன்னாள் அமைச்சர் கூறியிருக்கின்றார். எனவே இது தொடர்பில் விசாரணைகளை நடத்துவது மாத்திரமின்றி பசில் ராஜபக்சவுக்கு விஷேட பாதுகாப்பை வழங்குமாறும் வலியுறுத்துகின்றோம். அவருக்கு உயிர் அச்சுறுத்தல் ஏற்படுவதற்குச் சந்தர்ப்பமுள்ளது.

எனினும், சதித்திட்டம் மூலம் பசில் ராஜபக்சவை அரசியலிலிருந்து நீக்க முடியாது. அவர் சிரேஷ்ட அரசியல் தலைவர் என்பதால் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தி அரசியலிலிருந்து விலக்க முயற்சிக்கலாம். எனவேதான் விஷேட பாதுகாப்பைக் கோருகின்றோம் - என்றார். (த)

# 12 இல் 4 வாகனங்களை மீள வழங்கிய சந்திரிகா

கொழும்பு, ஜூலை 30
முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, தனது அலுவலகத்துக்கு ஒதுக்கப்பட்ட 12 வாகனங்களில் நான்கு வாகனங்களை அரசிடம் மீள வழங்கியுள்ளார். அரசு எதிர்கொள்ளும் நிதி நெருக்கடியைக் கருத்திற் கொண்டு, இந்த மாத தொடக்கத்தில் அந்த வாகனங்களை மீள ஒப்படைத்துள்ளேன் என்று அவர் ஜனாதிபதியின் செயலாளருக்குக் கடிதம் மூலமாகத் தெரிவித்துள்ளார்.

தனது தனிப்பட்ட பயன்பாட்டுக்கு 9 வாகனங்களும், பாதுகாப்புப் பிரிவுக்கு 3 வாகனங்களுமாக 12 வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன என்றும் அவற்றில் 4 வாகனங்களையே மீள ஒப்படைத்துள்ளேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மெர்சிடிஸ் பென்ஸ் கார் (மொடல் எஸ் 600), நிசான் ரோந்து ஜீப், மகேந்திர டபுள் கப் மற்றும் டொயோட்டா லாண்ட் குரூசர்ஜீப் ஆகிய வாகனங்களே மீள ஒப்படைக்கப்பட்டுள்ளன.

மீதமுள்ள எட்டு வாகனங்களில் இன்னொன்றைத் திருப்பித் தருவதாகவும் கடிதத்தில் கூறியுள்ளார். (த)

# பிடிக்கவில்லையெனின் விலகுங்கள் எமக்குப் பாதிப்பு ஏற்படுத்தாதீர்கள்

## கூறுகிறார் ரணில் விக்கிரமசிங்க

கொழும்பு, ஜூலை 30
ஐக்கிய தேசியக் கட்சி பிடிக்கவில்லை என்றால், வேறு கட்சி உருவாக்குங்கள். தேவை என்றால் தாமரை மொட்டுடன் இணைந்து கொள்ளுங்கள். அவ்வாறு செய்யாமல் இந்த இடத்துக்கு வந்து நாமே ஐக்கிய தேசியக் கட்சி என்று கூறி எம்மைப் பட பாதிப்படையச் செய்ய வேண்டாம். அது செய்நன்றி அல்ல என்று ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

ஐ.தே.க. உறுப்புரிமையிலிருந்து 54 பேர் நீக்கப்பட்டமை தொடர்பில் ரம்புக்கனையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கூட்டத்தில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய தேசியக் கட்சியைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளேன். ஒழுக்காற்று விசாரணைகளின் போது கட்சியின் சட்டத்தை மீறியவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும். 54 பிரதேச சபை உறுப்பினர்களை நீக்குவதற்கு எடுக்கப்பட்டுள்ள தீர்மானம் நீண்ட காலம் சிந்தித்து எடுக்கப்பட்டது.

இந்தக் கட்சி பிடிக்கவில்லை என்றால் லலித் அத்துலத்முதலி செய்ததைப் போன்று வேறு கட்சி ஒன்றை உருவாக்கிக் கொண்டு அங்குசென்று தேர்தலில் போட்டியிடுங்கள். என்னால் அதனை நிறுத்த முடியாது. கட்சியிலிருந்து விலகிச் செல்லுங்கள். அதனையே லலித் அத்துலத்முதலி செய்தார். வெளியேறிச் சென்றவர்கள் கட்சி ஒன்றை உருவாக்க வேண்டுமாக இருந்தால், உருவாக்குங்கள். அவ்வாறு செய்யாமல் நாமே ஐக்கிய தேசியக் கட்சி என்று கூறி எம்மை பாதிப்படையச் செய்ய வேண்டாம் என்றார்.

இதேவேளை, இறுதி வாரத்தில் ராஜபக்ஸ - விக்ரமசிங்க" சூழ்ச்சிப் போட்டிக்கு வந்துள்ளமை விளங்குகின்றது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

ஒரு பக்கம் சஜித் பிரேமதாச மீதும் கட்சியின் மீதும் ராஜபக்ஸக்கள் பொய்க் குற்றச்சாட்டுக்களை சுமத்தும் நிலையில், மறுபக்கம் மக்களைப் பயமுறுத்தியாவது ஏதேனும் ஒன்றைச் செய்ய வேண்டும் என்று ரணில் விக்ரமசிங்கவின் குழுவினர் செயற்படுகின்றனர் என்று ரஞ்சித் மத்தும பண்டார குற்றச்சாட்டு முன்வைத்தார்.

தேர்தலுக்கு சில நாள்கள் இருக்கும்போது கட்சியின் அங்கத்துவத்தை தடைசெய்து நீக்குகின்றனர். இந்த நாட்டில் மக்களின் வாக்குகளால் தெரிவுசெய்யப்பட்ட ஒருவரை விவாதித்தே நீக்க வேண்டும். ஐக்கிய தேசியக் கட்சியில் அந்த சிறு தரப்பினரின் பெயர்களைக் கூறுங்கள் என்று செயலாளரிடம் நாம் கேட்கின்றோம். சஜித் பிரேமதாச நீக்கப்பட்டுள்ளாரா? ஏனையவர்கள் நீக்கப்பட்டுள்ளார்களா? அவ்வாறு செய்யவில்லை. எமது பிரதேச சபை உறுப்பினர்களுக்கு பாதுகாப்பு அளிக்க நாம் சகல நடவடிக்கைகளையும் எடுப்போம். 60 பேரின் அங்கத்துவத்தையும் பாதுகாப்போம் என்றார். (த)

# நேரகாலத்துடன் சென்று வாக்குகளை பதிவுசெய்க

## யாழ். தேர்தல் அலுவலகம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 30
தேர்தல் தினத்தன்று வாக்காளர்கள் நேரகாலத்துடன் சென்று தமது வாக்குகளைப் பதிவுசெய்ய வேண்டும் என்று தெரிவித்துள்ளது யாழ்ப்பாணத் தேர்தல் அலுவலகம்.

இது தொடர்பில் யாழ்ப்பாணத் தேர்தல் அலுவலகத்தால் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

கட்டாயமாக முகக்கவசம் அணிந்து செல்லுங்கள், சமூக இடைவெளியைப் பேணுங்கள், ஏற்றுக்கொள்ளப்பட்ட அடையாள அட்டை ஒன்றினைக் கட்டாயமாக எடுத்துச் செல்லுங்கள், வாக்காளர் அட்டையை எடுத்துச் செல்வது வாக்களிப்பினை இலகுவாக்கும், கறுப்பு அல்லது நீல நிற பேனா ஒன்றினை எடுத்துச் செல்லுங்கள், என்றுள்ளது. (ம)

பாராளுமன்றத் தேர்தல் 2020 யாழ் கிளிநொச்சி மாவட்டம்
X 5
உரிமைக்காய் குரல் கொடுப்போம்
இனம்வாழ வழி சமைப்போம்
களம் கண்ட கனவுகள் நனவாக
வளம் கொண்ட தமிழினம் உருவாக

குருசுவாமி சுரேந்திரன்.MBA

## வாக்காளர்...

வேட்பாளரின் ஆதரவாளரின் வீடு ஒட்டுசுட்டானில் அமைந்துள்ளது. அவரது வீட்டில் 5 கிலோ நிறையுள்ள 225 பொதிகள் நேற்றுமுன்தினம் இறக்கப்பட்டுள்ளன. இது தொடர்பான முறைப்பாடு முல்லைத்தீவு மாவட்ட தேர்தல்கள் திணைக்கள முறைப்பாட்டுப் பிரிவுக்கு கிடைக்கப் பெற்றுள்ளது.

துரிதமாகச் செயற்பட்ட தேர்தல் முறைப்பாட்டுப் பிரிவினர், சம்பவ இடத்துக்கு நேரில் சென்றனர். அங்கு களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த மாப் பொதிகளை கண்டறிந்தனர். பின்னர் அந்தக் களஞ்சிய அறைக்கு சீல் வைத்துள்ளனர். (ஒ.5)

## சர்வதேச...

சர்வதேசத்துடன் ராஜபக்ச அரசு சவால் விட்டால் நாட்டுக்கு அழிவுதான் பரிசாகக் கிடைக்கும்' இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

'உள்நாட்டுப் பிரச்சினையை சர்வதேசமயப்படுத்துவதற்கு ஒருபோதும் இடமளிக்கமாட்டோம். சர்வதேச தலையீட்டுடன் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்குத் தயாரில்லை' என்று பொதுமக்கள் முன்னணியின் தலைவரான பிரதமர் மஹிந்த ராஜபக்ச தேர்தல் பரப்புரைகளில் தெரிவித்து வருகின்ற நிலையில், ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு பதிலளித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'எமது நல்லாட்சியில் சர்வதேசம் இலங்கைக்கு எவ்வித அழுத்தங்களையும் வழங்கவில்லை. ஏனெனில் சர்வதேசத்துடன் நாம் ஒன்றித்துப் பயணித்தோம். அதேவேளை, உள்நாட்டுப் பிரச்சினைகளில் ஒரு பகுதிக்குத் தீர்வுகளைக் கண்டோம். ஏனையவற்றுக்குத் தீர்வுகளைக் காண்பதற்காகப் பேச்சுக்களை முன்னெடுத்திருந்தோம்.

ஆனால், கடந்த ஜனாதிபதித் தேர்தலுடன் ஆட்சி மாற்றமும் நிகழ்ந்தது. அதன் பின்னர் உள்நாட்டுப் பிரச்சினைகள் தலைவிரித்தாடுகின்றன. சர்வதேச சமூகத்தின் கடுமையான அழுத்தங்களும் இலங்கைக்கு எதிராக வந்துகொண்டிருக்கின்றன.

எமது நாட்டு ஜனாதிபதியும் பிரதமரும் சர்வதேசத்துக்குப் பகிரங்கமாக சவால்களை விடுத்து வருகின்றார்கள். சர்வதேசத்தைப் பகைத்துக்கொண்டு நாம் எதனையும் செய்ய முடியாது. உள்நாட்டுப் பிரச்சினைகளைத் தீர்க்காவிட்டால் இறுதியில் சர்வதேசம்தான் தலையிடும். அது உலக நியதி.

சர்வதேசத்துடன் ராஜபக்ச அரசு சவால் விட்டால் நாட்டுக்கு அழிவுதான் பரிசாகக் கிடைக்கும். இதை அவர்கள் தெரிந்துகொண்டும் வாக்குகளுக்காகச் சர்வதேசத்துடன் முட்டி மோதுகின்றார்கள். ராஜபக்சக்களின் இந்த ஆட்சி தொடர்ந்தால் நாட்டுக்குத்தான் அழிவு. எனவே, ஆட்சி மாற்றம் வேண்டும். மீண்டும் எமது நல்லாட்சி வேண்டும். பொதுத்தேர்தலில் அதற்கான ஆணையை நாட்டு மக்கள் தருவார்கள் என்றே நம்புகின்றோம்' என்றார். (ம-22)

## சுழற்சி...

மற்றும் 5 புதன்கிழமை தரம் 3 மற்றும் 5, வியாழக்கிழமை தரம் 4 மற்றும் 5, வெள்ளிக்கிழமை தரம் 4 மற்றும் 5.

200 மாணவர்களுக்கும் அதிகமான மாணவர்கள் கற்கும் மற்றைய பாடசாலைகளில் திங்கட்கிழமை தரம் 6, 10, 11, 12, 13, செவ்வாய்க்கிழமை தரம் 7, 10, 11, 12, 13, புதன்கிழமை தரம் 8, 10, 11, 12, 13, வியாழக்கிழமை தரம் 9, 10, 11, 12, 13, வெள்ளிக்கிழமை தரம் 9, 10, 11, 12, 13 என்ற அடிப்படையில் பாடசாலைக்கு அழைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

200 மாணவர்களுக்கும் குறைவான பாடசாலைகளில் சமூக இடைவெளிகளைப் பேண முடியுமாக இருந்தால் அனைத்து வகுப்புகளையும் 10ஆம் திகதி முதல் ஆரம்பிக்க முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நடைமுறை ஒக்டோபர் 9ஆம் திகதி வரைநடைமுறையில் இருக்கும். (ம)

## கந்தகாட்டில்...

கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் குறித்த சிறைச்சாலைகளிலுள்ள கைதிகளை பார்வையிடுவதற்காக கடந்த மார்ச் முதல் ஜூலை மாதம் வரை வருகைதந்த அவர்களின் உறவினர்களும் தனிமைப்படுத்தப்பட்டனர்.

இந்த சம்பவம் இலங்கை முழுவதிலும் உள்ள மக்களிடத்தில் பெரும் அச்சத்தை ஏற்படுத்தி இருந்தது. இந்த நிலையிலேயே கந்தகாடு நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளதாக இராணுவ ஊடக பேச்சாளர் பிரிகேடியர் சந்தன விக்ரமசிங்க தெரிவித்துள்ளார். (ம)

## இராணுவ...

வியலாளர்களை இலக்குவைத்து மேற்கொள்ளப்படுகின்ற கைது, தடுத்து வைப்பு, அச்சுறுத்தல்கள் என்பவற்றை இலங்கை அரசு உடனடியாக நிறுத்த வேண்டும் என்றும் அந்த அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இலங்கையில் இந்த மோசமான அச்சநிலை கடந்த 2019ஆம் ஆண்டு நவம்பர் ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் ஆரம்பமானதுடன், நடைபெறவுள்ள பொதுத்தேர்தல் பரப்புரைகளிலும் அதனை உணரமுடிகின்றது என்றும் அந்த அமைப்புக்கள் குறிப்பிட்டுள்ளன.

சர்வதேச மன்னிப்புச்சபை, மனித உரிமைகள் கண்காணிப்பகம், சர்வதேச யூரர்கள் ஆணைக்குழு, மனித உரிமைகளுக்கான சர்வதேச சேவை, மனித உரிமைகளுக்கான தெற்காசியர்கள் உள்ளடங்கலாக 10 மனித உரிமைகள் அமைப்புக்கள் இணைந்து இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளன.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

'அனைத்து இலங்கை மக்களினதும் மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்கப்பட்டு அவை பாதுகாக்கப்பட வேண்டும். அண்மைக்காலமாக மனித உரிமைகள் பாதுகாப்பில் அடையப்பட்ட சாதக நிலைமைகள் மீண்டும் தலைகீழாவதைத் தடுத்து நிறுத்தவேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபை, இலங்கையின் நட்புறவு நாடுகள், உதவியளிக்கும் சர்வதேச அமைப்புக்கள் என்பன ஒன்றிணைந்து வலியுறுத்த வேண்டும்.

தற்போதைய அரசில் குறிப்பிடத்தக்களவான சிவில் அமைப்புக்கள் பாதுகாப்பு அமைச்சின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன. முன்னர் சிவில் உத்தியோகத்தர்களால் நிர்வகிக்கப்பட்ட சில அரச கட்டமைப்புக்களுக்குத் தற்போது ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிகள் பொறுப்பாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

அதேபோன்று அண்மையில் விசேட ஜனாதிபதி செயலணிகள் உருவாக்கப்பட்டதுடன், எந்தவொரு அரச அதிகாரிக்கும் பணிப்புரை விடுக்கின்ற அதிகாரம் அவற்றுக்கு வழங்கப்பட்டுள்ளது. இவை நாடு இராணுவமயமாக்கலை நோக்கிப் பயணிக்கும் புதிய போக்கு குறித்து எச்சரிக்கை விடுக்கும் வகையில் அமைந்திருக்கின்றன.

அதுமாத்திரமன்றி கடந்த 2009ஆம் ஆண்டு முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட போரின்போது இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்களுடன் தொடர்புபட்டதாகக் குற்றஞ்சாட்டப்படும் தற்போதைய ஜனாதிபதி, பாதுகாப்புச் செயலர், இராணுவத் தளபதி உள்ளடங்கலாகப் பலர் அரசில் அங்கம் வகிக்கின்றனர்.


இந்தநிலையில் அதிருப்தியாளர்கள் மற்றும் சட்டத்தரணிகள், ஊடகவியலாளர்கள், மனித உரிமை ஆர்வலர்கள், முன்னர் இடம்பெற்ற வன்முறைகளால் பாதிக்கப்பட்டவர்கள் உள்ளடங்கலாகத் தற்போதைய அரசின் விமர்சகர்கள் பொலிஸார், புலனாய்வுப்பிரிவு, அரச சார்பு ஊடகங்கள் என்பவற்றால் இலக்குவைக்கப்படுகின்றார்கள்.

இம்மாதம் 6ஆம் திகதி நடைபெற்ற பொதுத்தேர்தல் பரப்புரைக் கூட்டமொன்றில் உரையாற்றிய பிரதமர் மஹிந்த ராஜபக்ச, பொதுத்தேர்தலின் பின்னர் ஸ்தாபிக்கப்படும் புதிய அரசில் அரச சார்பற்ற அமைப்புக்களின் மீது விசேட அவதானம் செலுத்தப்படும் என்றும், குறிப்பாக அவற்றுக்கு வெளிநாடுகளிலிருந்து எவ்வாறு நிதியுதவிகள் கிடைக்கப் பெறுகின்றன என்பது பற்றி ஆராயப்படும் என்றும், அதேவேளை சர்வதேச அமைப்புக்களின் செயற்பாடுகளும் கண்காணிக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, அண்மைக்காலங்களில் சட்டத்தரணி குமாரவடிவேல் குருபரன், ஹிஜாஸ் ஹிஸ்புல்லா, அச்சலா செனெவிரத்ன, சுவஸ்திகா அருலிங்கம், ஊடகவியலாளர் தரிஷா பாஸ்டியன், சமூகவலைத்தள செயற்பாட்டாளர் ரம்ஸி ரஸீக் ஆகியோர் இலக்குவைக்கப்பட்டு அவர்களது தொழிலுக்கு இடையூறு ஏற்படுத்தப்பட்டதுடன் அச்சுறுத்தப்பட்டும் உள்ளனர்.

ஒரு ஊடகவியலாளர் அல்லது மனித உரிமைஆர்வலர்மீதுநிகழ்த்தப்படுகின்ற தாக்குதல் என்பது தனிநபரொருவர் மீதான தாக்குதல் மாத்திரமல்ல. மாறாக அனைத்து இலங்கையர்களாலும் ஒன்றிணைந்து பாதுகாக்கப்பட வேண்டிய சட்டத்தின் ஆட்சி மற்றும் மனித உரிமைகள் என்பவற்றின் மீதும் நிகழ்த்தப்படுகின்ற தாக்குதலாகும்.

எனவே, சட்டத்தரணிகள், மனித உரிமை ஆர்வலர்கள், ஊடகவியலாளர்கள் மீதான அச்சுறுத்தல்கள், துஷ்பிரயோகங்கள், சட்ட நடவடிக்கைகளில் முறைகேடு, பொலிஸாரின் அதிகாரத்தைப் பிரயோகித்தல் ஆகியவற்றை உடனடியாக இலங்கை அரசு நிறுத்தவேண்டும். ரம்ஸி ரஸீக்கும், ஹிஜாஸ் ஹிஸ்புல்லாவும் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும். அரசு தொடர்ந்தும் இவ்வாறு செயற்படும் பட்சத்தில் ஐக்கிய நாடுகள் சபை உள்ளிட்ட சர்வதேச அமைப்புக்கள் மனித உரிமைகளை நிலைநாட்டுமாறு இலங்கையை வலியுறுத்துவது அவசியமாகும்' என்றுள்ளது. (ம-22)



# கந்தகாடு ஆலோசகருக்கு கொரோனா!

கொழும்பு, ஜூலை 30

கந்தகாடு புனர்வாழ்வு நிலையத்தின் ஆலோசகராக செயற்பட்டவருக்கு இரண்டாவது முறையாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் அவருக்கு கொரோனா தொற்றியமை உறுதியாகியுள்ளது.

அதற்கமைய அந்த அதிகாரியுடன் பழகியவர்கள் என ஹிங்குரான முவன்கொல பகுதியில் பலரை தனிமைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று சுகாதார வைத்திய அதிகாரி பிரசாத் விஜேலத் தெரிவித்துள்ளார்.

அந்த நபர்களுக்கு இன்றைய தினம் பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுவதாக குறிப்பிடப்படுகின்றது. எப்படியிருப்பினும் அந்த பிரதேசத்தில் இதுவரையில் கொரோனா அறிகுறிகளுடன் ஒருவரும் அடையாளம் காணப்படாமையினால் அந்த பிரதேசத்தை தனிமைப்படுத்த தீர்மானமில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)



## நல்லாட்சி...

லைக் கட்டுப்படுத்துவதற்காக ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ தலைமையில் விசேட ஜனாதிபதி செயலணி மற்றும் சுகாதார அமைச்சு வெற்றிகரமான செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளது.

நாம் பேசிக் கொண்டிருக்கும் இந்தச் சந்தர்ப்பத்திலும் விமானம் மூலம் நாட்டுக்கு வருகை தரும் ஒரு சிலருக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டிருக்கும். இதனால் நாட்டில் மீண்டும் நோயாளர்கள் இனங்காணப்படக் கூடும். எனினும், அவற்றுக்கு எதிராக வெற்றிகரமாகச் செயற்பட முடியும் என்பதை நாம் நிரூபித்திருக்கின்றோம்.

கொரோனா வைரஸ் தொற்று நாட்டில் ஏற்பட்டபோது நல்லாட்சி அரசின் செயற்பாடுகளால் பொருளாதாரம் முழுமையாக வீழ்ச்சியடைந்திருந்தது. 2015ஆம் ஆண்டில் நல்லாட்சி அரசு ஆட்சியைக் கைப்பற்றியபோது சாதாரணமாகக் காணப்பட்ட பொருளாதார வளர்ச்சி வேகம் 2019ஆம் ஆண்டாகும்போது மூன்றுமடங்காகக்குறைவடைந்திருந்தது. நாட்டின் முழுக் கடன் சுமை 74 சதவீதமாகக் காணப்பட்டது. நல்லாட்சி அரசு நான்கரை வருடங்களுக்குள் இலங்கையில் அபிவிருத்தி பிணைகள் உள்ளிட்டவற்றுக்காக மாத்திரம் 18 பில்லியன் அமெரிக்க டொலருக்கும் அதிகமான வெளிநாட்டுக் கடனைப் பெற்றிருந்தது. ரூபாவின் பெருமதி 40 வீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தது. இந்தப் பொருளாதார வீழ்ச்சிக்கு எவ்வித சர்வதேச காரணமும் இருக்கவில்லை.

அந்தக் காலத்துக்குள் அமெரிக்கா, ஜேர்மன், இந்தியா, பங்களாதேஷ் வேகமாக முன்னோக்கிச் சென்றன. இலங்கை மாத்திரமே பொருளாதார ரீதியில் பின்னடைவைச் சந்தித்தது. உயிர்த்த ஞாயிறுதினக் குண்டுத் தாக்குதல்களால் பொருளாதாரம் மேலும் வீழ்ச்சியடைந்தது.

கடந்த நவம்பர் மாதம் நாம் அதிகாரத்தைப் பெற்றவுடன் வரிச் சுமையையும் வட்டி விகிதாசாரத்தையும் குறைத்து பொருளாதாரதுக்கு ஊக்கமளிக்க வேண்டியேற்பட்டது. இந்தச் சந்தர்ப்பத்தில்தான் நாட்டில் கொரோனா வைரஸ் பரவல் ஆரம்பித்தது. இதனால் நாம் முகங்கொடுக்க நேர்ந்த சவால் எளிதான விடயமல்ல. நல்லாட்சி அரசால் செய்யப்பட்ட விடயங்களைச் சரி செய்வது இலகுவான காரியமல்ல. அவர்கள் ஆட்சியைக் கைப்பற்றியவுடன் சீன வேலைத்திட்டங்கள் அனைத்தையும் நிறுத்தினர். சீனத் துறைமுக அபிவிருத்தி முதற்கொண்டு அனைத்தும் நிறுத்தப்பட்டன. சீனாவின் முதலீட்டைப் பெற்றுக்கொள்ள பிரிட்டன் உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளும் ஆர்வமாக இருந்த நிலையில் இலங்கை சீன முதலீடுகள் தொடர்பில் இவ்வாறு செயற்பட்ட விதமானது உலகிலுள்ள ஏனைய நாடுகளுக்கும் தவறானதொரு முன்னுதாரணமாக அமைந்தது. அது மாத்திரமின்றி அம்பாந்தோட்டை துறைமுகத்தை மேம்படுத்துவதற்குப் பெற்றுக்கொள்ளப்பட்ட ஆயிரத்து 300 மில்லியன் டொலர்களை மீளச் செலுத்த முடியாமையால் அதனைச் சீனாவுக்கு 200 வருடத்துக்குத் குத்தகைக்கு வழங்கவுள்ளதாக அறிவித்ததால் உலகுக்கு இலங்கை தொடர்பில் தவறானதொரு பிம்பம் ஏற்படுத்தப்பட்டது. அம்பாந்தோட்டை துறைமுகம் அமைக்கப்பட்டது அதற்காக அல்ல. சிலர் தமது பணப்பைகளை இதன்மூலம் நிரப்பிக் கொண்டனர்.

நல்லாட்சி அரசு பயன்பாட்டுக்காக மாத்திரம் பெற்றுக் கொண்ட வணிகக் கடன் ஆயிரத்து 300 மில்லியன் டொலர் என்பது குறைவானதொரு தொகையாகும். 2019ஆம் ஆண்டு மாத்திரம் நல்லாட்சி அரசு 4 ஆயிரத்து 500 மில்லியன் டொலர் கடன் பெற்றுள்ளது. அது எனது அரசில் அம்பாந்தோட்டை துறைமுகத்தின் இரு கட்டங்கள், நுரைச்சோலை அனல் மின் உற்பத்தி நிலையத்தின் 3 கட்டங்கள், கொழும்பு மாத்தறை அதிவேகப் பாதை, கொழும்பு கட்டுநாயக்க அதிவேக பாதை, மத்தள விமான நிலையம், உமா ஓயா வேலைத்திட்டம் உள்ளிட்ட அனைத்து வேலைத்திட்டங்களுக்காகவும் பெற்றுக்கொண்ட கடனை விட அதிகமாகும்.

எனினும், நல்லாட்சி அரசு பெற்றுக் கொண்ட கடனில் எதனையும் செய்யவில்லை. அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவுக்கு வழங்கியமையால், கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை இந்தியாவுக்கு வழங்குவதற்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. அவர்கள் மீண்டும் ஒரு முறை ஆட்சியில் இருந்தார்களாயின் நாட்டில் எதுவுமே மிஞ்சப்போவதில்லை.

அரச உடைமைகள் அல்லது வேறு காணிகள் தொடர்பாக புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடுவதற்கு முன்னர் அவற்றை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பது அவசியமாகும் என்பதை நாம் சட்டமாக்குவோம். எவ்வாறாயினும் தற்போதுள்ளதகுதியானதலைமைகளை இணைத்துக் கொண்டு முன்னோக்கிச் செல்ல வேண்டிய தேவை எமக்குள்ளது.

1977ஆம் ஆண்டில் திறந்த பொருளாதாரத்தைப் பெற்றுக் கொடுத்து 40 வருடங்களின் பின்னர் நாட்டின் புதிய வருமான வழி எனக் கூறி தோற்றம் பெற்றுள்ளது வெளிநாடுகளிலிருந்து கிடைக்கப் பெறுகின்ற நிதி மற்றும் ஆடைத் தொழிற்துறை மாத்திரமேயாகும். இதே முறையில் தொடர்ச்சியாகப் பயணிக்க முடியாது. 2009இல் யுத்தம் நிறைவடைந்ததன் பின்னர் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கான புதிய வழிமுறையை நாம் அறிமுகப்படுத்தினோம். அம்பாந்தோட்டைத் துறைமுகம், கொழும்புத் துறைமுக நகரம், மத்தள விமான நிலையம் என்பன அமைக்கப்பட்டன. இவை அனைத்தையும் ஒன்றுடன் ஒன்று தொடர்புபடுத்தும் வகையில் பெருந்தெருக்களை அமைத்து நாட்டை சர்வதேச சந்தை மத்திய நிலையமாக உருவாக்கத் தீர்மானித்தோம்.

கொரோனா வைரஸ் தொற்றால் இலங்கை மாத்திரமின்றி முழு உலகமும் பொருளாதாரத்தில் வீழ்ச்சி கண்டது. குறுகிய காலத்தில் நாம் முகங்கொடுத்துள்ள சவால் இதுவாகும். நாம் இதற்கு முன்னரும் இதுபோன்ற சவாலுக்கு முகங்கொடுத்துள்ளோம்.

நான் ஜனாதிபதியானதன் பின்னர் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்புடன் போர் ஆரம்பமானது. 2008இல் 1930களைப் போன்ற பொருளாதார சிக்கல் ஏற்பட்டது. இதே சந்தர்ப்பத்தில் எப்போதும் இல்லாதவாறு உலக சந்தையில் எரிபொருள் விலை பெருமளவில் அதிகரித்தது. ஒரு சந்தர்ப்பத்தில் எரிபொருள் தாங்கியொன்றின் விலை 140 அமெரிக்க டொலராக வளர்ச்சியடைந்தது.

இவ்வாறான பல சவால்களுக்கு மத்தியில் நாம் போரையும் வெற்றி கொண்டோம். 2006, 2014 காலப்பகுதியில் நாட்டில் தனிநபர் வருமானம் அமெரிக்க டொலர் அடிப்படையில் மூன்று மடங்காக அதிகரித்தது. அதனை முற்றாக வீழ்ச்சியடையச் செய்தவர்கள் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்ற முற்படுகின்றனர். கொரோனாத் தொற்றுக் காலப்பகுதியில் நல்லாட்சி அரசு ஆடசியில் இருந்திருந்தால் என்னவாகியிருக்கும் என்பதையும் அனைத்து பிரஜைகளும் அறிவார்கள்.

கொரோனா காரணமாக முழு உலகமும் பொருளாதாரத்தில் பின்னடைவைக் கண்டுள்ள இந்த நிலையில் நாம் போர்க்காலத்தில் காணப்பட்டதைப் போன்ற பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ளோம். 2019இல் ஜனாதிபதியாக கோத்தாபய ராஜபக்ச தெரிவு செய்யப்பட்டிருக்காவிட்டால்நாடுபெரும் நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்திருக்கும். எதிர்காலத்தில் தோன்றும் சவால்களை வெற்றிகொள்ள கோத்தாபய ராஜபக்ச அரசை மேலும் பலப்படுத்துவதற்கு அனைத்துப் பிரஜைகளும் தமது வாக்குகளை உபயோகிக்க வேண்டும்.

ஜனாதிபதியுடன் இணைந்து செயற்படக் கூடியவர்களுக்கு மக்கள் வாக்களிக்க வேண்டும்' என்றார். (ம-22)






## உதயன்...

யாழ். ஊடக அமையத்தில் நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இந்த அதிர்ச்சித் தகவல்களை அவர் வெளியிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது: சுமார் 16 ஆண்டுகளாக நான் ஈ.பி.டி.பி அமைப்பில் இருந்தேன். ஈ.பி.டி.பியினர் ஆரம்பத்தில் இருந்து செய்த அனைத்துமே எனக்குத் தெரியும். அவர்கள் கொலை செய்தது, பணம் கப்பம் பெற்றது அனைத்தும் தெரியும். நான் ஈ.பி.டி.பி. கட்சியில் இருக்கவில்லை, ரெலோவிலேயே இருந்தேன் என அவர்கள் அறிக்கை விட்டிருந்தார்களாம். ஆனால் என்னிடம் ஈ.பி.டி.பி உறுப்பினர்களுக்கான அடையாள அட்டை, ஈ.பி.டி.பியால் வழங்கப்பட்ட ஆவணங்கள் இருக்கின்றன. பலாலியில், பாதுகாப்பு அமைச்சிலும் எனது பெயர் இருக்கின்றது. ஈ.பி.டி.பியினரிடம் இன்னமும் ஆயுதங்கள் இருக்கின்றன. என்னால் அவை எங்குள்ளன என்பதைக் கூற முடியும். ஈ.பி.டி.பியினர் யாரைக் கொலை செய்தனர், யாரையெல்லாம் கடத்தினர் என்பதும் எனக்குத் தெரியும். எனக்குத் தெரிந்தவற்றை நான் முறையிட்டிருந்திருக்கின்றேன். ஆனால் அது தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

உதயன் தாக்குதல் சம்பவம் நடந்த காலத்திலும் நான் ஈ.பி.டி.பியின் சிறிதர் தியேட்டர் அலுவலகத்திலேயே இருந்தேன். அப்போதுமாலை 6மணிமுதல் ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் இருந்தது. ஈ.பி.டி.பியின் அலெக்ஸாண்டார் சார்ள்ஸ் தலைமையிலான குழுவே உதயனுக்குள் புகுந்து அங்கிருந்தவர்களைச் சுட்டுக் கொன்றது. அங்கு வெறியாட்டம் போட்டு விட்டு , ஆயுதங்களோடு அவர்கள் சிறிதர் தியேட்டருக்கு ஓடி வந்தனர். ஆனால் அவர்கள் இரகசியமாகவே சென்றதால், காவலுக்கு நின்ற படையினர், புலிகளே வருவதாக நினைத்து , துப்பாக்கி வேட்டுக்களை தீர்த்தனர். அதில் இருவருக்கு காயமேற்பட்டது. அவர்களை ஏற்றுவதற்காக வாகனம் தேவை என என்னிடம் கேட்டார்கள்.

அந்தச் சமயத்தில் ஈ.பி.டி.பியின் வாகனங்கள் எனது பொறுப்பிலேயே இருந்தன. நான் என்ன பிரச்சினை என்று கேட்டேன். அவர் சொல்லவில்லை. நான் வாகனம் தர முடியாது என்று தெரிவித்துவிட்டேன். உதயன் தாக்குதலுடன் தொடர்புடைய இருவர் இப்போது உயிரோடு இல்லை. ஒருவர் இருக்கின்றார். அவ்ரின் பெயரை இப்போது குறிப்பிட நான் விரும்பவில்லை. உதயன் பத்திரிகை நிறுவனத்துக்கும் தாக்குதல் நடத்தியவர்களை நன்கு தெரியும்.

இது தவிரவும் இன்னும் பலரையும் ஈ.பி.டி.பி கொலை செய்தது. அவர்களின் பெயர், விபரங்கள் ஆதாரங்கள் எல்லாம் என்னிடம் உள்ளன.

1990ஆம் ஆண்டு காலப் பகுதியில் பிரேமதாச ஜனாதிபதியாக இருந்த காலத்தில் எமக்கு இராணுவச் சம்பளம் வழங்கப்படும் என்று கூறப்பட்டது. ஆனால் எமக்கு அவ்வாறு வழங்கப்படவில்லை. அந்தக் காலப் பகுதியில் எமக்கு வழங்கப்பட்ட சம்பளம் மாதத்துக்கு 50 ரூபா மட்டுமே. பின்னர் எமக்குக் குடும்பச் செலவு என்று தெரிவித்து ஆயிரத்து 500 ரூபா, இரண்டாயிரம் ரூபா என்று வழங்கப்பட்டது.

ஈ.பி.டி.பியினரை ஊர்காவற்றுறையில் கள்ள வாக்கிட்டே நாடாளுமன்றத்துக்கு அனுப்பினோம். நானே 100 வாக்குகளுக்கு மேல் போட்டிருந்தேன். அவர்கள் இப்போது கோடீஸ்வரர்களாக இருக்கின்றனர், ஆனால் நாம் இன்னமும் பிச்சை எடுப்பவர்களாகவே இருக்கின்றோம்.

நான் எனக்கு வழங்கப்பட வேண்டிய சம்பள நிலுவைகளை வழங்க வேண்டும் என்று பல தரப்பினரிடம் முறையிட்டிருந்தேன். ஆனால் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. இது தொடர்பாக பொலிஸ் தலைமையகத்தில் 11 முறைப்பாடுகளைச் செய்திருந்தேன். அவற்றுக்கும் உரிய நடவடிக்கைகள் இல்லை - என்றார்.

## பிரதேச...

தேசிய கூட்டமைப்பு தயாராகி வருகிறது என்று தெரியவருகின்றது.

யாழ்ப்பாணம் மாவட்டத்திலுள்ள பிரதேச செயலாளர் ஒருவரே இந்த தேர்தல் விதி மீறலில்ஈடுபட்டார்என்றுகுற்றஞ்சாட்டப்படுகின்றது. மாவட்ட நிர்வாகத்தில் மட்டுமல்லாமல், சில பிரதேச செயலக மட்டங்களிலும் விதி மீறல்கள் நடந்து வருகின்றன. இதன்படி, பிரதேச செயலாளர் ஒருவர், தபால் மூல வாக்களிப்பில் அரச கட்சி வேட்பாளருக்கு வாக்களிக்கும்படி, பிரதேச செயலக உத்தியோகத்தர்களிற்கு அழுத்தம் கொடுத்துள்ளார். இது குறித்து பல உத்தியோகத்தர்களின் தகவலின் பேரில், பிரதேச செயலாளர் மீது தமிழ் தேசியக் கூட்டமைப்பு, தேர்தல்கள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்ய தயாராகி வருகிறது. ஓரிரு நாளில் முறைப்பாடு பதிவாகுமெனத் தெரிகிறது. (ம)

# வணிக மயமான இந்திய கிரிக்கெட்

## ரெய்னா வருத்தம்

**புதுடில்லி, ஜூலை 30**

**கடந்த 2 ஆண்டுகளாக மகிழ்ச்சியுடன் கிரிக்கெட்டைத் தான் ஆடவில்லை என்று கூறும் சுரேஷ் ரெய்னா கிரிக்கெட் மிகவும் வணிக மயமாகி விட்டது என்றும் தெரிவித்துள்ளார்.**



இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

கிரிக்கெட்டை நான் மகிழ்வுடன் ஆடும் வரை இந்திய அணியில் ஒரு வாய்ப்பு கிடைக்கும் என்ற ஆவலுடனேயே ஆடுவேன். ஒவ்வொரு உடல் அறுவை சிகிச்சை செய்து கொண்ட பின்னும் வித்தியாசமான மனிதனாகி விட்டதாகக் கருதுவேன். ஒவ்வொரு மறு வாழ்வுக்குப் பிறகு கடினமாக மாறினேன். இதன் பிறகு மீண்டும் ஆடுவேன் என்றுதான் நினைப்பேன்.

ஆனால் அதற்காக என்னை உந்தித் தள்ள விரும்பவில்லை. மீண்டும் விளையாடுவோம் என்ற உணர்வு இருக்கிறது. ஆனால் என் கிரிக்கெட் ஆட்டத்தை நான் மகிழ்வுடன் ஆடவேண்டும். கடந்த 2 ஆண்டுகள் நான் கிரிக்கெட்டை அவ்வளவு மகிழ்ச்சியுடன் ஆடவில்லை, அடுத்த 34 ஆண்டுகள் நான் ஆடுவேனா மாட்டேனா என்பதை விதியிடம் விட்டு விடுகிறேன்.

புன்னகையுடன் களமிறங்கி ஆட்டத்தை ரசித்து ஆட வேண்டும் என்பதே இப்போதைய விருப்பம். கிரிக்கெட் மிகவும் வணிக மயமாகி விட்டது. ஆனாலும் கடைசியில் இறங்கி ஆடி திரும்பி வரும் போது மகிழ்ச்சியுடன் வர வேண்டும் என்பதே. இதைத் தான் நான் களமிறங்கி திரும்பும் போதெல்லாம் தேடுவேன். எப்போதும் மகிழுடன் இருக்க விரும்புகிறேன். இன்னும் ஒருமுறை முயற்சி செய்து பார்க்கிறேன், எப்படி போகிறது என்று பார்ப்போம். என்றார். (எ)

## அயர்லாந்து தொடருக்கான இங்கிலாந்து அணி அறிவிப்பு



லண்டன், ஜூலை 30

அயர்லாந்து அணிக்கெதிரான ஒருநாள் தொடரில் விளையாடும் இங்கிலாந்து அணி விவரம் அறிவிக்கப்பட்டுள்ளது. அந்த அணியில் மேற்கிந்திய தீவுகள் அணிக்கெதிரான டெஸ்ட் தொடரில் விளையாடிவரும் முக்கிய வீரர்களுக்கு ஓய்வளிக்கப்பட்டுள்ளது.

ஜோ ரூட்; பென் ஸ்டோக்ஸ், ஜோஸ் பட்லர், வேகப்பந்து வீச்சாளர்கள் ஜோப்ரா ஆர்ச்சர், கிறிஸ் வோக்ஸ் ஆகியோருக்கு ஓய்வு அளிக்கப்பட்டுள்ளது. மூன்றாவது டெஸ்ட் போட்டியிலிருந்து நீக்கப்பட்ட, ஜோ டென்லி அணியில் இடம்பிடித்துள்ளார். இயன் மோர்கன் தலைமையிலான அணியில், மொயீன் அலி, ஜோனி பேயர்ஸ்டொவ், டொம் பான்டன், சேம் பில்லிங்ஸ், டொம் கர்ரன், லியாம் டாவ்சன், ஜோ டென்லி, சாஹிப் மக்மூத், அடில் ரஷித், ஜேசன் ரோய், ரீசி டாப்லி, ஜேம்ஸ் வின்ஸ், டேவிட் வில்லி ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

இரு அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரின் முதல் ஆட்டம் இன்று 30ஆம் திகதி சவுதம்டனில் நடைபெறவுள்ளது. இரண்டாவது ஒருநாள் ஆட்டம் நாளை ஒகஸ்ட் முதலாம் திகதியும், மூன்றாவது ஒருநாள் ஆட்டம் 4ஆம் திகதியும் சவுதம்டனில் நடைபெறவுள்ளன. (எ)

## அசைக்க முடியாத விராட் கோலி



லண்டன், ஜூலை 30

சர்வதேச கிரிக்கெட் சபையின் வெளியிட்ட ஒருநாள் தரவரிசைக்கான பட்டியலில் இந்திய அணித் தலைவர் விரோட் கோலி 871 புள்ளிகளுடன் முதலிடத்தில் நீடிக்கிறார். 2ஆவது இடத்தில் ரோஹித் சர்மா 855 புள்ளிகளுடன் உள்ளார்.

மூன்றாவது இடத்தில் பாகிஸ்தான் வீரர் பாபர் ஆஸம் 829 புள்ளிகளுடனும், 4ஆவது இடத்தில் 818 புள்ளிகளுடன் நியூஸி வீரர் ராஸ் டெய்லரும், 5ஆவது இடத்தில் தென்னாபிரிக்க வீரர் டூப்பிளசிஸ் 790 புள்ளிகளுடனும் உள்ளனர்.

6 முதல் 10ஆம் இடங்களில் முறையே ஆஸியின் டேவிட் வோர்னர் (789புள்ளிகள்), 7ஆவதுஇடத்தில் ஜோ ரூட் (770), 8ஆவது இடத்தில் ஆரோன் பிஞ்ச் (767), கேன் வில்லியம்ஸன் (765), டீ காக்(755) ஆகியோர் உள்ளனர்.

பந்துவீச்சாளர்களைப் பொறுத்தவரை முதலிடத்தில் நியூஸிலாந்து வீரர் டிரனட் போல்ட் 722 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளார். 2ஆவது இடத்தில் இந்திய வீரர் பும் 719 புள்ளிகளுடன் உள்ளார். 3ஆவது இடத்தில் ஆப்கானிஸ்தான் வீரர் முஜிபுர் ரஹ்மான் (701), 4ஆவது இடத்தில் பாட் கம்மின்ஸ் (689), 5ஆவது இடத்தில் ரபாடா (665) உள்ளனர். 6 முதல் 10 இடங்களில் முறையே, கிறிஸ் வோக்ஸ், முகமது அமிர், மாட் ஹென்றி, ரஷித் கான், பெர்குசன் உள்ளனர்.

ஐசிசி உலகக் கிண்ண சூப்பர் லீக் ஆட்டம் இன்று அயர்லாந்து மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கு இடையே தொடங்குகிறது. இந்த தொடரில் இங்கிலாந்து வீரர்கள் ஜேஸன் ராய், விக்கெட் கீப்பர் ஜானி பேர்ஸ்டோ சிறப்பாகச் செயல்பட்டால் முதல் 10 இடங்களுக்குள் இடம் பிடிக்க வாய்ப்புள்ளது. தற்போது பேர்ஸ்டோ தரவரிசையில் 14ஆவது இடத்திலும், ராய் 11ஆவது இடத்திலும் உள்ளனர். இருவரும் சதம் அடித்தால், அல்லது அரைச் சதம் அடித்தால் சிறப்பான தரவரிசையைப் பெறமுடியும். (எ)

## இங்கிலாந்து அபாரம் சுருண்டது மே.தீவுகள்

லண்டன், ஜூலை 30

மேற்கிந்திய தீவுகள் அணிக்கெதிரான மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் ஆட்டத்தில், இங்கிலாந்து அணி 269 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றது. மூன்று ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரை 2-1 என்ற கணக்கில் இங்கிலாந்து அணி கைப்பற்றியது.

கடந்த 24ஆம் திகதி மன்செஸ்டர் ஓல்ட் ட்ரப்போர்ட் மைதானத்தில் ஆரம்பமான இந்தப் போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்திய தீவுகள் அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது. முதலில் துடுப்பெடுத்தாட களமிறங்கிய இங்கிலாந்து அணி, முதல் இன்னிங்ஸிற்காக 369 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

அதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, ஒல்லி போப் 91 ஓட்டங்களையும், ஜோஸ் பட்லர் 67 ஓட்டங்களையும், ஸ்டுவர்ட் பிரோட் 62 ஓட்டங்களையும், றொறி பர்ன்ஸ் 57 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

மேற்கிந்திய தீவுகள் அணியின் பந்துவீச்சில், கெமார் ரோச் 4 இலக்குகளையும், கெப்ரியல் மற்றும் றொஸ்டன் சேஸ் ஆகியோர் தலா 2 இலக்குகளையும், ஜேஸன் ஹோல்டர் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு முதல் இன்னிங்ஸை தொடங்கிய மேற்கிந்திய தீவுகள் அணி 197 ஓட்டங்களுக்குள் சுருண்டது. அந்த அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, ஜேஸன் ஹோல்டர் 46 ஓட்டங்களையும், டவ்ரிச் 37 ஓட்டங்களையும், ஜோன் கெம்பல் 32 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

172 ஓட்டங்கள் முன்னிலையில் தனது இரண்டாவது இன்னிங்ஸை தொடங்கிய இங்கிலாந்து அணி, 2 இலக்குகள் இழப்புக்கு 226 ஓட்டங்களை பெற்றிருந்தபோது, தனது இரண்டாவது இன்னிங்ஸ் ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது. மேற்கிந்திய தீவுகள் அணிக்கு 399 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

இங்கிலாந்து அணி சார்பில், றொறி பர்ன்ஸ் 90 ஓட்டங்களையும், டோமினிக் சிப்ளி 56 ஓட்டங்களையும், ஜோ ரூட் 68 ஓட்டங்களையும் பெற்றனர். மேற்கிந்திய தீவுகள் அணியின் சார்பில், ஜேஸன் ஹோல்டர் மற்றும் றொஸ்டன் சேஸ் ஆகியோர் தலா ஓர் இலக்கை வீழ்த்தினர்.

399 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய மேற்கிந்திய தீவுகள் அணி, வெறும் 129 ஓட்டங்களுக்குச் சுருண்டது. இங்கிலாந்து அணி 269 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றது. (எ)

**பெண்கள் வேலைக்கு தேவை**
யாழ். நகரில் இயங்கும் புகைப்படக் கலையகம் ஒன்றிற்கு அப்ப வேலை செய்வதற்கு பெண்கள் தேவை.
(முன் அனுபவம் தேவையில்லை)
தொடர்பு:- 077 755 0008

**காணி விற்பனைக்கு**
ஈச்சமோட்டை வீதி
இல 52/33 என்னுமிடத்தைச்சேர்ந்த
ஏறத்தாழ ஒரு பரப்புக் காணி
உடன் விற்பனைக்கு
076 675 7518

**Techno World**
தொழில்நுட்பக் கல்லூரி
தொழில்நுட்பப் பிரிவு A/L
* பொறியியல் தொழில்நுட்பம்
* உயிர் முறைமைகள் தொழில்நுட்பம்
2022 DAY CLASS
சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு
ஆரம்பம்:- 01.08.2020
077 017 5346